# கேப்டன் குமார்

நீலமணி



காயத்ரி பப்ளிகேஷன்

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# காப்டன் குமார்

(செல்வந்தர் வீட்டுப் பிள்ளையாகப் பிறந்து—தந்தை, சொத்து அனைத்தையும் அன்னிய மண்ணில் இழந்து—அகதியாக இந்தியாவுக்குப் புறப்பட்டு வந்த அனாதைச் சிறுவனின் வீர சாகசங்கள் நிறைந்த நாவல்.)

நீலமணி

காயத்ரி பப்ளிகேஷன்
26-பி, வேதாசல கார்டன்ஸ்,
மந்தைவெளி, சென்னை-600 028.

○ பாரதி தின வெளியீடு.
முதற் பதிப்பு : டிசம்பர் 11, 1984.

# கேப்டன் குமார்

(சிறுவர் நாவல்)

## BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the book | : | CAPTAIN KUMAR |
| Subject | : | Children Novel |
| Author | : | NEELAMONEY |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Date of Publication | : | December 11, 1984 |
| Copyright Holder | : | Thirumathi JANAKI NEELAMANI |
| Paper used | : | 10. 9 Kg. D/cr. Nizam White printing |
| Size of the book | : | 18 × 12.5 cm |
| Printing Point used | : | 12 Point |
| No. of pages | : | 128 pages |
| Printer | : | Vetri Achagam, Madras-14 |
| Publisher (with full address) | : | GAYATHRI PUBLICATION 26B, Vedachala gardens Mandaveli, Madras-28. |

Price Rs. 10 - 00

Our greatful thanks to M.S.A. cell of Bank of Baroda T. Nagar, Madras for their help in bringing out this children Novel.

—NEELAMONEY

## உங்களுடன் ஒரு நிமிஷம்!

அன்பார்ந்த குழந்தைகளே; வணக்கம்!

இந்தக் கதையை நீங்கள் படிக்கத் துவங்கு முன் உங்களுடன் ஒரு நிமிஷம் பேச விரும்புகிறேன் :

சென்னையிலுள்ள ராஜாஜி கடற்கரைச் சாலையை நீங்கள் அறிவீர்கள். இதற்கு, 'முதல் லைன் பீச்' என்பது முன்னையப் பெயர்.

பாரிமுனையிலிருந்து துவங்கி, கடற்கரை ஸ்டேஷன் வரை, அடர்ந்த மரங்களின் நிழலிலே ஓரமாக—வரிசையாக ரயில் வண்டித் தொடர் போல் நீண்டு கொண்டே செல்லும் பெட்டிக் கடைகளையும்; மக்கள் அந்த ஒவ்வொரு சிறிய கடையின் முன்பும் கூட்டம் கூட்டமாய் நின்று தங்களுக்கு வேண்டிய சாமான்களை வாங்கிச் செல்வதையும் பார்த்திருப்பீர்கள்—

புதிதாக உருவான இந்த நீண்ட கடைத் தெருப் பகுதி, ''பர்மா பஜார்'' என்னும் பெயரைத் தாங்கி நிற்கிறது.

சென்னையில் இப்படியொரு புதிய ''பர்மா பஜார்'' தோன்றக் காரணமென்ன? இதற்கு ஏன் ''பர்மா பஜார்'' என்கிற பெயர் வந்தது. அப்படியானால்—இந்தக் கடை வைத்திருப்பவர்கள் எல்லாம் பர்மியர்களா என்றால்—

இல்லை—

இந்தக் கடைகளின் உரிமையாளர்களில் ஒருவர் கூட பர்மியர் இல்லை. அனைவரும் இந்தியர்களே! ஆனால்

இவர்களுக்கும பர்மாவுக்கும் ஒரு காலத்தில் நெருங்கிய தொடர்பு இருந்து வந்தது. இவர்களுக்குப் பின்னணியில் நெஞ்சை உலுக்கும் உண்மையான ஒரு சோகக் கதை உண்டு.

'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு'-என்னும் மூதுரைக் கேற்ப-பிழைப்பைத் தேடி—கடல் கடந்து பர்மாவிற்குச் சென்று—நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த அன்னிய மண்ணிற்கு உழைத்து உழைத்து உருக் குலைந்தவர்கள்—

அன்னிய மண்ணைத் தாங்கள் பிறந்த மண்ணைப் போல் பாவித்து, நேசித்துவந்த இந்தியர்களை; ஒரு நாளைய அன்னிய அரசாங்கத்தின் ஆணை—அடியோடு சூறையாடி விட்டது.

தங்கள் ஊக்கத்தாலும், விடா முயற்சியினாலும் உண்மையான உழைப்பினாலும் அவர்கள் ஈட்டிய செல்வத்தையும் கட்டிய வீடுகளையும் அன்னிய மண்ணிலேயே உதறிவிட்டு—

அடுத்த வேளைக்கு உண்ண உணவோ உடுக்க உடையோ இல்லாத ஆண்டிகளைப்போல—அகதிகளாக அவர்களையெல்லாம் பர்மிய அரசு கப்பலேற்றி இந்தியாவுக்கு விரட்டி அனுப்பி விட்டது.

இப்படி வந்தவர்களுக்கு, நமது அரசு மறுவாழ்வு கொடுத்து—அவர்கள் சொந்தத்தில் தொழில் செய்து வாழ வைக்க தேர்ந்தெடுத்த இடம்தான்-இன்று, பர்மா பஜாராக ஒளி வீசிக் கொண்டிருக்கிறது.

இந்த நாவலிலே வரும் குமார், பர்மாவில் பெரிய செல்வந்தர் வீட்டுப் பிள்ளையாகப் பிறந்தவன். துன்பத்தின் தூசிகூடப் படாமல்—செல்வமாய் வளர்த்து ஆளாக்கப் பட்டவன். திடீரென்று ஒரு நாள் அறிவித்த, பர்மிய அரசின்

புதிய சட்டத்தின் அதிர்ச்சிக்கு ஆளாகி தந்தை இறந்த பின்னர்— தாயற்ற தன் சிறு வயது தங்கையுடன் இந்தியாவுக்கு அகதியாகப் புறப்படுகிறான். வழியில் அவன் தங்கையை இழந்து தவிப்பதையும்— தங்கையை மீண்டும் அடைவதற்காக இடையில் அநுபவித்த எல்லையற்ற துன்பங்களையும் இந்த நாவலில் நீங்கள் படிக்கப் போகிறீர்கள்.

எல்லாச் சிறுவர்களையும்போல—அவனுக்கும் பள்ளி சென்று தொடர்ந்து படிக்க வேண்டும் என்கிற ஆவல் எழுந்தது. ஆனால் அங்கு அவன் பட்டபாடு! அனுபவித்த அவமானம்!

குழந்தைகளே! குமாரைப் போலவும், குழந்தை வசந்தியைப் போலவும் இன்று நம் அண்டை நாடான இலங்கையிலிருந்து ஆயிரக் கணக்கான குழந்தைகளும் பெற்றோர்களும், தங்கள் சொத்து சுகங்களையெல்லாம் சம்பாதித்த மண்ணிலேயே உதறிவிட்டு; வெறுங்கையுடன் நம் நாட்டிற்கு அகதிகளாக வந்து கொண்டிருப்பதை நீங்கள் அறிவீர்கள்.

அந்தக் குழந்தைகள் என்றாவது ஒரு நாள் உங்கள் பள்ளியில்—உங்கள் வகுப்பில்—உங்கள் அருகில் படிப்பதற்காக வந்து உட்காரலாம். அப்போதெல்லாம் அவர்களை ஏழைகள் என்றோ; அன்னியன் என்றோ எண்ணி நீங்கள் கேலி செய்யவோ—கேவலமாகப் பேசி அவர்கள் மனத்தைப் புண்படுத்தவோ செய்யாதீர்கள்.

அவர்கள் புதியவர்களைப்போல் தோன்றினாலும்; அன்னியர்கள் அல்ல. அவர்களும் உங்கள் சோதரரே!

அவர்களுக்காக இரங்குங்கள். உங்களால் முடிந்த உதவியைச் செய்யுங்கள். அவர்களுக்கு உங்களைப்போல் சரியாகத் தமிழ் பேசத் தெரியாமல் கூட இருக்கலாம்.

அதற்காகப் பரிகாசம் செய்யாதீர்கள். வாடிப்போய் வந்திருக்கும் அவர்களது பிஞ்சு உள்ளங்களில் அன்புமழை பொழியுங்கள். கசப்பான அவர்களது இறந்த காலத்தை மறந்து—ஒளிமயமான எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கை அவர்கள் உள்ளத்தில் சுடர்விட வழி செய்யுங்கள்.

அருகிலுள்ள ஏழைச் சகோதரனுக்கு அன்போடு இரங்கும் குணம்படைத்த ஒருவனே—ஆண்டவனுக்கு மிகவும் பிடித்த ஒருவனாக இருக்க முடியும்.

அன்பை விதைத்தால்தான்—அன்பை அறுவடை செய்ய முடியும். ஆகவே மாணவமணிகளாகிய நீங்கள் ஒவ்வொருவரும் இறைவனுக்குப் பிரியமுள்ளவனாக விளங்க இன்று முதல் எவ்வித பேதமுமின்றி—சக மாணவர்களிடம் மட்டுமின்றி அனைவரிடமுமே அன்போடு இருக்க பிரதிக்ஞை எடுத்துக் கொள்ளுங்கள்.

அன்பு இருக்குமிடத்து— பேதமிருக்காது :

அன்பு இருக்குமிடத்து— ஏற்றத் தாழ்வு இருக்காது. அன்பினால் இந்த உலகையே வெல்லலாம்.

இந்த நாவல், உங்களிடம் இயல்பாக உள்ள நல்ல குணங்களை மீண்டும் தூண்டிவிட ஒரு சிறிதேனும் உதவுமானால்; அதையே என் படைப்பின் வெற்றியாகக் கருதுவேன்.

இனியும் நான் உங்களை நிறுத்தி வைக்கப் போவதில்லை. தாராளமாகச் சென்று காப்டன் குமாரைச் சந்தியுங்கள்.

அன்புடன்,

**நீலமணி.**

# பதிப்புரை

அன்பு, சத்தியம், நேர்மை, விடாமுயற்சி, அளவற்ற துணிச்சல் இவற்றின் துணையோடு; காணாமற்போன தன் தங்கைக்காகக் கடலில் குதித்து—அக்கிரமக்காரர்களின் கையில் சிக்கி—இறுதி வரைப் போராடி வெற்றி கொண்ட ஒரு வீர மாணவனைப் பற்றிய அருமையான கதை இது.

இந்நூலை எழுதிய ஆசிரியர் நீலமணி, குழந்தைகளுக்காகப்பல நாவல்களும், சிறுகதைகளும், ரேடியோ நாடகங்களும் எழுதிப் புகழ்பெற்றவர். ''அன்புப் பணிக்கு ஓர் அன்னை தெரசா'' என்னும் வாழ்க்கை வரலாற்று நூலை எழுதி 1978-ல் குழந்தை எழுத்தாளர் சங்கம் நடத்திய இலக்கியப் போட்டியில் ''ஏ. வி. எம்''மின் அறக்கட்டளை முதல் பரிசான தங்கப் பதக்கத்தையும்; 1983-ல் எழுதிய ''தென்னைமரத் தீவினிலே'' என்னும் குழந்தைகள் நாவலுக்காக ''ஏ. வி. எம்''ன் வெள்ளிப் பதக்கத்தையும்; ''கவிமணியின் கதை''க்காக தமிழக அரசின் பரிசையும் பெற்றவர்.

சிறுவர்களின் உள்ளத்தில், அன்பு, பண்பு, வீரம், சத்தியம், நேர்மை ஆகிய நற்பண்புகளை வளர்க்கும் வகையில் எழுதிவரும் இவரது படைப்புகளைத் தொடர்ந்து வெளியிடுவதில் பெருமைப்படுகிறோம்.

**ஜானகி நீலமணி.**

# பொருள் அடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | திரைகடலோடி திரவியம் தேடியவர்கள் | ... | 9 |
| 2. | முத்து மாலை | ... | 20 |
| 3. | கப்பல் பயணம் | ... | 30 |
| 4. | புதையல் கிடைத்தது | ... | 42 |
| 5. | குமார் எங்கே? | ... | 51 |
| 6. | பெரியவர் சொன்ன கதை | ... | 63 |
| 7. | கள்ளத் தோணி | ... | 71 |
| 8. | வலையில் விழுந்த மீன் | ... | 80 |
| 9. | மடியிலே கனம் | ... | 90 |
| 10. | விடுதலை | ... | 99 |
| 11. | மாமிச பர்வதம் | ... | 108 |
| 12. | காப்டன் குமார் | ... | 120 |

# காப்டன் குமார்

## 1. திரைகடலோடி திரவியம் தேடியவர்கள்

திடீரென்று இந்தப் பர்மாவுக்கு இப்போது என்ன வந்து விட்டது? இன்பம் ததும்பிக் கலகல வென்றிருக்கும் வீதிகளெல்லாம் ஏன் துக்கம் கொண் டாடுகின்றன? புள்ளிமான்கள் போல் துள்ளித் திரி வார்களே பர்மியக் குழந்தைகள்; அவர்களது பிஞ்சு முகங்களெல்லாம் கன்றிக் கிடக்கின்றனவே! அவர் களோடு உடன் பிறந்தவர்கள்போல் தெருவெல்லாம் கைகோத்து ஆடுவார்களே, இந்தியச் சிறுவர்கள்— ஒருவனைக்கூட காணவில்லையே! ஏன், ஏன், ஏன்?—

குமாருக்கு ஒருகணம் ஒன்றுமே புரியவில்லை. நண்பர்களுடன் கிராமத்திற்கு, 'பிக்னிக்' போயிருந் தான் அவன். ஒரு வாரம் சுற்றி அலைந்துவிட்டு ஊருக்கு வந்தவன் திடுக்கிட்டுப் போனான். எங்கே

பார்த்தாலும் ஒரே சோகமயமான காட்சிகள்! அழகிய மாடமாளிகைகளும், ஆகாயத்தை அளாவிநிற்கும் 'பையா'க்களும் — பர்மாவில் கோவிலை அவர்கள் மொழியில் 'பையா' என்றுதான் அழைப்பார்கள். ஆங்கிலத்தில் 'பகோடா' என்று பெயர்) அல்லவா களையிழந்து நிற்கின்றன?—

யுத்த காலத்தைப்போல, பீதியோடு இந்தியரும், பர்மியரும் எதைப்பற்றியோ மூலைக்கு மூலை கூடிக் கூடிப் பேசிக் கொண்டிருந்தனர். 'எப்பொழுது பார்த்தாலும் உற்சாகமாக இருப்பார்களே இந்தியர்கள், மகிழ்ச்சிபொங்கும் அவர்களது முகங்களில் இத்தனை வேதனைக்குறி எங்கிருந்துதான் வந்ததோ?'—

சிந்தித்தபடியே ரங்கூனின் அழகிய வீதிகளின் வழியே வந்து கொண்டிருந்தான் குமார். அங்கே அவன் கண்ட காட்சி!

இந்தியர்களின் கடைகளின் முன்னால் பெரிய பெரிய டாங்கிகள் வந்து நின்றன. பட்டாளத்துக் காரர்கள் இந்தியர்களின் கடைகளினுள் புகுந்து அவர்களை வெளியே இழுத்துத் தள்ளிக் கதவுகளை அடைத்தனர். அங்கே கூட்டம் சேர்ந்து நிற்கவும்; கூடிப் பேசிக் கொள்ளவும் விடாமல் அடித்து விரட்டினார்கள். இதெல்லாம் என்ன?

காரணம் புரியாமல் விழித்தான் குமார். அவன் மனம் மிகவும் வேதனையுற்றது. இதைப் பற்றித் தெரிந்து கொள்ளாமல் மேலே தன் வீட்டிற்குப்போக அவன் மனம் இடம் கொடுக்கவில்லை. நேராக

வழியிலுள்ள தன் நண்பன் சுவானின் வீட்டிற்குச் சென்றான்.

சுவானும், குமாரும் நெருங்கிய நண்பர்கள்; ஒரே பள்ளியில் படிப்பவர்கள். குமாரின் தந்தையைப் போலவே சுவானின் தந்தையும் பெரிய பணக்காரர்.



ஆனால் பெரிய உத்தியோகத்தில் இருப்பவர். அவர்களது பங்களா பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருக்கும். ஜன்னல்களுக்கும் கதவுகளுக்கும் சீனத்துப் பட்டினாலான அழகிய திரைச் சீலைகள் தொங்க விடப் பட்டிருக்கும். அதில் அழகிய பூ வேலைகள்

செய்யப் பட்டிருக்கும். எப்பொழுது குமார் அங்கே சென்றாலும் 'சைனா' டீயும் உயர்ந்தரகபிஸ்கோத்துகளும் கொடுக்கச் சுவானின் தாயார் தவறவே மாட்டாள். குமாரை வாசலில் கண்டதுமே, சுவான்



ஓடோடியும் வந்து வரவேற்றான். உள்ளே வரும்படி வேண்டினான். ஆனால் தனக்கு அதற்கெல்லாம்

சமயமில்லையென்று மறுத்துவிட்டுவந்த விஷயத்தை பற்றி மட்டும் ஆவலோடு விசாரித்தான் குமார்.

சுவான் உடனே ஆச்சரியத்தோடு, "அப்போது உனக்கு இங்கே நடக்கும் விஷயம் ஒன்றுமே தெரியாதா, குமார்?" என்று கேட்டான்.

"ஹூ......ஹூம்......நான்தான் ஒரு வாரமாக ஊரில் இல்லையே, பார்த்தாலே தெரியவில்லை?" என்று தனது தோளில் தொங்கும் 'காம்ப் பாக்' காமிரா, பிளாஸ்க் – எல்லாவற்றையும் சுட்டிக் காட்டினான் குமார்.

"ஓஹோ, பிக்னிக் போய்விட்டு இப்போதுதான் வருகிறாயா? பார்த்தாயா குமார், பார்த்தாயா; கடைசியில் என்னைக் கூப்பிடாமல்தானே போனாய்? இருக்கட்டும். சரி, எங்கேயெல்லாம் போனாய், என்னவெல்லாம் பார்த்தாய்? கூட யார் யாரெல்லாம் வந்தார்கள் குமார்?" என்றான் சுவான் படபடப்பாக.

"சுவான், அதெல்லாம் பிறகு விமரமாகச் சொல்லுகிறேன். இப்போது முதலில் நீ என் கேள்விகளுக்குப் பதில் சொல்லு. பர்மா மீது அண்டை நாடுகள் ஏதாவது ஆக்கிரமிப்புச் செய்திருக்கின்றனவா? இல்லை படையெடுக்கப் போகின்றனவா? அல்லது மீண்டும் குண்டுகளைப் போட்டு அழித்துவிடப் போகிறேன் என்று ஜப்பான்காரன் நம்மைப் பயமுறுத்துகிறானா? அப்படியே இருந்தாலும் பாவம், இந்தியர்களைப் போட்டு ஏன் இந்தப் பர்மாக்காரர்கள் படாத

பாடு படுத்த வேண்டும்? வழியெல்லாம் பார்த்தேன்; மனம் பொறுக்கவில்லை. சுவான் உனக்குத் தெரியுமா; ஏன் ஊரே இப்படி மாறிவிட்டது?'' என்று ஆவேசத்துடன் கேட்டான் குமார்.

தன் நண்பன் தனக்கு என்ன புதியவிஷயத்தை சொல்லப்போகிறானோ; அது எத்தகையதாக இருக்குமோ என்று எதையும் தாங்கும் இதயத்துடன் இருந்தான் குமார். ஆனால் சுவான் கூறிய விஷயமோ—குமார் சேகரித்து வைத்திருந்த அத்தனை தைரியத்தையும் அரை நொடியில் தவிடுபொடியாக்கி விட்டது!

''பர்மாவில் இந்தியருக்கு இடமில்லையாம். பிழைப்பைத் தேடி வந்திருக்கும் இந்தியர்கள் எல்லாரும் இடத்தை காலி செய்துவிட்டு உடனே இந்தியாவுக்குக் கப்பல் ஏறிவிட வேண்டுமாம்.''

குமாருக்கு ஒரு கணம் தலையே சுழல்வதுபோல் இருந்தது. சுவானையே ஒரு கணம் வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தான்.

சுவானின் தந்தையும் ஓர் இந்தியரே. பிழைப்புத் தேடி வந்த குமாரின் தந்தையைப் போலவேதான் அவரும் பர்மா வந்திருந்தார். வந்த இடத்தில் வாழ்க்கை வளமாயிற்று. சீனத்துப்பெண் ஒருத்தியை மணந்து கொண்டார். இரண்டு மூன்று குழந்தைகளையும் பெற்றுக்கொண்டார். ஏழெட்டுப் பங்களாக்களையும் கட்டிக்கொண்டார். துண்டை உதறிப்

போட்டுக்கொண்டு புறப்பட்டு வந்தவர், துண்டை உதறுவது போலவே பிறந்த பொன்னாட்டின் நினைவுகளையும் உதறிவிட்டார்.

இந்தியாவைப் பற்றி அவருக்கு என்றைக்குமே நல்ல எண்ணம் கிடையாது. ஆகவே அவர் என்றோ பர்மாப் பிரஜையாக மாறிவிட்டார். ஆகவே இந்தப் புதிய உத்தரவு அவரையும் சுவானையும் பாதிக்காது. ஆனால் குமாருக்கு? அவன் தந்தை பெரிய 'காந்தி பக்த' ராயிற்றே!

கண்ணீர் பளபளக்கச் சுவானையே இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்த குமார் மறுகணம் குபீரென்று பாய்ந்து சுவானை மார்போடு இறுகக் கட்டிக் கொண்டான்.

"சுவான், நாம் இருவரும் ஒன்றாகப் பள்ளியில் சேர்ந்தோம். ஒவ்வொரு வகுப்பிலும் பாஸாகி ஒன்றாகவே தேறி முன்னேறினோம். ஆனால் இனிமேல் நாம் ஒன்றாக இருக்க முடியாதே, சுவான். உன்னை விட்டுவிட்டு நான் எப்படிப் பிரிந்து போவேன்?" என்று சுவானின் தோள்பட்டையில் முகத்தைக் கவிழ்த்துக்கொண்டு குமார் அழுதான்.

சுவானுக்கு இருதயமே வெடித்துவிடும்போல் இருந்தது. என்ன ஆறுதல் கூறி நண்பனைத் தேற்றுவது என்றே அவனுக்குப் புரியவில்லை. தனக்காவது தாயார் இருக்கிறாள், துன்பம் வந்தால் ஆறுதல் கூற. ஆனால் குமாருக்குத் தந்தையைத்

தவிர வேறு யாரும் இல்லையே. அவன் தந்தையைப் பற்றிச் சுவான் நன்கு அறிவான்.

அவர் பெயர் ராமசாமிப் பிள்ளை. சுவானின் தந்தையைப் போலவே பர்மாவில் வந்து செல்வத்தைப் 'பையா' வாகக் குவித்தவர்தான் அவரும். ஆனால் அவரது சிந்தனை முழுவதும் பாரதத்தையே சுற்றித்தான் வட்டமிட்டுக் கொண்டிருக்கும். தாம் ஓர் இந்தியன் என்று சொல்லிக்கொள்வதில் பெருமைப் படக்கூடியவர். இல்லாவிட்டால் அவருடைய மிகப் பெரிய மில்லுக்கு 'நேதாஜி மீல்' என்றும்; அங்காடிக்கு 'இந்தியா ஸ்டோர்' என்றும் பெயரிட்டிருப்பாரா?

வந்த புதிதில், சிறிது பணம் சேர்ந்ததும் அதை எடுத்துக் கொண்டு தாய்நாடு சென்றார். தூரத்து உறவில் விட்டுவந்த ஒரு பெண்ணை மணந்து, அவளைத் தம்மோடு பர்மாவுக்கும் அழைத்து வந்து விட்டார். அவள் வந்த வேளை ராமசாமிப் பிள்ளையிடம் அதிருஷ்ட தேவதை துள்ளி விளையாடினாள். நீண்ட நாட்களுக்குப் பிறகு அவர்களுக்குப் பிறந்த குழந்தைதான் குமார். அதற்கடுத்துப் பிறந்தவள் சாந்தி. அந்தப் பிரசவத்தின் போதுதான், ஜன்னி கண்டு ராமசாமிப் பிள்ளையின் மனைவி இறந்தாள்.

"இனிமேல் எனக்கு இங்கே என்ன இருக்கிறது" என்று மனைவி இறந்ததிலிருந்தே ராமசாமிப்பிள்ளை சொல்லிவந்தார். தாய்நாடு திரும்பிவிடவேண்டும் என்று துடித்தார். மனைவியைப் பறித்துக் கொண்ட பர்மியமண் அவருக்கு நெருப்பாகச் சுட்டது. ஆனால்

அவரது அந்த எண்ணத்தை நண்பர்கள் தடுத்து நிறுத்திவிட்டனர்.

''பிறந்திருப்பது பெண் குழந்தை அல்லவா? இன்னும் 'ஒருமலை'ச் செல்வத்தைச் சம்பாதித்துக் கொண்டு கப்பலேறி, அதை இந்திய மண்ணில் கொண்டுபோய் இறக்குங்கள். பெண்ணை ஒரு பெரிய சீமானுக்குத் திருமணம் செய்து கொடுத்துவிட்டு நிம்மதியாயிருங்கள்'' என்று ஓயாமல் உபதேசம் செய்தனர். அந்த வார்த்தைகள் அவருக்கு அப்போது இனித்தன. அதில் நியாயம் இருப்பது போல்தான் தோன்றியது. ஆனால் அவரது 'செல்வமலை' கப்பலேறி இந்தியக் கரையை எட்டவே இல்லை. பர்மியக் கடலிலேயே கவிழ்ந்துவிட்டதே!

ஆம்! கையை வீசிக்கொண்டு வந்த இந்தியர்கள், கையை வீசிக்கொண்டு உடனே கப்பலேற வேண்டும் என்றுதானே பர்மா அரசாங்கம் விரட்டிக் கொண்டிருக்கிறது?

கனவிலிருந்து விடுபட்டவனைப்போல் குமார் ஒரு முறை நண்பனையே உற்றுப்பார்த்தான். தங்கை சாந்தியின் நினைவு வந்ததும், அவள் இப்போது எப்படி இருக்கிறாளோ? என்று உள்ளம் பறந்தது. ஆயினும் இனி நண்பனுடன் பேசும் சந்தர்ப்பமே வாய்க்காவிட்டால்?

''சுவான்...ரெடி பிளீஸ்...அப்படியே அந்தப் பூந்தொட்டியின் பக்கமாகச் சென்று நின்றுகொள்...

ஓரே...ஸ்நாப்...'' ஆவேசம் வந்தவனைப்போல் குமார் அவனைத் துரிதப்படுத்தினான்.

படம் பிடித்துக்கொண்டதும் சுவான் கேட்டான்: ''அதில் இன்னும் ஃபிலிம் பாக்கியிருக்கிறதா, குமார்?''

''ஏன் இன்னொன்று எடுக்கவா?''

''இல்லை...இல்லை...நான் உன்னை ஒன்று எடுத்துக் கொள்கிறேன்.''

''ஓயெஸ்...'' குமார் போஸ் கொடுத்தான்.

''கிளிக்!''

''சரி, நான் போய்வரட்டுமா, சுவான்? தங்கையும் அப்பாவும் என்னைக் காணாமல் இந்தச் சமயத்தில் எவ்வளவு கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறார்களோ!''

''சரி, மறக்காமல் உன் படத்தை...எனக்கு?''

''கண்டிப்பாக! நான் இந்தியா போய்விட்டால் கூட அங்கிருந்து உனக்குத் தபாலில் அனுப்பி வைப்பேன்!''

நண்பனிடம் விடை பெற்றுக்கொண்டு புறப்பட்ட குமார் ஓட்டமும் நடையுமாக வீட்டை அடைந்தான். ஆனால் அங்கே அவன் கண்ட காட்சி?

கம்பீரமாக நிமிர்ந்து நிற்கும் அவன் தந்தை வெட்டிச் சாய்த்த தேக்க மரம்போல் கட்டிலிலே

படுத்துக் கிடந்தார். சுற்றிலும் பல டாக்டர்கள் கூடி ஏதோ பலத்த யோசனையில் ஆழ்த்திருந்தனர். அவர்கள் மத்தியில், கன்னங்களில் காயாத கண்ணீர்க் கோடுகளோடு, குழந்தை சாந்தி அழுத வண்ணம் வேலைக்காரன் திருமுருகுவின் கையைப் பிடித்துக் கொண்டிருந்தாள்.

குமார், தோளிலிருந்த பையைத் தூக்கி எறிந்து விட்டுத் தந்தையின் அருகில் ஓடினான். உயிரையே காறி உமிழ்வதுபோல் ராமசாமிப் பிள்ளை பயங்கர மாக ஒரு முறை இருமினார். குமாரைக் கண்டதும், ‘‘அண்ணா!’’ என்று பெரிதாக அலறிய வண்ணம் சாந்தி ஓடிவந்து அவனது கால்களைக் கட்டிக் கொண்டாள். குமாரின் கண்கள் கலங்கின.

# 2. முத்து மாலை

சூழ்ந்திருந்த டாக்டர்களையெல்லாம் பார்த்த வுடன் குமாருக்குப் பெரும் கவலையாகி விட்டது.

"டாக்டர் ஸார்! எங்கள் அப்பாவுக்கு என்ன உடம்பு? ஒன்றும் ஆபத்தில்லையே? உங்கள் எல்லோரையும் பார்க்கிற போது அப்பாவுக்கு ஏதோ கடும் வியாதிபோலத் தோணுது பயமாயிருக்குதே, டாக்டர்" என்றான்.

குமாரின் முதுகைத் தட்டிக் கொடுத்த டாக்டர், "ஒன்றும் பயப்பட வேண்டியதில்லை. திடீரென்று ஏற்பட்ட அதிர்ச்சி இருதயத்தைப் பாதித்திருக்கிறது. நல்ல மருந்துகள் கொடுத்திருக்கிறோம். தைரியமாக இரு" என்று ஆறுதல் கூறினார். ஆனால் 'பிக்னிக்' கிலிருந்து வந்த குமாரை அவன் தந்தை கண் திறந்து கூடப் பார்க்கவில்லை. டாக்டரின் வார்த்தை களிலே அவனது மனம் சமாதானம் அடைய மறுத்தது.

எட்ட நின்று கொண்டிருந்த திருமுருகுவிடம் சென்றான். குமாரைக் கண்டதும், "சின்ன

எஜமான்'' என்று அவன் பொதாக அழுது விட்டான். திருமுருகு மிகவும் நன்றியுள்ள வேலையாள். ராமசாமிப் பிள்ளையிடம் அவனுக்கு உயிர்.

''அப்பாவுக்கு என்ன முருகு? நான் இங்கிருந்து போகும் போது அவர் நன்றாகத் தானே இருந்தார்?''

''ஆமாம் தம்பி! இங்கிருந்து நீ போன பிறகுதான் அந்தப் பேரிடி விழுந்தது. அப்பாவினுடைய 'நேத்தாஜி மில்'லையும், 'இந்தியா ஸ்டோ'ரையும் பர்மா சர்க்கார் பிடுங்கிக்கொண்டு விட்டது. அது மட்டுமா? பாங்கியிலே போட்டிருந்த பணம், வாங்கியிருந்த வீடுகள் எல்லாமே போய் விட்டன. இப்போது நாம் இருக்கும் பங்களா கூட இனி நமக்கில்லை. சீக்கிரம் காலி செய்து விட்டு இந்தியா போய்விட வேண்டுமாம்'' என்று கூறும்போதே திருமுருகுவின் குரல் கரகரத்தது.

அப்போது அங்கே வந்த டாக்டர் திருமுருகுவிடம் சில மருந்துகளை எழுதிக் கொடுத்து விட்டு, அவசியமானால் காலையில் போன் பண்ணச் சொல்லிவிட்டு விடைபெற்றுக் கொண்டார்.

கட்டிலின் அருகே நின்று கொண்டிருக்கும் தன் செல்வங்களை ராமசாமிப் பிள்ளை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. அதிர்ச்சி அவ்வளவு கடுமையாக அவரைத் தாக்கி விட்டது.

திருமுருகு, கையிலிருந்த மருந்துச் சீட்டைப் பார்த்தான். வீட்டிலே இருந்த சொற்பத் தொகை

யும், அடிக்கடி உயர்ந்த மருந்துகள் வாங்கி வந்ததில் தீர்ந்து போயிற்று. இனிமேல் மருந்துக்குப் பணம்?

இதை எண்ணிப் பார்த்ததும் திருமுருகு வெலவெலத்துப் போனான். நேற்றுவரை பல லட்சங்களுக்கு அதிபதியாக இருந்த அவனது எஜமானரின் நிலை என்ன? இன்று அவனைவிட மோசமானதாக அல்லவா ஆகிவிட்டது? இமைக்கும் நேரத்திற்குள் செப்பிடு வித்தைபோல் எல்லாம் கனவாகி விட்டாத! இந்த அதிர்ச்சியை யாரால்தான் தாங்க முடியும்? எஜமானர் சுருண்டு விட்டதில் விந்தை என்ன இருக்கிறது? இப்படி எத்தனை குடும்பங்கள் தவிக்கின்றனவோ?

கோடீசுவரர்களின் வீட்டுக் குழந்தைகள் வயிற்றுக் கஞ்சிக்கும் கூழுக்கும் பிச்சை எடுப்பதா?

''மாமா...... பசிக்குது...'' என்ற சாந்தியின் மழலைமொழி திருமுருகுவின் சிந்தனையைத் தடுத்து நிறுத்தியது. ஒரு தட்டிலே குழந்தைக்கும் மற்றொரு தட்டிலே குமாருக்கும் சாதம் பிசைந்து எடுத்துக் கொண்டு வந்து கொடுத்தான். இருவரும் சாப்பிட்டானதும் திருமுருகு வெளியே புறப்பட்டான்.

''தம்பி, நான் அப்பாவுக்கு மருந்து வாங்கி வருகிறேன். நீ தங்கையையும் அப்பாவையும் ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள். நான் ஒரு நொடியில் வந்துவிடுகிறேன்'' என்று கூறிப் புறப்பட்டு வீதிக்கு வந்த திருமுருகு நேராகத் தன் வீட்டிற்கு வந்தான். எஜமானரின் மருந்துக்காக மனைவியிடம் கேட்டுப்

பத்து 'கியாத்' (பர்மா நாணயம்)களை வாங்கிக் கொண்டு புறப்பட்டான்.

மருந்துகளோடு திருமுருகு பங்களாவை அடைந்தபோது அங்கே அவன் கண்ட காட்சி,—

குமாரும் சாந்தியும் 'ஓ'வென்று அழுது கொண்டிருந்தார்கள். பெரு வலிப்பு வந்து ராமசாமிப் பிள்ளையின் விழிகள் செருகிக் கொண்டிருந்தன. திருமுருகு ஓடிச் சென்று எஜமானரின் தலையைப் பிடித்துக்கொண்டான். குழந்தைகள் இருவரையும் தன் அருகில் அழைத்துக்கொண்டு வந்து நிறுத்திக் கொண்டான். வாங்கிவந்த மருந்தைக் குமாரின் கையால் தன் தந்தையின் வாயில் ஊற்றச் சொன்னான்.

திருமுருகு, செய்யவேண்டிய காரியங்களை எல்லாம் வெகு அழகாய்த்தான் செய்தான். இறக்கு முன் தம் மக்களைப்பார்த்துக்கொண்டே இறக்கட்டும் என்று அவர்களை அவர் அருகில் அழைத்து வைத்துக் கொண்டான். தனயன் கையால் தந்தைக்குக் கடைசி நீர் வார்க்கச் செய்தான். இத்தனைக்கும் அவர் தன்னிடம் ஏதாவது வாய்திறப்பார் என்று எதிர்பார்த்த திருமுருகு ஏமாந்தான். அவரது எண்ணங்கள் எல்லாம் அவர் இதயத்திலேயே தேங்கிவிட்டன.

ராமசாமிப்பிள்ளையின் விசேஷங்கள் எல்லாம் கூட முடியவில்லை; அதற்குள்ளேயே பர்மிய அதிகாரிகள் அவரது வீட்டை ஆக்கிரமித்துக் கொண்டு

விட்டனர். குமாரும் சாந்தியும் நடுத்தெருவில் நிற்பதைக் காணச் சகியாத திருமுருகு அவர்களைத் தன் வீட்டிற்கு அழைத்துப் போனான்.

இந்தியாவிலிருந்து பிழைப்பைத் தேடிவந்தவன் தான் திருமுருகுவும். அவனுக்கு இரண்டு மனைவிகள்; பர்மாவும், சீனாவுமாக. அடுக்கடுக்காக ஆறு குழந்தைகள். நான்கு வருஷங்களுக்கு முன் சர்க்கார் செய்த அறிவிப்பின்படி அவன் அன்றே பர்மா பிரஜையாகிவிட்டான். மேலும் அவனுக்கு இந்தியாவில் யாருமேயில்லை.

குமார் மட்டும் திடமாகத் திருமுருகுவிடம் கூறிவிட்டான். "முருகா! நானும் தங்கையும் பர்மாவில் தங்கப் போவதில்லை. இந்தியாவுக்குத்தான் போகப் போகிறோம். முதல் கப்பலிலேயே எங்களை ஏற்றி அனுப்பிவிடு" என்றான்.

திருமுருகு மனம் குமைந்தான். "எப்படித் தம்பி, தன்னந்தனியாக அத்தனை தூரம் குழந்தையையும் உன்னையும் கப்பலில் அனுப்புவேன்? மனசு கேட்கவில்லையே!"

"நான் தனியாகவா போகப்போகிறேன்; நேற்றுத் துறைமுக வாயிலில் பார்க்கவில்லை? எத்தனை ஆயிரமாயிரம் சாந்தியைவிடச் சிறிய குழந்தைகள் அழுதுகொண்டே சென்றார்கள்! அவர்களையெல்லாம் விடவா?"

திருமுருகு மனத்திற்குள்ளேயே பெரிதாக அழுதுவிட்டான். குமாரும் சாந்தியும் அவன் தோள் மீதும்

மடிமீதும் வளர்ந்தகுழந்தைகள். கண்ணிலும் மேலாக எஜமான் எத்தனை செல்லமாக அவர்களை வளர்த்தார்!

ஆனால் இன்று, அவனது எஜமானரே இறந்து விட்டார்–இல்லை...இல்லை அவரைக் கொன்று விட்டார்கள் பாவிகள். இது கொடுமையல்லவா? இரண்டரை லட்சம் சதுர மைல்கள் கொண்ட பரந்த மண்ணில் சில ஆயிரம் மக்களுக்கு மட்டுமா இடமில்லாமல் போய்விட்டது? அல்லது இத்தனை கோடி மக்களில் இந்தியர்கள் மட்டுமா வேண்டாதவர்கள் ஆகி விட்டார்கள்?

கல்லையும் மண்ணையும் சீராக்கி, காட்டையும் மேட்டையும் அழித்து நகரத்திற்கு எழில் கூட்டினார்களே இந்தியர்கள், அவர்களுக்கு இதுவா பரிசு? ஒண்டவந்தஇடம் என்று பேதம் காட்டாமல், சொந்த இல்லமாக அல்லவா இந்த மண்ணிடம் அன்பு செலுத்தினார்கள். ஐயோ! காலால் மிதிக்கும் மண்ணிற்கு ரப்பர்ப் பாலை வார்த்து மெத்தையாக்கிக் கொண்ட பர்மா நாடே; இந்தியர்கள் விஷயத்தில் நீ இதயத்தை பாறையாக்கிக் கொண்டது ஏனோ?

“என்னாங்க, இப்படி மலைச்சுப்போய் உட்கார்ந்துக்கிட்டேயிருக்கீங்க? குழந்தைகளையும் கூட்டிக் கொண்டு சாப்பிட வாருங்க” என்று திருமுருகுவின் மனைவி அழைத்தாள்.

குமார் தனக்குப் பசிக்கவே இல்லை, சாந்தி மட்டும் சாப்பிடட்டும் என்றான். திருமுருகு விட

வில்லை. ''ஏன் தம்பி! குடிசை வீட்டுச் சோறு எப்படியிருக்குமோன்னு யோசிக்கிறியா? வா—தம்பி, என் ரெண்டு பெண்சாதியும் அப்படியொண்ணும் முட்டாள் இல்லே; சாதாரண சமயமாயிருந்தா நீங்க இந்த வீட்டிலே அடி எடுத்து வச்சிருப்பீங்களா? 'எஜமான் வீட்டுக் குழந்தைங்க சாப்பிடப் போகுது'ன்னு இன்னிக்கு உங்களுக்காக ஸ்பெஷலாக விருந்து பண்ணியிருக்கா. நீ சாப்பிடாட்டாத் தங்கச்சியும் சாப்பிடாது—அப்புறம் நானும் சாப்பிட மாட்டேன்; அதைப் பார்த்து என் பெண்சாதியும் பட்டினி கிடப்பா. ஆனால் ஒண்ணுமே புரியாத என் பட்டாளங்கள் மட்டும் 'பசி பசி'ன்னு ஒப்பாரி வைக்கும். உனக்கு இத்தனையும் சம்மதம்தா ன்னு சொல்லு தம்பி! நான் தயார்'' என்றான் திருமுருகு.

குமார் வாய்விட்டே சிரித்து விட்டான். இப்படித் தான்; துக்கம் தலைதூக்கும் போதெல்லாம் திருமுருகு தன் அப்பாவிடம் ஏதாவது சொல்லி அவர் மனதை மாற்றிவிடுவான்.

சாப்பாட்டுக் கடை முடிந்ததும் குமார் முருகுவின் மனைவியிடமும் குழந்தைகளிடமும் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டான். சாந்தியைத் திருமுருகு தூக்கிக் கொண்டான்.

அன்று கப்பல் புறப்படுகிற தினமாகையால் தெருவெல்லாம் திருவிழாவாகக் காட்சியளித்தது. சாரிசாரியாக எறும்பு ஊர்வதுபோல மக்கள் அணி

வகுத்துச் சென்றவண்ணமிருந்தனர். முன்னே சென்றவன், திரும்பிக்கூட பார்க்கவில்லை — காறி உமிழ்ந்த எச்சிலைப் போல. ஆம் காலை வாரிவிட்ட மண்ணைக் திரும்பி என்ன பார்வை வேண்டிக் கிடக்கிறது என்ற வெறுப்பு. குருவி தானியம் சேகரிப்பதுபோல் சிறுகச்சிறுகச் சேமித்து வைத் திருந்தார்கள். பருந்தாக வந்து பறித்துக் கொண்டு விட்டார்களே இந்த பர்மியர்கள்!

இன்று கை நிறையக் கொண்டு செல்வதற்கு அவர்களிடம் பணம் இல்லை; விழி நிறையச் சுமந்து செல்லக் கண்ணீர்தான் இருந்தது.

விழிகள் வடித்த வேதனைக் கண்ணீரை விரல் களால் சுண்டி எறிந்தான் திருமுருகு. 'ஹூம்... பூகம்பமோ, எரிமலையோ வெடித்து ஊர் அழிந்து மக்கள் பிச்சைக்காரர்களாவதில்லையா? அப்படி நினைத்துக் கொண்டால் போகிறது. ஆனால் பர்மாவை நம்பி வந்த இந்தியர்களுக்கு ஏற்பட்ட பூகம்பத்தில்—மனைவி மக்களாவது மிஞ்சினார்கள் அல்லவா? அதற்காகவே நன்றி செலுத்தலாமே!'

துறைமுகத்தில் போலீசின் கெடுபிடி மிகவும் அதிகமாயிருந்தது. ஆடு மாடுகளைப் போல ஊர் முழுவதும் விரட்டிக் கொண்டுவரப்பட்ட இந்திய மக்கள், துறைமுகச் சந்தையில் மிருகங்களுக்கும் மோசமாக அவதிப்பட்டனர்.

இந்தியரை ஏற்றிச் செல்லவந்த கப்பல் கை நீட்டி அழைப்பதுபோல் கடலிலே அசைந்து கொண்

டிருந்தது. கபபல புறப்படுவதற்கான முதல் மணி யும் அடித்து விட்டது. எப்படியோ குமாரையும் சாந்தியையும் திருமுருகு சாமத்தியமாகக் கப்பலில் ஏற்றி விட்டான். மனத்தில் இருந்த பெரும் சுமை இறங்கி விட்டதுபோல் இருந்தது. ஆனால் அதே சமயத்தில், கப்பலிலிருந்து சாந்தி இறக்கப்படுகிறாள் என்பதைத் திருமுருகு அறிந்திருந்தால், அவன் சீக்கிரம் வீட்டிற்குப் போயிருப்பானா?

சாந்தியின் கழுத்தில் இருந்த விலையுயர்ந்த முத்துமாலையைச் சுங்க அதிகாரி பார்த்து விட்டான். ஆனால் அவன் அதைச் சாவடியிலேயே கவனித் திருக்க வேண்டும்; தவறிவிட்டான். அவன் செய்த தவறுக்காகப் பிறருக்குத் தண்டனை விதித்தான். சாந்தியையும் அழைத்துக் கொண்டு சுங்கச் சாவடிக்குக் கிளம்பினான்; குமார் வழிமறித்தான்.

"உங்களுக்கு மாலைதானே வேண்டும்? தாராள மாய்க் கழற்றி எடுத்துக் கொண்டு என் தங்கையை விடுங்கள்" என்றான். அதிகாரி முறைத்துப் பார்த் தான்.

"பதுக்கி எடுத்துக்கொண்டு போவதில் விறைப்பு வேறா? விடு வழியை! சாவடிக்குப் போய் மேல் அதிகாரியின் உத்தரவு இல்லாமல் நாங்களாக ஒன்றும்செய்ய முடியாது" என்று மேலே நடந்தான். உடலிலும் உள்ளத்திலும் முரடனான அந்த அதிகாரிக்கு ஈடு கொடுக்கச் சிறுவனான குமாரால் எப்படி முடியும்?

பக்க பலமும் இல்லை; கூடியிருந்தவர்கள் எல்லாம் கோழைகளாக மௌனம் சாதித்தனர். வேறு வழியின்றி அதிகாரியின் கால்களைப் பிடித்துக் கொண்டு, ''நானும் கூட வருகிறேன். என்னையும் சாவடிக்கு அழைத்துச் செல்லுங்கள்'' என்று குமார் கண்ணீர் விட்டுக் கெஞ்சினான். ஆனால் அதிகாரியின் காதிலிருந்த 'ஹியரிங் எய்டு' தான் எப்போதோ கீழே விழுந்து விட்டதே!

''அநாவசியத் தொந்தரவு கொடுக்காதே'' என்று தன் கால்களை உதறிக் கொண்டு சென்று விட்டான். ''அண்ணா! அண்ணா!'' என்று அழுது சாந்தி கப்பலையே கிடுகிடுக்க வைத்துக் கொண்டிருந்தாள்.

கூட இருந்தவர்கள் குமாரைச் சமாதானம் செய்தார்கள். ''இப்பவே பரிசோதனை நடத்தி உன் தங்கையை அனுப்பி விடுவார்கள், பொறுமையாக இரு'' என்று. ஆனால் அவன் கேட்டால் தானே?

''அவளுக்கு ஒன்றும் தெரியாது; நானும் கூடப் போவேன்'' என்று அடம் பிடித்துக் கொண்டிருந்தான். கப்பலில் எட்ட நின்று கொண்டிருந்த ஒரு பர்மிய அதிகாரி குமாரைக் கரகரவென்று இழுத்துச் சென்று உள்ளே தள்ளினான்.

இறுதி மணியும் அடிக்கவே, கப்பல் புறப்பட்டு விட்டது. குமார் கரையை நோக்கி, ''சாந்தி! சாந்தி!'' என்று கத்தினான். அவன் சாந்தியைக் கரையிலும் காணவில்லை; கப்பலிலும் காணவில்லை.

# 3. கப்பல் பயணம்

கப்பலின் விளிம்பைப் பிடித்தவண்ணம் கரையையே பார்த்துக் கொண்டிருந்தான் குமார். ரங்கூன் துறைமுகம் ஒரு சிறு புள்ளியாகத் தோன்றி மறையும் வரை அந்தத் திசையையே பார்த்துக் கொண்டிருந்தான். ஆமாம்! அந்தப் புள்ளியிலே ஒரு புள்ளியாக அவன் அருமைத் தங்கையும் அங்கேதானே இருக்கிறாள்? கண்களிலிருந்து வடிந்த கண்ணீர் உதட்டிலே தேங்கி உப்புக் கரித்தது.

''ஏன் தம்பி, இப்படி எத்தனை நாளைக்கு நின்னு அழுதுக்கிட்டே வரப்போறே? இதோ பாரு, எங்களை! நாங்கள் எல்லாம் என்ன சந்தோஷமாகவா பொறந்த நாட்டுக்குப் போகிறோம்? ஆயுசிலே பாதியை நன்றிகெட்ட பர்மாக்காரனுக்கு உழைத்தோம். சம்பாதித்தையும் வருகிறபோது பிடுங்கிக் கிட்டு விரட்டிட்டான். தர்மம், நியாயம் பார்த்தா உலகத்திலே காரியங்கள் நடக்குது? வா, இப்படி! எங்க பக்கத்திலே வந்து குத்திக்கோ'' என்று ஒரு வயதான பெரியவர் குமாரிடம் இரக்கம் காட்டி ஆறுதல் கூறி அழைத்தார்.

"அதுக்கில்லே மாமா! எங்கப்பா பர்மாவிலே உங்களையெல்லாம் விட நிறைய சம்பாதித்தார். எங்களுக்குப் பெரிய வீடு, மில்லு, கடை எல்லாம் இருந்தது. அதையெல்லாம் பர்மாக்காரர்கள் கண்மூடித் திறப்பதற்குள் பிடுங்கிக்கொண்டு விட்டார்கள். அந்த அதிர்ச்சியைத் தாங்கமாட்டாமல் அப்பா திடீரென்று மாரடைத்து இறந்துபோனார். அப்போதுகூட நான் அதிகம் அழவில்லை. ஆனால் என் தங்கை சாந்தி சிறியவள். அவளுக்கு ஒன்றும் தெரியாது. செல்லமாக வளர்ந்தவள். பசி வந்தால் துடிதுடித்துப் போவாள். அநியாயமாய் என்னைவிட்டு அவளைப் பிரித்துவிட்டார்களே, மாமா: அவள் எங்கே. என்ன கஷ்டப்படுகிறாளோ?" என்று கூறும்போதே குமாருக்கு அழுகை வந்துவிட்டது.

"ஒன்றும் கஷ்டப்படமாட்டாள், நீ தைரியமாக இரு. தெய்வம் அப்படியெல்லாம் ஒன்றும் யாரையும் சோதனை செய்துவிடாது. அதோ பார், ஒரு குடுகுடு கிழவி—வயது எண்பதாகிறதாம். அவளுடைய இரண்டு பிள்ளைகளையும் பாவிகள் இதே போல்தான் பிரித்து நிறுத்திவிட்டார்கள். தன்னந்தனியாக உன்னைப்போல்தான் வருகிறாள். இந்தக் கப்பலில் கொஞ்ச நேரத்திற்குள் நானும் விசாரித்துவிட்டேன். கணவனைப் பிரிந்த மனைவி, அண்ணனைப் பிரிந்த தங்கை, மகனைப் பிரிந்த தாய், உன்னைப்போல் தங்கையைப் பிரிந்த அண்ணன், நிறைமாதக் கர்ப்பிணிகள்—இப்படி ஒரே அநுதாபத்திற்குரியவர்கள்தான் கூடியிருக்கிறோம். பாவிகளை

யார் கேட்பது? தப்பு எல்லாம் நம் பேரிலேதான் இருக்கு: நம்மை அவன் கூப்பிட்டானா, விரட்டிவிட்டான் என்று அழ! சரிசரி—வா, ஒன்றுக்கும் கவலைப் படாதே. உன் தங்கை எப்படியும் பத்திரமாக அடுத்த கப்பலில் வந்து சேருவாள்'' என்று குமாரை அழைத்துச் சென்று தம் பக்கத்தில் அமர்த்திக் கொண்டார்.

பெரியவருடைய பேச்சினால் சற்று ஆறுதல் அடைந்தவன் போல் குமார் காணப்பட்டான்; என்றாலும், அவன் மனம் சமாதான மடைந்து விடவில்லை. சாந்தியை நினைத்து அவன் உள்ளம் துடித்துக் கொண்டேதான் இருந்தது.

''ஏன் தம்பி! உன்னுடைய பெயர்என்ன என்று சொன்னாய்?'' பெரியவர் அவன் மனதை மாற்ற ஏதேதோ பேச்சுக் கொடுத்தார்.

''குமார்!''

''உன் தங்கையின் பெயர்?''

''சாந்தி''

''ஆமாம், அப்பாதானே இறந்துவிட்டதாகச் சொன்னாய்? அம்மா எங்கே இருக்கிறாள் என்று சொல்லவில்லையே குமார்!''

பெரியவர் சகஜமாக உரிமையோடுதான் கேட்டார். அதற்குள் குமாரின் கண்கள் குளமாகிவிட்டன. கையைத் தூக்கி உயரே காண்பித்தான்.

"என்ன, முதல் வகுப்பிலா?"—கப்பலின் மேல் தளத்தைப் பார்த்தார் பெரியவர்.

"அங்கே இல்லை மாமா, இன்னும் மேலே" என்று ஆகாயத்தைச் சுட்டிக் காட்டினான் குமார். அப்போதுதான் அவரும் அவனுடைய முகத்தைக் கவனித்தார். கண்களிலே கண்ணீர் பளபளத்தது. பெரியவருக்கு ஏண்டா கேட்டோம் என்றாயிற்று ஒரு கணம்.

"அப்போது பர்மாவிலே உங்களுக்கு இனி வேறு யாரும் இல்லை அல்லவா?"

"ஊஹூம்...அதுதானே மாமா, சாந்தி என்ன ஆனாளோ என்று கவலைப்படுகிறேன். எங்கள் வீட்டு வேலைக்காரன் திருமுருகு இருக்கிறான். அவன் வீடுகூட எங்கே இருக்கிறது என்று அவளுக்குச் சொல்லத் தெரியாது!"

"அப்போது இந்தியாவில் உனக்கு யார் இருக்கிறார்கள்? யாருடைய வீட்டுக்குப் போகிறாய்?"

"யார் இருக்கிறார்கள்! என் மாமா ஒருவர் பட்டணத்தில் இருக்கிறாராம். அவரைக்கூட எனக்கு இப்போது சரியாக அடையாளம் தெரியாது. நான் சிறியவனாக இருந்தபோது அம்மாவைப் பார்க்க அவர் பர்மாவுக்கு ஒரு சமயம் வந்திருந்தார். அப்போது அவருடன் நாங்கள் எல்லோரும் படம் பிடித்துக் கொண்டோம். அதன்பிறகு அம்மாவுக்கு உடம்புக்கு அதிகமாயிருந்தது. அப்பா தந்தி அடித்தார்.

அம்மா இறந்த பிறகுகூட அவர் வரவில்லை.''— குமார் ஒரு நீண்ட பிரசங்கமே செய்து நிறுத்தினான்.

''அப்படியானால் நீ பட்டணத்தில் அவரை எப்படிக் கண்டுபிடிப்பாய்? விலாசம் இருக்கிறதா?''

''இல்லை!''

''பிறகு?''

''போட்டோ இருக்கிறது!''

''போட்டோவா?'' — பெரியவர் ஆச்சரியத்துடன் கேட்டார்.

''ஆமாம், இதோ பர்மாவிலிருந்து நான் எடுத்துகொண்ட ஆஸ்தி இது ஒன்றுதான்'' என்ற குமார் சட்டென்று தன் டிராயரிலிருந்து ஒரு சிறிய தகர டப்பாவைத் திறந்தான். பாம்பாட்டியின் பெட்டிக்குள் வாலைச் சுருட்டிக்கொண்டு இருக்கும் பாம்பு மூடியைத் திறந்தவுடன், சீறியபடி தலையைத் தூக்குமே அதைப்போல், குமார் டப்பியைத் திறந்தவுடன் அதிலிருந்த போட்டோ பிரிந்து வெளியே துள்ளி விழுந்தது. அதை எடுத்துப் பிரித்துக் காண்பித்தான் குமார்.

குமார் கூறியது போலவே, அது ஒரு பழைய குடும்பப் படம். குமாரின் தாய் தந்தையர்கள், வேலைக்காரன், நண்பர்கள் எல்லோரும் இருந்தார்கள். அதில் குமார் குழந்தை. சாந்தி பிறந்திருக்கவில்லை.

"இதில் உன் மாமா எங்கே யிருக்கிறார்?" என்றார் பெரியவர்.

"இதோ, இதுதான் என் மாமா. அம்மாகூட அடிக்கடி காட்டுவாள்" என்று பெருமையுடன் சுட்டிக் காட்டினான் குமார்.

"சரி, இவருடைய வீடு பட்டணத்திலே எங்கே யிருக்கிறது?"

"அதுதான் மாமா தெரியவில்லை. இந்தப் போட்டோவை வைத்துக் கொண்டு பட்டணத்திலே கண்டுபிடித்துவிட முடியாதே?"

'பட்டணத்திலேயாவது, இந்தப் பழைய படத்தை வைத்துக்கொண்டு ஆளைக் கண்டு பிடிக்கவாவது!' — பெரியவர் மனத்திற்குள்ளேயே சிரித்துக் கொண்டார், ஆனால் குமாரை அதைரியப் படுத்திவிடவும் அவர் விரும்பவில்லை. படத்தை மடித்து அவன் கையில் கொடுத்தார். "பத்திரமாக வைத்துக்கொள்" என்றார்.

அப்போது அவருடைய முகத்தைக் கவனித்த குமாருக்கு என்னவோபோல் இருந்தது.

"ஏன் மாமா, ஒரு மாதிரியாக இருக்கிறீர்கள்? இந்தப் படத்தை வைத்துப் கொண்டு மாமாவைக் கண்டுபிடிக்க முடியாதா?"

"முடியது, தம்பி!"

"ஏன் மாமா"

அவர் அவனைக் கூர்ந்து கவனித்தார். என்ன இருந்தாலும் அவன் சிறுவன்தானே! பாவம் அவன் எதைக் கண்டான்!

வளர்ந்து பெருகும் பட்டணத்தின் தன்மையையும், அதில் உருமாறிப் போகும் மனித வர்க்கத்தின் கதையையும் பற்றி அவர் அவனுக்குப் புரியும்படி விளக்கினார். ஆயினும், அவன் மாமாவைக் கண்டுபிடிப்பதில் தாமும் கூட இருந்து உதவுவதாக அவர் வாக்களித்தார். ஆனால் குமார் மனம் உடைந்து போனான்.

இதற்குள் 'டீ'க்குச் சமயமாகிவிடவே எல்லோரும் எழுந்து போனார்கள். பெரியவரும் எழுந்தார்; குமாரையும் கூப்பிட்டார். அவன் பிடிவாதமாக வர மறுத்துவிட்டான். இறுதியில் பெரியவர் தனியாகச் சென்று டீயை குடித்துவிட்டு வந்தார். அது அவருக்குச் சுவைக்கவே இல்லை.

பகலெல்லாம் உலகைச் சுற்றி வந்த களைப்புத் தீர, கதிரவன் கடலிலே நீராடக் குதித்துவிட்டான். அலைகளின் தாலாட்டிலே கப்பல் ஒரு பெரிய மாளிகையைப்போல, நீரிலே மிதந்து சென்றுகொண்டிருந்தது. சிறிது சிறிதாக எங்கும் இருள் கவிந்துகொண்டே வந்தது. நட்சத்திரப் பூக்கள் வானத்து வரப்பில் பூத்துக் குலுங்கின.

சாதாரண சமயமாயிருந்தால் குமார் இதையெல்லாம் எவ்வளவு ரசிப்பான்? கப்பலில் நீண்ட தூரம் பிரயாணம் செய்ய வேண்டும். விமானத்தில்

பறந்து உலகமெங்கும் சுற்றி வர வேண்டும் என்பதெல்லாம் அவன் கனவு.

ஆனால் இதே கப்பலில் சாந்தியும் இருந்தால்—அதாவது அவளை அந்தக் கொடியவன் இறக்கி விடாமல் அவளும் தன்னுடனேயே இப்பொழுது வந்து கொண்டிருந்தால் — இந்தப் பயணம் எவ்வளவு மகிழ்ச்சியாக இருந்திருக்கும்!

"அது என்ன அண்ணா? இது என்ன அண்ணா?" என்று எத்தனை கேள்விகள் கேட்டுத் துளைத்து எடுத்து விடுவாள்? நீலநிற ஆகாயத்திலே மேகத்திரள் போல வெள்ளை நிறக் கொக்குகள் கூட்டம்கூட்டமாகப் பறந்து செல்வதும்; சரேலென்று அவை நீரில் பாய்ந்து மீனைத் தூக்கிக்கொண்டு கிளம்புவதும் எவ்வளவு அழகான காட்சி! இதையெல்லாம் சாந்தி பார்த்தால் துள்ளிக் குதிப்பாளே!

சாந்தியின் நினைவு வந்ததும் அவன் மீண்டும் துவண்டு விட்டான். அழ அழ அவளை அந்த அதிகாரி பிடிவாதமாக இழுத்துச் சென்ற காட்சி அவன் கண்முன் வந்து நின்றது.

'துறைமுகத்தில் சாந்தி அநாதையைப்போல் அழுதவண்ணம் நிற்கிறாள். சாதுவான மீனைத் தூக்கிச் சென்ற நாரையைப் போல ஏதோ துஷ்டர்கள் கூட்டம் அவன் தங்கையை தூக்கிச் சென்று விடுகிறது.'

குமார் திடுக்கிட்டு எழுந்து நின்றான். பழைய சினிமா படம் போல் அவனது சிந்தனைச் சுருள் 'டப்'பென்று அறுந்து போயிற்று. விழித்துக் கொண்டே அவன் கனவு காணத் துவங்கி விட்டான்?



தன் தங்கையைப் பர்மாவில் தவிக்கவிட்டு விட்டு தான் மட்டும் சுகமாகக் கப்பலில் செல்வதைவிடக் கொடிய தண்டனை தனக்கு வேறு ஏதும் இருப்ப தாகத் தோன்றவில்லை. பட்டணத்துக்குப்போனால் மட்டும் என்ன மாமாவைச் சுலபமாகக் கண்டுப் பிடித்துவிட முடியுமா? அல்லது; அடுத்த கப்பலில்

சாந்தி வருவாள் என்பதுதான் நிச்சயமா? இறுதியாக ஒரு முடிவுக்கு அவன் மனம் வந்து நின்றது. அதற்குள் இரவுச் சாப்பாட்டிற்கான மணியும் அடித்தது.

சாப்பிடுகிற வேளையானதும் பெரியவர் குமாரை தேடிக்கொண்டு வேகமாக அவன் இருக்கிற இடத்துக்கு வந்தார். மாலையிலே 'டீ' கூடச் சாப்பிடாமல் அல்லவா இருக்கிறான்?

பெரியவரைக் கண்டதுமே குமாரும் குஷியோடு அவருடன் சாப்பிடக் கிளம்பிவிட்டான். வயிறு நிறையச் சாப்பிட்டான். ஆனால் சீக்கிரமாகவே சாப்பிட்டு எழுந்திருந்து விட்டான். பிறகு மற்றவர்களுக்கெல்லாம் பரிமாறுவதில் உதவி செய்தான். பெரியவர் இலையில் வேண்டுமென்றே இரண்டு அப்பளத்தைத் தூக்கிப் போட்டான்.

அவர் பயந்து கொண்டே, ''மற்றவர்களுக்கு வேண்டும். போதும் போதும்'' என்று அலறினார்.

''பரவாயில்லை என் பங்கைத்தானே நான் உங்களுக்குப் போட்டேன். நான்தான் அப்பளமே போட்டுக்கொள்ளவில்லையே'' என்று சிரித்த வண்ணம் கூறிக்கொண்டே முன்னால் சென்றுவிட்டான். சாப்பாடு முடிந்ததும் குழந்தைகளின்; கையைக் கழுவிவிட்டு, அதனதன் பெற்றோர்களிடம் ஒப்பித்தான்.

காப்டனுக்கும் பரிமாறினான். சமையல் பாத்திரங்களைக் கழுவுவதில் கப்பல் சிப்பந்திகளுக்கு


உதவியாக இருந்தான். அவர்கள் கழுவிப் போடும் தட்டுக்களையும், சிறிய ஸ்பூன்களையும் துணியால் துடைத்து மீண்டும் பெட்டிகளில் அடுக்கினான். சிறிது நேரத்திற்குள் தனது சேவையினால் அத்தனை பேரது மனத்தையும் கொள்ளை கொண்டு விட்டான்.

வயதானவர்கள் கொண்டு வந்த மூட்டைகளை பிரித்து அவர்களது படுக்கைகளை எடுத்துக் கொடுத்துப் படுக்கவைத்தான். குமாரைத் தன் அருகில் கிடத்திக் கொண்டு பெரியவரும் படுத்து விட்டார். அநேகமாக எல்லோரும் படுத்துவிட்டார்கள்.

பகல் முழுவதும் ஒவ்வொருவரும் பட்ட மன உளைச்சலும் கொஞ்சமா? கிடந்தவுடன் கட்டையானார்கள். தாலாட்டுவதுபோல் கப்பல் ஆடி அசைந்து கொண்டிருந்தது. காலம் ஆமை வேகத்தில் மெல்ல கரைந்து கொண்டேயிருந்தது. குறட்டை ஒலி, கப்பலுக்கு 'பாரா' கொடுத்துக் கொண்டிருந்தது.

குமார் மட்டும் இமைக்கவே இல்லை. எங்கும் மையிருட்டு, சுற்றுமுற்றும் பார்த்த வண்ணம் குமார் மெதுவாகத் தலையைத் தூக்கினான். அடித்துப் போட்டதுபோல் அனைவரும் தூங்கிக் கொண்டிருந்தனர். இதுதான் சமயமென்று எழுந்தான் குமார். முன்னரே யோசித்து முடிவு செய்திருந்தபடியே

'லைஃப் பெல்டு' ஒன்றை மெதுவாக கழற்றினான். கப்பல் வேகமாக மேற்கு நோக்கிச் சென்று கொண்டிருந்தது. குமார் மெதுவாக, கிழக்கு பக்கம் வந்து சற்று இருட்டாக உள்ள ஓர் இடத்தில் நின்று கொண்டான். அவனை யாரும் கவனிக்கவில்லை. மெதுவாக 'லைஃப் பெல்'டை எடுத்து மாட்டிக் கொண்ட வண்ணம் குமார் கடலில் குதித்து விட்டான். கப்பல் சென்று கொண்டே யிருந்தது.



# 4. புதையல் கிடைத்தது

சுங்க இலாகாவுக்கு அழைத்து வரப்பட்ட சாந்தியின் கழுத்திலிருந்த முத்துமாலை பறிமுதலாயிற்று. அதன் விலை பல ஆயிரங்கள் இருக்குமாம். ஆமாம், சீமானாகத் திகழ்ந்த ராமசாமிப்பிள்ளை, தம் செல்வப் புதல்விக்குப் போலியையா வாங்கிப் போட்டிருப்பார்?

சாந்தியிடமிருந்து தேவையான தகவல்கள் எதுவும் சுங்க அதிகாரிக்குக் கிடைக்கவில்லை. ''அண்ணா கப்பலில் இருக்கிறான், அங்கே போகணும்'' என்பதையே திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தாள். பரிசோதனைகள் முடிந்து சாந்தி வெளி வருவதற்குள் கப்பலுக்கு ஏறும் ஏணி படகிலிருந்து அகற்றப்பட்டுவிட்டது.

அங்கிருந்த பிரதம அதிகாரி ஒருவர் தம்மால் இயன்ற வரை சாந்தியைச் சமாதானம் செய்து பார்த்தார், ''அடுத்த கப்பலிலேயே உன்னை ஏற்றி அண்ணாவிடம் ஒப்புவிக்கிறேன்'' என்று. ஆனால்

ஏமாற்றப்பட்ட பிஞ்சு உள்ளம் அதையெல்லாம் ஏற்றுக்கொள்ள மறுத்தது.

குழந்தையின் பெரும் அழுகையைக் கேட்டு அங்கே ஒரு கூட்டம் கூடிவிட்டது. அதைத் தொடர்ந்து போலீஸ் கெடுபிடி எழுந்தது. சாந்தியின் கண்கள் மட்டும் அத்தனை கூட்டத்திலும் யாரையோ வெகு ஆவலுடன் தேடிக் கொண்டிருந்தன. அது வேறு யாருமில்லை; திருமுருகு இருக்கிறானா என்றுதான் அவளது பேதைக் கண்கள் துழாவின.

ஆம்! அண்ணனை விட்டுப் பிரிந்த பிறகு அவளுக்குத் தெரிந்த – ஆறுதல் அளிக்கக்கூடியவர்கள் வேறு யார் இருக்கிறார்கள்? ஆனால் திருமுருகு அங்கே இருந்தால்தானே! அவன்தான் குழந்தைகள் கப்பல் ஏறிவிட்டார்கள் என்கிற நிம்மதியில் வீடு சென்றுவிட்டானே!


அத்தனை நேரம் அங்கே நடந்த எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்த ஒரு பிரமுகர் சாந்தியின் விஷயமாக மேலதிகாரியை அணுகினார். அவர் பெயர் கருணாகரன். நகரத்திலும், பர்மா அரசாங்கத்திடமும் செல்வாக்கு உடையவர். குழந்தையைத் தாம் தம்முடன் அடுத்த கப்பலில் அழைத்துச் சென்று உரியவர்களிடம் ஒப்படைப்பதாகக் கூறினார்.

உடனேயே சுங்க அதிகாரியும், "சரி...சரி..." என்று பலமாகத் தலையை ஆட்டித் தன் சம்

மதத்தைத் தெரிவித்து விட்டான். ஆம்! அவனுக்கு என்ன? இல்லாவிட்டால் அவனல்லவா அந்த அநாதைக் குழந்தையை அடுத்த கப்பல் கிளம்பும் வரை பாதுகாத்துத் தொலைக்க வேண்டும்!

''வா... அம்மா, குழந்தை!'' என்ற வண்ணம் சாந்தியின் கையைப் பிடித்துக் கொண்டார் கருணாகரன்.

யார் அழைத்தாலும், எங்கே அழைத்தாலும் அவள் போக வேண்டியவள் தானே?''



பெரியவரின் முகத்தை ஒரு கணம் உற்று நோக்கினாள் சாந்தி; அவருடைய பிடியில் ஒருவித ஆறுதல் – அமைதி இருப்பதாக அவளது மனம் அறிவித்தது. மௌனமாகப் பின் தொடர்ந்தாள். இருவரும் துறைமுகக் 'கேட்'டைக் கடந்து ஓர் அழகான பெரிய காரின்முன் வந்து நின்றனர்.

உள்ளே அழகிய – ஆனால் சற்று.வயதான ஓர் அம்மாள் உட்கார்ந்திருந்தாள். எஜமானரைக் கண்டதும் டிரைவர் காரின் கதவைத் திறந்து விட்டான்.

"இந்தா... பார்த்தியா? 'குழந்தை இல்லை இல்லை' என்று குறைப்பட்டுக் கொண்டிருந்தாயே, இந்தா பிடி, ஒரு குழந்தை" என்று தம் கண்களைச் சிமிட்டியவாறு சாந்தியை மனைவியின் கையில் ஒப்படைத்தார்.

ஒன்றும் புரியாமல் அந்த அம்மாள் ஒரு கணம் விழித்தாள். ஏதோ காரியமாக, கையை வீசிக் கொண்டு சென்ற கணவர்; கையில் குழந்தையுடன் வரும்போதே அவள் ஆச்சரியப் பட்டாள்; இப்போது அது இன்னும் அதிகமாயிற்று.

'துறைமுகத்தில் குழந்தைகளை ஏலம் போடுகிறார்களா; இல்லை கப்பலில் சரக்குகளுக்குப் பதில் குழந்தைகளாக இறங்குகின்றனவா?' எப்படியிருந்தால் என்ன? குழந்தையை ஒருகணம் உற்றுநோக்கினாள்? அதன் வசீகரமான தோற்றமும் அழகும்,

அவள் மனத்தைக் கொள்ளை கொண்டு விட்டன. மெதுவாக மடிமீது தூக்கி வைத்துக் கொண்டாள்.

"கற்பகம் — குழந்தையின் பெயரைக் கேளு. முதலில்" என்று குஷியோடு கூறிக்கொண்டே டிரைவர் பக்கம் திரும்பினார். மறு கணம் கார் அவரது வீட்டை நோக்கிப் பறந்துகொண்டிருந்தது.

வாஞ்சையுடன் குழந்தையின் தலையை வருடிய வண்ணம் "பாப்பா...உன் பெயர் என்னம்மா?" என்று அன்பு ததும்பக் கேட்டாள் கற்பகம்மாள். பெண் சிணுங்கினாள். வழி நெடுக அந்த அம்மாள் தான் பேசிக் கொண்டே வந்தாளேயொழிய சாந்தி வாயே திறக்கவில்லை. ஆனால் அழவும் இல்லை. அவளுடைய துக்கமெல்லாம் சிறுகச் சிறுக எப்படியோ அந்த நேரத்தில் மறந்து போயிருந்தது போல் இருக்கிறது.

கருணாகரனது மனைவியும் விடுவதாயில்லை. பிடிவாதமாக அவளிடம் பேசிக் கொண்டேதான் வந்தாள். இறுதியில் குழந்தையின் மனம் இளகி விட்டது. மெதுவாகத் தனது சிறிய வாயைத் திறந்து "சா...ந்...தி" என்று கூறிவிட்டு டப்பென்று மூடிக் கொண்டு விட்டாள். அதற்குள் காரும் பங்களாவின் வாசலில் வந்து நின்றது.

முதலில் கருணாகரன் இறங்கினார். பிறகு கற்பகம்மாளின் கையைப் பிடித்துக் கொண்டு சாந்தி மெதுவாகக் கீழே இறங்கினாள். காரிலிருந்து இறங்கி

யதும் அந்த அழகிய பங்களாவின் முன்னால் எழுதி யிருந்த கொட்டை எழுதுத்துக்களை, ஒவ்வொன் றாகக் கூட்டி வாசித்தாள்: "சாந்தி விலாஸ்."

"ஆ...ஆ...என்பேரு..." என்று கைகொட்டி ஆர்ப்பரித்தாள் சாந்தி.

"ஆமாம்...ஆமாம்...உன் பெயர்தான் எழுதி யிருக்கு. இது உன் வீடுதான். வா, உள்ளே போக லாம்" என்று கற்பகம் அவளை உள்ளே தூக்கிச் சென்றாள்.

கீழே இறங்கிய சாந்தி வீடு முழுவதும் சுற்றி வந்து ஒரு நோட்டம் விட்டாள். 'அடேயப்பா...' எவ்வளவு பெரிய வீடு. அழகான விளக்குகள்... எவ்வளவு பெரிய நிலைக் கண்ணாடி...பூத்தொட்டி ஆ! இதையெல்லாம் குமார் பார்த்தால்..."

அவ்வளவுதான். மறு நிமிஷம் சாந்தி 'வீல்' என்று பெரிதாக அழுது விட்டாள். ஆம்! அவளுக்கு அண்ணாவினுடைய நினைவு வந்து விட்டதே!

பாத்ரூமிற்குச் சென்றிருந்த கற்பகம்—மாடிக்கு உடைகளை மாற்றச் சென்றிருக்த கருணாகரன்— தட்டில் பிஸ்கட்டுகளை எடுத்துக் கொண்டிருந்த வேலையாள் — மூலைக்கொருவராக ஓடி வந்து சாந்தியை சூழ்ந்து கொண்டனர்.

"என்னம்மா சாந்தி! ஏன் இப்படித் திடீரென்று அழ ஆரம்பித்து விட்டாய்? நாங்கள் எல்லோரும் தான் இருக்கின்றோமே" என்று சமாதானம் செய்த

கற்பகம்மாள் கணவன் பக்கம் திரும்பிக் கோபமாகப் பார்த்தாள்.

"இப்படித்தான் குழந்தையைத் தனியாக ஹாலில் விட்டு விட்டுப் போவார்களா?"

"நீ இங்கிருந்தாயே என்றுதான் நான் போனேன்!"



"ஆமாம், நான் பாத்ரூம் போனேன். இந்த வேலைக்காரனுக்கு என்ன அவனுமா குழந்தையை விட்டுவிட்டு..." கற்பகம் வார்த்தையை முடிக்க வில்லை, கருணாகரன் சிரித்தார்.

''குழந்தைக்கு இடம் புதுசு, நமக்குக் குழந்தை புதிசு; அவர்களுக்கு இது எல்லாமே புதிசுதானே... எல்லாம் பழக்கத்தில் சரியாகி விடும்'' என்று கூறிக் கொண்டே வந்தவர், ''அதோபார் சாந்தி சிரிக்கிறாள், நம்முடைய சண்டையைப் பார்த்து விட்டு'' என்றார்.

''என் சமத்து வெல்லக்கட்டி — கரும்புக்கட்டி'' என்று பெண்ணை வாரி எடுத்துக் கொண்ட கற்பகம் எதிரிலிருந்த பிஸ்கட்டுகளை எடுத்து, சாந்தியின் வாயில் ஊட்டினாள்.

சாந்தியும் தட்டிலிருந்த ஒரு பிஸ்கட்டை எடுத்துக் கற்பகம் வாயில் ஊட்டினாள்.

''அப்பாவுக்கும் ஒண்ணு கொடு'' என்று தம் மனைவி சிபாரிசு செய்வதைக் கண்டதும் கருணாகரன் திடுக்கிட்டுப் போனார்.

'அப்...பா. அப்பா...' — அவரது வாய் முணுமுணுத்தது. மனைவியின் ஆசையும் துணிச்சலும் அவரை வியப்பில் ஆழ்த்தின.

''ஊ...ங்...ஆக்காட்டு'' என்று காதின் கீழ் வந்து கத்திய சாந்தியின் குரலைக் கேட்டு, கருணாகரன் சட்டென்று திரும்பினார். சாந்தி கையில் பிஸ்கட்டை மறைத்துக் கொண்டு, சிரித்த வண்ணம் நின்று கொண்டிருந்தாள்.

அன்று அவருக்கு அது பிஸ்கட்டாகவா சுவைத்தது? அமிழ்தமாக அல்லவா இனித்தது!

உலகத்தில் எல்லாமே இப்படி எதிர்பாராமல்தான் கிடைக்குமோ?

அன்று இரவு முழுவதும் கருணாகரன் தூங்கவே இல்லை. பர்மாவின் தயவை நாடிவந்த ஆயிரக் கணக்கான இந்தியர்களில் அவரும் ஒருவர். ஆகவே எல்லோரையும் போலவே அவரும் கப்பல் ஏற வேண்டியவர்தான்.

ஆனால் கருணாகரன் கெட்டிக்காரர். பர்மாக் காரர்களை நம்பி அவர் ஏமாந்துவிடவில்லை. தடைகள் இல்லாத காலத்திலேயே விழித்துக் கொண்டவர். தாம் சம்பாதிப்பதில் ஒரு பகுதியை அவ்வப்போது ஊருக்கு அனுப்பிவிடுவார். பிறந்த இடத்திலே பொருளையும்—பிழைக்கிற இடத்திலே செல்வாக்கையும் சேமித்துக்கொண்ட சமர்த்தர். அவர் வரைக்கும் ஏமாற்றம் இல்லை. ஆனால் ஏமாற்றப்பட்டவர்களுக்காகத் துக்கப்பட்டார். ஏமாந்தவர்களுக்காக அவரது உள்ளம் அழுதது. ஒருவேளை அந்த அழுகையின் எதிரொலி தானோ வீடு முழுவதும் அதிருவதுபோல் கேட்டுக் கொண்டிருக்கிறது?

"இந்தாருங்கள் — சீக்கிரமாகக் கீழே இறங்கி வாருங்களேன்" என்ற மனைவியின் அவசர அழைப்பைக் கேட்டுக் கருணாகரன் வாரிச் சுருட்டிக் கொண்டு ஓடோடியும் வந்தார்.

# 5. குமார் எங்கே?

சாந்தி அழுது அழுது மயங்கிக் கிடந்தாள். அவள் அருகே கற்பகம் கவலையே உருவாக உட்கார்ந்திருந்தாள். மனைவியின் அருகில் வந்து அமர்ந்துகொண்ட கருணாகரன், ''டாக்டருக்கு ஃபோன் செய்யட்டுமா?'' என்று கேட்டார். வேண்டாம் என்று கையமர்த்திய கற்பகம் சாந்தியின் முகத்தையே ஆவலோடு பார்த்துக்கொண்டிருந்தாள். நெற்றியில், லேசாக வெள்ளைத் துணியில் நனைத்திருந்த 'யுடிகொலன்' போடப்பட்டிருந்தது.

சிறிது நேரத்திற்குப் பின் சாந்தியின் உடலிலே அசைவு கண்டது. நினைவு வந்து, மீண்டும் கண் விழித்தாள்.

''என்னைக் கப்பலிலே கொண்டுபோய்விடு. அண்ணாகிட்டே போகணும்...ஊம்...ஊம்!''

அதே பல்லவி; அதே அழுகை! கற்பகம்மாள் கணவர் முகத்தைப் பார்த்தாள்.

''மத்தியான்னம் எல்லாம் சந்தோஷமாக இருந்தாளே'' என்றார் கருணாகரன்.

“ஒன்றும் சந்தோஷமாக இருந்துவிடவில்லை. கொஞ்சிப் பேசியும், சிரித்து ஏமாற்றியும் அண்ணன் நினைவை மறக்கடித்திருந்தேன். மருந்தின் வேகம் தீர்ந்துவிட்டது; இயற்கையின் தீவிரம் தலைதூக்கி விட்டது. அடுத்த கப்பலில் நாம் புறப்படுகிறவரையில் இங்கே இவளை வைத்துக்கொண்டு சமாளிக்க முடியாது. பெண் ஏங்கியே செத்துவிடுவாள்!”

“பின்னே என்னதான் செய்வது?”

“பேசாமல் பிளேனிலேயே மூட்டையைக் கட்டிக் கொண்டு புறப்பட்டு விடுவோம்!”

“அந்தக் கப்பல் சென்னை வந்து சேர நாலு நாளாகுமே!”

“ஆகட்டுமே! அதுவரை சாந்தி சென்னையில் நம்மோடு இருக்கட்டும்.”

“சரி...சரி...கப்பல் வருகிற அன்று துறைமுகத் திற்குப் போய் இவள் அண்ணனைச் சந்திக்கலாம் என்று சொல்லுகிறாயா?”

“சந்தித்து?”—

கருணாகரன் ஒரு கணம் தம் மனைவியைக் கூர்ந்து கவனித்தார். ‘சாந்தியை நாம் ஏன் அவள் அண்ணனிடம் ஒப்பிக்க வேண்டும்? நாமே வைத்துக் கொண்டு விட்டால் என்ன?’ என்கிற அவள் பேச்சின் உள் அர்த்தம் விளங்காமலே அவர் கேட்டார்.

"என்ன கற்பகம், இப்படி எதிர்க் கேள்வி போட்டுக் கொண்டேயிருக்கிறாய்? அண்ணன் கையில் ஒப்பிக்காமல்...இந்தப் பெண்ணுக்குத்தான் அப்பா அம்மாவையே சொல்லத் தெரியவில்லை. பட்டணத்திலே இருக்கிற சொந்தக்காரர்களையா நமக்குக் காட்டப் போகிறாள்? என்றார்.

"சரி...சரி...குழைந்தையைப்போய் ஏன் குற்றம் சொல்லுகிறீர்கள்? பெரியவர்களுக்கே தெரிவதில்லை?"

கற்பகம்மாள் வார்த்தையை முடிக்கவில்லை கருணாகரன் வியப்போடு மனைவியின் முகத்தைப் பார்த்தார். 'அதற்குள் இவ்வளவு பாசமும் பரிவும் அவள் உள்ளத்திலே பெருகி வளர்ந்து விட்டதா?' என்பதுதான் அந்தப் பார்வையின் பொருள். அவர் வாயே திறக்கவில்லை.

மறுகணம், "அம்மா!" என்று அழைத்தபடியே படுக்கையிலிருந்து எழுந்த சாந்தி, கற்பகம்மாளின் கழுத்தைக் கட்டிக் கொண்டதைக் கண்டதும், கருணாகரன் மானசிகமாகக் கன்னத்தில் போட்டுக் கொண்டார். பாசத்தின் வெற்றி அவரைத் தலை குனியவைத்தது.

"அம்மா!" என்ற குழந்தையின் அந்த ஒரு சொல்லில் கற்பகம்மாளின் உள்ளமெல்லாம் குளிர்ந்து விட்டது. பகலெல்லாம் தான் உபதேசம் செய்த, 'அம்மா போதனை' பயனற்றுப் போகவில்லை என அவள் உள்ளம் அகமகிழ்ந்தது.

சாந்தியோ, "என்னை அண்ணாகிட்டே எப்போ கூட்டிக் கொண்டு போகப் போறீங்க?" என்று விட்ட இடத்திலே பிடித்துக் கொண்டாள்.

"போகலாண்டா கண்ணு. நாளைக்கே நாம் எல்லோரும் ஏரோப்பிளேனிலே ஏறிப்போய் – உங்க அண்ணாவுக்கு முந்தி ஊருக்குப் போயிடலாம்" என்று மனைவிக்குச் சந்தர்ப்பமே கொடுக்காமல் கூறினார் கருணாகரன். குழந்தையின் அன்பைத் தம் மனைவியைவிடத் தாம் அதிகம் கொள்ளை கொண்டுவிட வேண்டும் என்கிற பரபரப்புத்தான் அது.

சாந்தி உடனே, "இதுகூட நம்மோட வருமா, அப்பா?" என்று கற்பகம்மாளைச் சுட்டிக் காட்டிக் கேட்கவும் இருவர் முகத்திலும் அசடு வழிந்தது. குழந்தையிடம் போய் அஃறிணை, உயர்திணை எல் லாம் எதிர்பார்க்கலாமா?

தம்மை, "அப்பா" என்று கூப்பிட்டுவிட்ட மகிழ்ச்சியில் மிதந்தார் கருணாகரன்.

சாந்தி கற்பகம்மாளின் முகத்தைத் திருப்பி, "ஏம்மா! அண்ணாவும்...ஏரோப்பிளேனிலே வரு வானா?" என்றாள்.

'ஆசையைப் பாரு' என்று எண்ணிய கற்பகம் மாள், "இல்லேம்மா, அண்ணாதான் கப்பலிலே வறானே" என்றாள்.

"ஏரோப்பிளேன் ஆகாசத்திலேதானே அம்மா உயரமாப் பறக்கும்?"

"ஆமாம்...ஆமா..."

"அப்போ அங்கே இருந்து பார்த்தா, சமுத்திரம், கப்பல் எல்லாம் தெரியுமில்லே?"

"ஓ! நல்லாத் தெரியுமே!"

"அப்போ, அண்ணாகூடத் தெரிவானா?"



போச்சுடா! சுற்றிச் சுற்றி மீண்டும் சாந்தி பழைய பல்லவிக்கே வந்து நின்றுவிட்டாளே!

"அப்படியெல்லாம் தெரியாது, சாந்தி" என்று தன் கணவர் எதேச்சையாகச் சொன்னதும் பிரமாதமாக ஆரம்பித்துவிட்ட சாந்தியின் அழுகையைச் சட்டென்று கற்பகம்மாள்தான் அணை போட்டுத் தடுத்தாள்.

''தெரியும், தெரியும்...சாந்தி உன் அண்ணாவை நாம் நன்றாகப் பார்க்கலாம்; கூப்பிட்டுப் பேசலாம். இந்த அப்பா சுத்த அசடு; ஒன்றும் தெரியாது'' என்றாள். சாந்தி சிரித்தாள்.

''குழந்தையிடம் எப்படிப் பேசவேண்டும் என்பதுதான் தெரிகிறதா?'' என்று குறும்பாகப் பார்த்து ஏளனமாகச் சிரித்தாள் கற்பகம்மாள்.

''நீதான் இருக்கிறாயே, பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்ந்தவள்!''

''பெறாவிட்டால் ... ஒன்...'' — கற்பகம்மாள் வார்த்தைகளை முடிக்கவில்லை. துக்கம் பீரிட்டுக் கொண்டு வந்துவிட்டது.

''சரி...சரி, ஏதோ வாய்தவறி வந்துவிட்டது. போகட்டும். குழந்தை இப்போதுதான் நிறுத்தியிருக்கிறாள்; நீ ஆரம்பித்து விடாதே'' என்று கூறிய வண்ணம் மாடிக்குச் சென்றுவிட்டார் கருணாகரன்.

அன்று அவருக்குத் தூக்கமே வரவில்லை, வேடிக்கையாகத்தான், தம் மனைவியிடம் அவர் அப்படிக் கூறினார். ஆனாலும், குத்திச் காட்டுவது போல் அந்த வார்த்தைகள் அவள் மனத்தை எவ்வளவு புண்படுத்தியிருக்கும் என்று அவரால் எண்ணிப் பார்க்க முடிந்தது. அதற்கு மேலும் தனியாக மாடியில் அவருக்கு இருப்புக் கொள்ளவில்லை. கீழே வந்து எல்லோருடனும் சேர்ந்து படுத்துக்கொண்டு விட்டார்.

அதிர்ஷ்டவசமாக இந்தியா செல்ல மாறுநாளே பிளேனில் அவர்களுக்கு டிக்கெட்டுகள் கிடைத்துவிட்டன. கருணாகரன் தம் மனைவி, சாந்தியுடன் பர்மா மண்ணுக்கு வணக்கம் சொல்லிவிட்டு விமானத்திலே பறந்து கொண்டிருந்தார்.

ஏரோப்பிளேனில் ஏறியதும் சிறிது பயந்த சாந்தி பிறகு தைரியமாகி விட்டாள். விமான உபசரிணிக்குச் சாந்தியை மிகவும் பிடித்துப் போய்விட்டது. தங்க விக்கிரகம் போன்ற சிறுமியை யாருக்குத்தான் பிடிக்காது? சாக்கலேட்டுகளை வாரி வாரிக் கை நிறையச் சாந்தியிடம் கொடுத்துக்கொண்டே இருந்தாள். எனவே, சாந்திக்கும் விமான உபசரிணியை மிகவும் பிடித்துப் போய்விட்டது.

விமானம் மேலே பறந்து கொண்டிருந்தது. கீழே கடலைப் பார்க்க முடியாதபடி சாந்தியை மடியில் கிடத்தி மெள்ளத் தட்டிக் கொடுத்தாள் கற்பகம்மாள்.

ஆம்; கடலைக் காட்டினால், கப்பலைக் காட்ட வேண்டும்; பிறகு அதில் அவள் அண்ணனைக் காட்டவேண்டும். வம்பு எதற்கு? நான்கு மணி நேரத்திற்குள் கருணாகரன் தம்பதிகள் தங்களது சென்னை வீட்டிற்கு வந்து சேர்ந்துவிட்டனர்.

சாந்திக்கு விளையாடுவதற்கு என்று சைனா பஜாரிலிருந்து நிறையப் பொம்மைகளை வாங்கி வந்திருந்தார் கருணாகரன். ஆனால் அத்தனை

யிலும் பெட்டியிலிருந்த ஏரோப்பிளேனைத்தான் சாந்தி முதலில் கையில் எடுத்துக் கொண்டாள்.

''நாம...இதிலேதானே அம்மா வந்தோம்?'' என்று கேட்டாள், கையிலிருந்த பொம்மையைக் காட்டி.

''ஆமாம்... ஆமாம்... இதிலேயேதான் வந் தோம்'' என்றாள் கற்பகம்மாள்.

''ஏன் அம்மா... சமுத்திரமே வழியிலே வரல்லே?''

''சமுத்திரம் வந்தது சாந்தி; ஆனால் நீதான் பார்க்காமெ தூங்கிப் போயிட்டே!''

''கப்பல் கூட வந்ததா?''

''ஆமாம்...கப்பலிலேயிருந்து உங்க அண்ணா கூடச் சொன்னான். 'நீங்க பத்திரமா சாந்தியை ஊருக்கு அழைச்சிண்டு போங்க. கப்பல் வந்ததும் நீங்க அவளையும் கூட்டிக் கொண்டு அங்கே வாங்க, நானும் வர்ரேன்னு' கூடச் சொன்னான்!''

''நிஜம்மாவா...?'' சாந்தி தன் இரு கண்களை யும் அகல விரித்துக் கொண்டு கேட்டாள்.

''பொய்யா சொல்லறேன், சாந்தி? பெரியவங்க பொய் சொல்லுவாங்களா?''

எட்ட நின்ற கருணாகரன் சிரித்தார். நடக்கிற வேடிக்கையை எல்லாம் அவர் ரசித்துக் கொண் டிருந்தார்.

‘‘அப்போ... ஏன் என்னை நீ எழுப்பி அண்ணாவைக் காட்டல்லே? நான் உன்கூட டூ... போ’’ என்று கூறிய சாந்தி விருட்டென்று கற்பகம் மாளின் பிடியிலிருந்து திமிறிக் கருணாகரனிடம் வந்து நின்றாள்.

சட்டென்று குனிந்து சாந்தியைத் தூக்கிக் கொண்ட அவர், ‘‘குழந்தையிடம் எப்படிப் பேச வேண்டும் என்பதுதான் தெரிகிறதா?’’ என்று மனைவியைப் பார்த்துப் பதிலுக்குப் பரிகசித்தார்.

சாந்தியின் முகத்தைத் தம் பக்கம் திருப்பிய வண்ணம், ‘‘இதோ பார்...இந்த அம்மாகூட நீ இனிமே பேசாதே. கப்பல் வந்ததும், நீ தூங்கினாக் கூட உன்னை எழுப்பி அண்ணாகிட்டே கூட்டிக் கொண்டு போறேன். எங்கே எனக்கு ஒரு முத்தம் கொடு’’ என்று கொஞ்சியபடி ஓரக் கண்ணால் மனைவியைப் பார்த்தார். கற்பகம்மாள் அங்கே இல்லை.

ஆம், சாந்தியுடன் கொஞ்சிக் கொண்டிருந்தால் போதுமா? கொஞ்சம் போனால் வயிறு கெஞ்ச ஆரம்பித்துவிடுமே! உள்ளே துரிதமாகச் சமையல் வேலைகளில் ஈடுபட்டிருந்தாள் கற்பகம்மாள்.

நான்கு நாளும் நான்கு நிமிஷங்களாக ஓடிப் போய் விட்டன. பொழுது விடிந்தால் கப்பல் வந்து விடும். அதில் சாந்தியின் அண்ணனும் வருவான். பிறகு?

மீண்டும் பழைய சிந்தனை விரிந்து படம் எடுத்தது. அன்று இரவு முழுவதும் கற்பகம்மாள் தூங்கவே இல்லை.

'என்ன ஆனாலும் சரி, சாந்தியை விடக் கூடாது. வேண்டுமானால் அவள் அண்ணனையும் இங்கேயே அழைத்து வைத்துக் கொண்டு விடுவது' என்கிற ஒரு முடிவுக்கு அவள் மனம் வந்து விட்டது.

பொழுது விடிந்தது. குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னதாவே கருணாகரனும் கற்பகம்மாளும் சாந்தியை அழைத்துக் கொண்டு துறைமுகத்திற்கு வந்துவிட்டனர்.

கப்பல் வந்தது. விதம் விதமான மனிதர்கள் இறங்கியவண்ணமிருந்தனர். அதில் பாதிக்குமேல் கருணாகரனுக்குப் பார்த்த முகங்களாகவே தோன்றின. ஆனால் அதே முகங்களை இன்று அவரால் அரை நிமிஷம் கூட நிமிர்ந்து பார்க்க முடியவில்லை.

வாழ்க்கையே பாலைவனமாகி, வாழ்வே வேம் பாகி அல்லவா அதனை பேரும் வருகிறார்கள்? உடைமைகளையெல்லாம் பிடுங்கிக் கொண்டனர். உழைத்து உழைத்துச் சக்கையான உடல்தான் அவர்களுக்குச் சொத்து. அதை மூலத் தனமாகக் கொண்டுதான் இனிமேல் அவர்கள் புது வாழ்வை ஆரம்பிக்க வேண்டும்!

கனவுலகிலே சஞ்சரித்துக் கொண்டிருந்த கணவரின் கரத்தைப் பிடித்து உலுக்கினாள்

கற்பகம்மாள். "என்னங்க...கப்பல் முழுவதும் காலி யாகிக்கிட்டே இருக்கு, நம்ம பையனைக் காணோமே?"

சட்டென்று விழித்துக் கொண்டார் அவர். "நீ இதுவரை நன்றாகப் பார்த்துக் கொண் டேதானே வந்தாய்?" — தம்மீதே நம்பிக்கையில் லாமல்தான் அவர் அப்படிக் கேட்டார்.

"ஆமாம்...சாந்தியும் நானும் வருகிற ஒரு பையன் விடாமல்தான் பார்த்துக் கொண்டே வந் தோம். இதுவரை போனவர்களில் அவளுடைய அண்ணா இல்லவே இல்லையாம்!".

சட்டென்று கருணாகரன் ஒரு முடிவுக்கு வந் தார். குழந்தையின் மனத்தை வீணாகக் கலவரப் படுத்தக் கூடாது அல்லவா?

"சரி, நீ சாந்தியை அழைத்துக்கொண்டு காரில் போய் இரு. மீதமிருப்பவர்களையும் பார்த்துவிட்டு, நான் காப்டனைச் சந்தித்து விஷயத்தைத் தெரிந்து கொண்டு வருகிறேன். ஆமாம்... பையனின் பெயர் என்ன?... குமார்தானே?" என்று இடையே ஒரு சந்தேகத்தையும் தீர்த்துக்கொண்டு உள்ளே சென் றார். ஆனால் குமாரைப்பற்றிக் கப்பல் அதிகாரியின் மூலம் அவர் அறிந்த செய்தி—

கருணாகரனுக்கு ஒரு கணம் இருதயமே சுக்கு நூறாகச் சிதறி விடும்போல் இருந்தது. குமார் யாரும் அறியாமல் கடலில் குதித்து விட்டானாம்!

காப்டன் அவரிடம் கூறிய செய்தி இதுதான் :

“கப்பல் புறப்பட்டதிலிருந்தே அந்தப் பையன் மிகவும் கலாட்டா செய்து கொண்டிருந்தான். தன் தங்கையில்லாமல், தான் மட்டும் வரமுடியாது என்று அடம் பிடித்தான். பிறகு மற்றப் பிரயாணிகள் எல்லாம், ‘அடுத்த கப்பலில் உன் தங்கை பத்திரமாக வருவாள்’ என்று பெரிதாகச் சமாதானம் செய்த பிறகு இரவுச் சாப்பாட்டுக்கு இசைந்தான். மாலையில் அவன் கண்டிப்பாக டீ குடிக்க மறுத்துவிட்டான். அதனால் இரவு நன்றாகச் சாப்பிட்டான். மறுநாள் காலையில் எல்லோரும் விழித்துக் கொண்ட போது, பையனைக் காணவில்லை. அவன் கடலில் குதித்துவிட்டான்போல் இருக்கிறது! எதிரே மோட்டார்ப் படகு வந்ததோ, என்னவோ! குதித்திருக்கிறான்!”

“அதெப்படிக் குதிக்க முடியும்?”

“நீந்திப் போகலாம் என்ற அசட்டுத்தனம்!”

கருணாகரன் திகைத்து நின்றார்.

# 6. பெரியவர் சொன்ன கதை

கப்பல் காப்டன் கூறியதைக் கேட்ட கருணாகரன் அப்படியே இடிந்து போனார். கப்பல் ஏறிய அன்று இரவுச் சாப்பாட்டுக்குக் குமார் வந்ததையும் தங்களுக்கெல்லாம் சாப்பாட்டின்போது மிகவும் உதவி செய்ததையும் காப்டன் வெகு உருக்கமாகக் கூறினார். 'இவ்வளவு நல்ல பையன், இப்படி அநியாயமாக அவசரப்பட்டு விட்டானே' என்று வருத்தப்பட்டார்.

ஆனால் இதில் வேடிக்கை என்னவென்றால், ஒரு பகல் நேரப் பிரயாணத்திற்குள் சாந்தியின் அண்ணனை அன்று கப்பலில் வந்த அத்தனை பேரும் அறிந்து வைத்திருந்தனர். 'அந்தக் குறுகிய காலத்திற்குள்தான் அவன் எத்தனை பேருடைய உள்ளங்களைக் கவர்ந்து விட்டான்!' என்று கருணாகரன் வியந்தார். எல்லோரையும்விட குமாருடன் முதலில் பழக்கமான பெரியவர்தான் கருணாகரனைக் கண்டதும் அழுதே விட்டார்.

கப்பலிலிருந்து சாந்தியைப் பர்மாவில் இறக்கி விட்டது முதல், அன்று இரவு குமாரைத் தம் அருகில்

படுக்கப் போட்டுக் கொண்டதுவரை அவர் விவரித்தார். அவன் எல்லோருக்கும் உணவு பரிமாறியதையும், படுக்கை விரித்துக் கொடுத்ததையும் சொல்லி வருந்தினார்.

"காலையில் கண் விழித்ததும், முதலில் அவனைத்தான் தேடினேன். பக்கத்தில் அவனைக் காணவில்லை. பிறகு என்ன சொல்ல இருக்கிறது சார்? கப்பலில் இருந்த எல்லோரும் என்னவோ என்னைத்தான் பெரிதாகத் துக்கம் கேட்டுக்கொண்டே வந்தார்கள்" என்று கூறிக் கொண்டு வந்தவர் சட்டென்று பேச்சை நிறுத்திக் கருணாகரனை ஒரு கணம் உற்றுப் பார்த்தார்.

"ஆமாம், நீங்கள் யார்... சொல்லவே இல்லையே! குமாருடைய மாமாவோ?"

கருணாகரன் லேசாகச் சிரித்தார். "நீங்கள் குமாருக்கு என்ன வேண்டும்?" என்று ஓர் எதிர்க் கேள்வி போட்டார். பெரியவர் மௌனம் சாதித்தார்.

"அந்த உறவுதான் எனக்கும் அவன்! பர்மாத் துறைமுகத்திற்கு ஒரு காரியமாக மனைவியுடன் வந்திருந்தேன். அப்போது குமாரின் தங்கை சாந்தி சுங்கச் சாவடி வாசலில் அழுதுகொண்டு நின்றிருந்தாள். எங்களுக்குக் குழந்தைகள் இல்லை. அந்தப் பெண்ணைப் பார்த்ததும் ஏதோ ஒருவிதப் பாசம் ஏற்பட்டு விட்டது. அடுத்த கப்பலில் நாங்களும் புறப்படுவதாக இருந்தோம். சுங்க அதிகாரியிடம்

சொல்லிச் சாந்தியை எங்களுடன் அழைத்துச் சென்றேன். ஆனால் அடுத்த கப்பல் கிளம்பும் வரை அவளை வைத்துக் கொண்டு சமாளிக்க முடியவில்லை.

"உடனே அண்ணாவிடம் போயாக வேண்டும்" என்று அடம் பிடித்தாள்; அழுதாள். உடனே நாங்களும் பிளேனிலேயே இவளுக்காகப் புறப்பட்டு இங்கே வந்து கப்பலை எதிர்நோக்கிக் காத்திருந்தோம்.

"குழந்தை இப்போது என் மனைவியுடன் காரில்தான் வெளியே இருக்கிறாள். கப்பலில் வருகிற தன் அண்ணாவை வரவேற்க நேற்று ராத்திரியிலிருந்தே அவள் சரியாகத் தூங்கவில்லை. காலையில் எங்களுக்கு எல்லாம் முன்னதாகவே எழுந்திருந்து விட்டாள். இனி இப்போது இந்தப் பயங்க்ரச் செய்தியை எப்படி ஐயா, நான் போய்ச் சாந்தியிடம் சொல்லுவேன்?" என்று கருணாகரன் தாங்க முடியாத துக்கத்தோடு கூறிக்கொண்டு வரும்போதே பெரியவர் குழந்தைபோல் தேம்பித் தேம்பி அழுது விட்டார்.

"விதி என்னமாகத்தான் ஐயா விளையாடுகிறது? ஆனால் அதை அதன் போக்கில் விடாமல் மனிதன் மாற்ற முயற்சி செய்யும்போதுதான் ஐயா, எல்லா விபரீதங்களும் நேருகின்றன. குமாரிடம் அடிக்கடி, 'உன் தங்கைக்கு ஓர் ஆபத்தும் வராது. அவள் சௌக்கியமாக அடுத்த கப்பலில் வந்து சேரு

வாள்' என்று வழி நெடுக உபதேசம் செய்து கொண்டே வந்தேன். என் பேச்சைக் கேட்டு, கடவுள்பேரில் நம்பிக்கை வைத்துப் பையன் பேசாமல் எங்களுடன் வந்திருந்தால் காரியங்கள் இப்போது எவ்வளவு சுபமாக முடிந்திருக்கும்...ஆனால்! தெய்வ சங்கல்பத்தை மாற்ற நாம் யார்?'' என்ற பெரியவர், இறுதியில் கருணாகரனைத் தனியே அழைத்துச் சென்று ஒரு யோசனை கூறினார். அதைக் கேட்டதும் கருணாகரனின் முகம் மலர்ந்தது.

''ஆம்! இதைத் தவிர வேறு என்ன பதில் சொன்னாலும் சாந்தி கேட்க மாட்டாள். அவளைச் சமாதானம் செய்வதற்கு இந்த ஒரே வழிதான் இருக்கிறது'' என்று பெரியவரிடம் விடை பெற்றுக் கொண்டு நேராகத் தம்முடைய காரை நோக்கி நடந்தார் கருணாகரன்.

'சற்று நேரத்திற்கெல்லாம் யாரோ ஒரு பையனைத் தன் கணவர் அழைத்துக்கொண்டு வரப்போகிறார். அவன் எப்படியிருப்பான்? கறுப்பா – அல்லது சாந்தியைப்போலவே நல்ல சிவப்பா'— என்றெல்லாம் கற்பனை செய்துகொண்டிருந்த கற்பகம்மாள் ஏமாந்தாள். அண்ணனில்லாம் வெறும் கையை வீசிக்கொண்டு வரும் கருணாகரனைப் பார்த்துச் சாந்தியும் ஏமாந்தாள். ஏக காலத்தில் இருவர் மனமும் படபடத்தன. ஏன் எல்லோரையும்விட கருணாகரனின் மனமும்தானே அடித்துக் கொண்டிருந்தது! ஏதோ பயங்கரக் குற்றவாளியைப் போல்

அல்லவா உள்ளூற நடுங்கியவண்ணம் அவர் அவர் களை நோக்கி வந்துகொண்டிருந்தார்!

* * *

**அ**ன்று அமாவாசை கழிந்த எட்டாம் நாள். பின் நிலவுக் காலம், கப்பலிருந்து லைஃப் பெல்டை மாட்டிக் கொண்டு குமார் கடலில் குதித்தான் அல்லவா? ஒருகணம் அவனுக்கு இந்த உலக நினைவே இல்லை. கரிய நிறக் கடலில், கும்மிருட்டில் குதிப்பதென்றால் அதற்கு எவ்வளவு மனோ தைரியம் இருந்திருக்க வேண்டும்? என்னதான் 'ரப்பர் கச்சை' இருந்தாலும் அதுஒரு புதிய அநுபவம் தான் அல்லவா?

ஆனால் குமார் உயிரை லட்சியம் செய்யாமல் தான் இந்தக் காரியத்தில் இறங்கினான். கப்பலில் இருக்கிற எவர் கண்ணிலும் பட்டுவிடக் கூடாதே என்கிற ஒரே பயம் – சகோதரியை எப்படியாவது சந்திக்க வேண்டும் என்கிற ஒரே ஆவல் – இரண்டும் சேர்ந்து கடலைக் குளம் எனக் கருதி அவனைக் குதிக்கச் செய்தன.

வட்டவடிவமான அந்த ரக்பர்க் குழாயின் மத்தியிலே உடலையும், மேலே கைகளையும் போட்டு அணைத்தவண்ணம்; ஓர் அபூர்வ ஜந்துவைப்போல் குமார் கடலிலே மிதந்து கொண்டிருந்தான். சற்றுக் கை சோர்ந்து, பிடி நழுவினாலும், கடலின் அதலா பாதாளத்திற்குச் சென்றுவிடுவான். என்ன இருந்தாலும் குமார் சிறுவன் தானே! எத்தனை நேரம் தான் அந்தப் பயங்கரமான கடலில் அப்படி அயராமல் அவனால் மிதக்க முடியும்?

ஆனால் வீரத்திற்கு வயதில்லை என்பதைக் குமார் நிரூபித்தான். நெஞ்சிலே வைரம் பாய்ந்தது போன்ற உறுதியும், கொள்கையில் ஒரு திடமான லட்சியமும், உள்ளத்திலே பிறந்துவிட்டால் எந்த அற்புதங்களும் நிகழலாம். அதற்கு வயது ஏது? பயிற்சி ஏது? தைரியம் தானாகப் பிறந்துவிடாதா? எதற்கும் துணிந்து விட்டவனுக்குக் கடல் என்ன — கரை என்ன?



குமாருக்கும் கப்பலுக்கும் இடையே உள்ள தூரம் வளர்ந்து பெருகிக் கொண்டே வந்தது. குமாரை

விட்டுக் கப்பல் மேற்கு நோக்கி வெகுதூரம் சென்று விட்டது. கார்த்திகையின்போது ஆற்றிலே அகல் விளக்கேற்றி மிதக்கவிடுவார்களே; அது போல் தூரத்தே கரிய இருளில் கப்பல் விளக்குகள் தண்ணீரிலே மிதப்பதுபோல் இருந்தன!

அந்த ஒளிக் கூட்டங்களையே பார்த்தபடி இருந்தான் குமார். இப்படிக் குதிக்காவிட்டால் அவனும் அந்தக் கப்பலில் அத்தனை தூரம் சென்றிப்பான் அல்லவா?

நம்பிக்கை என்னும் ஒளியே மறைந்துவிட்டாற் போல் சட்டென்று ஒரு திருப்பத்தில் கப்பலின் விளக்குகள் திடீரென்று மறைந்துவிட்டன, ஆனால் அதே சமயத்தில் வானத்தில் நிலாப் பூத்தது. குமாரின் உள்ளத்திலும் நம்பிக்கை பொங்கி வழித்தது.

வரவர நிலவின் ஒளி பெருகிக் கொண்டே வந்தது. சிறிது நேரத்திற்கெல்லாம் கருங்கடல் பாற் கடலாகக் காட்சியளித்தது. காற்றின் போக்குக்கு ஏற்பக் கைகளைத் துழாவியும், கால்களை உதைத்தும் கடலைக் கலக்கிக் கொண்டிருந்தான் குமார். கால்களிலே சிறிதும் பெரிதுமான மீன்கள் கொத்திக் கொத்திப் பார்த்துவிட்டுத் திரும்பியவண்ணம் இருந்தன. தூரத்திலே அவனைவிடப் பெரிய மின்கள் தண்ணீருக்கு மேலே நன்றாக எழும்பி எழும்பித் துள்ளிக் குதித்தபடி இருந்தன. இந்தக் காட்சிகளை எல்லாம் பார்த்து ரசிக்கும் நிலையிலா அப்போது இருந்தான்?

ஆழமான கடலில் மிதக்கும் ஓர் அபூர்வ பிராணியைப்போல் தன்னையே ஒருகணம் அவன் பார்த்துக் கொண்டான். சட்டென்று ஏனோ அவனைப் பயம் பீடித்தது. இருட்டிலே இருந்த அவனது தைரியத்தையெல்லாம் ஒளி விரட்டி விட்டது. காலும் கைகளும் துவண்டு விட்டாற்போல் இருந்தன. கரை எங்கே இருக்கிறது என்றே அவன் கண்களுக்குப் புலப்படவில்லை.

'சரி! அநாதையைப்போல் நடுக்கடலில் செத்து மிதக்க வேண்டியதுதான். எல்லோருடனும் கப்ப லில் சென்றிருந்தால் – அடுத்த கப்பலில் சாந்தி வரு வாள் என்கிற நம்பிக்கையாவது இருந்தது. இப் போது அத்தனையும் மண்ணாயிற்று. பெரியவர் களின் பேச்சைக் கேட்காமல் போனதற்குத் தண் டனை வேண்டாமா? அதோ அந்தப் பெரிய மீன்கள் நம்மைத் தின்று பசியாவது ஆறட்டும்' என்று ஓர் எழுப்பு எழும்பினான்; வட்டவடிவமான ரப்பர் பெல்டின் ஒரு பகுதியில் தலையை வைத்துக் கொண் டான்; முன் பக்கம் மறுபாதியில் கால்களை நீட்டி மெத்தையிலே படுப்பதுபோல் கைகளை விரித்துக் கொண்டு கண்களை மூடினான். நடுவிலே அவனது முதுகில், அவ்வப்போது அலைகள் லேசாக மோதித் தட்டிக் கொடுக்க, அவன் தன் நினைவிழந்தான்.

## 7. கள்ளத் தோணி!

கீழ் வங்காளக் குடாக் கடலில், நடு நிசியில் ஒரு படகு கிழக்கு நோக்கிச் சென்றுகொண்டிருந்தது. வானத்து விளக்கைத் தவிர அந்தப் படகிலே வேறு விளக்கு இல்லை.

லைஃப் பெல்டை மரணப் படுக்கையாக மதித்து அதன்மீது உயிரைவிடக் கண்களை மூடிய குமார் திரும்பக் கண்களை விழித்தபோதுத்தான் ஒரு படகில் இருப்பதை உணர்ந்தான். இரண்டு கைகளாலும் துடுப்புகளைத் துழாவிய வண்ணம் படகிலே இருந்த படகோட்டி, குமாரைப் பார்த்து லேசாகச் சிரித்தான்.

"என்ன பார்க்கிறே – எப்படிடா இங்கே வந்து படுத்துக்கிட்டோம்னா?"

குமார் பதிலே சொல்லவில்லை. அவனுக்கு என்ன நடந்திருக்கும் என்பதுதான் புரிந்துவிட்டதே. ஆனால் எல்லாமே அவனுக்குக் கனவு மயக்கமாகத் தான் இருந்தன.

கண்ணுக்கெட்டிய தூரம் வரை பெரிய சமுத்திரம். அதிலே ஒரு படகில் உல்லாசப் பயணமா?. மேலே வெண்ணிலா சுகமாக வீசிக் கொண்டிருந்தது. எத்தனை ஆயிரம் ரூபாய் கொடுத்தாலும்கூட இப்படி ஒரு சுகம் அநுபவிக்க முடியுமா? குமார் தன் கவலைகளையெல்லாம் ஒரு கணம் மறந்து சந்தோஷப்பட்டான். படகோட்டி துருவித் துருவிக் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் பொறுமையாகப் பதில் கூறினான். ஆனால் ஆதியோடு அந்தமாக உண்மையைத்தான் அவன் கூறினான்.

குமார் மிதந்து கொண்டிருந்த லைஃப் பெல்ட், படகின் ஒரு மூலையில் கிடந்தது. குமாரின் வயிற்றில் பசி கோரமாக உருவெடுத்துக் கொண்டிருந்ததை எப்படித்தான் அந்தப் படகோட்டி புரிந்துகொண்டானோ?

''தம்பீ, இங்கே வந்து இந்தத் துடுப்பைக் கொஞ்சம் தள்ளு'' என்று அழைத்தான். குமார் நிமிர்ந்து எழுந்தான்; முதுகெல்லாம் வலித்தது. பசி மயக்கம் அவனைக் கீழே தள்ளியது. ஆயினும் சமாளித்துக்கொண்டு படகின் குறுக்கே போடப்பட்டிருந்த மரக்கட்டையில் உட்கார்ந்து கொண்டான். படகோட்டியைப்போல் அவனால் துடிப்பு போட முடியாவிட்டாலும் மோசமில்லை; ஏதோ அப்படியும் இப்படியும் ஆட்டிக் கொண்டிருந்தான். பெயருக்குப் படகும் முன்னேறிக் கொண்டிருந்தது.

"தம்பி, உன் பேர் என்ன?" கலயத்தில் ஊறிக் கொண்டிருந்த சோற்றை ஒருதட்டில் போட்ட வண்ணம் படகோட்டி விசாரித்தான்.

"குமார்."

"வெறும் குமாரா?"

"இல்லை, காப்டன் குமார்!"

படகோட்டி சிரித்துக்கொண்டான். "ஆமாம் ஆமாம், பெரிய கப்பல்லேயிருந்து குதிச்சு; லைஃப் பெல்டிலே இல்லே சவாரி செய்துக்கிட்டு வந்திருக்



கிறே? இன்னும் கொஞ்ச நேரம் என் கண்ணிலே படாமல் இருந்தால்..."

"என்ன ஆகியிருக்கும் ஐயா?"

''என்ன ஆகியிருக்கும்? இப்போ நம்ம வயத்துக்குள்ளே போற மீனைப் போல ஒரு சுறாமீனுடைய வயித்துக்குள்ளே காப்டன் ஐயா போயிருப்பாரு'' என்று கேலி செய்தவண்ணம் கையிலிருந்த தட்டைக் குமாரிடம் நீட்டினான்.

துடுப்பைத் திரும்பவும் படகோட்டியிடம் கொடுத்து விட்டுத் தட்டை வாங்கிக்கொண்டான் குமார். அதில் தண்ணீர் விட்ட சோறும், ஏதோ ஒரு வியஞ்சனமும் இருந்தன. அந்த வாசனை, குமாரின் குடலைக் குமட்டியது. ஆயினும் அதை வெளிப்படையாகச் சொல்லி படகோட்டியின் மனதை புண்படுத்த அவன் விரும்பவில்லை.

''ஐயா, நீங்கள் சாப்பிடவில்லையா?''

''நீ முதலில் சாப்பிடு தம்பி! கலயத்திலே எனக்குச் சோறு இருக்குது, கவலைப்படாதே!''

''இந்தாருங்கள். நான் அதை எடுத்துக்கொள்கிறேன். நாம் இரண்டு பேருமே சேர்ந்து சாப்பிடுவோம்'' என்றபடி தட்டை அவனிடம் நீட்டினான் குமார். கலயமே ஊளைவாடை அடித்தது. ஆனாலும் பசி வேகம்; குமார் தன்னையும் மீறி இரண்டு பிடி வாயில் போட்டுக்கொண்டான். படகோட்டி அப்போதுதான் கவனித்தான்.

''என்ன தம்பி, வெறும் சோத்தைத் திங்கிறே? சைவமோ? வெங்காயம் வேணும்னாகொடுக்கவோ?''

''வேண்டாம் ஐயா...இதுவே போதும்!''

"ஹூம்...பெரிய இடத்துப் புள்ளே! இந்த ஏழை யோட சாப்பாடு பிடிக்குமா?" என்று தன் தட்டை காலி செய்து, கடலிலே ஒரு கழுவுக் கழுவி உள்ளே போட்டான் படகோட்டி.

குமாரும் கை கழுவியபடியே, "ஆமாம்...என் பேரைக் கேட்டீர்களே. உங்கள் பேரைச் சொல்லவே இல்லையே" என்றான்.

"எங்களுக்கெல்லாம் தனியான பேர் எது தம்பி? முக்குவன், செம்படவன், படகோட்டி...இப்படி எத்தனையோ..."

"இருந்தாலும் வீட்டிலே ஒரு பேர் வைக்காமலா இருப்பார்கள்? இதெல்லாம் தொழில் பெயராச்சே?" என்றான் குமார்.

"வச்சாங்க மன்னாடீன்னு...ஆனால் அந்தப் பேரைச் சொல்லிக் கூப்பிட இப்போ யாருக்கும் பிடிக்கலே." இதைக் கூறும்போது படகோட்டியின் கண்கள் நிலவொளியில் பளபளத்தன.

"அப்போ வேறன்ன பெயரைச் சொல்லிக் கூப் பிடுகிறார்கள்?"

"கள்ளத் தோணி!"

'கள்ளத் தோணி' - குமார் மனத்திற்குள்ளேயே ஒரு முறை சொல்லிப் பார்த்துக்கொண்டான். அதில் எவ்வித விசேஷப் பொருளும் அவனுக்கு விளங்க வில்லை; பெயர் என்னவோ—அவன் இதுவரை

கேள்விப்படாத புது மாதிரியாக இருந்தாலும் — 'அந் தோணி இல்லையா, அதைப் போல் இருக்கிறது கள்ளத் தோணி' என்று எண்ணியிருந்துவிட்டான். திடீரென்று குமாருக்கு ஒரு சந்தேகம் எழுந்தது. 'இப்போது நாம் எங்கே போய்க்கொண்டிருக் கிறோம்?' என்று. ஆனால் சட்டென்று அதைக் கேட்க அவனுக்குத் தைரியமில்லை. அதற்குள் நிலவு மறைந்தது. கிழக்கு வெளுத்து, பெரிய சிவப்பு வட்ட மாகச் சூரியன் கடலிலிருந்து தலையைத் தூக்கி அவர்களைப் பார்த்தான். படகு சந்தடி இல்லாத ஓர் இடத்துக்கு வந்து கரை தட்டியது.

குமாரின் கையைப் பிடித்துப் படகிலிருந்து இறக் கினான் மன்னாடி. பிறகு படகை ஒரு முளையில் இழுத்துக் கட்டிவிட்டு அதிலிருந்த வலையைத் தோளில் போட்டுக்கொண்டான். கலயத்தை எடுத்து கொள்ள குனிந்த குமாரை, ''அது வேண்டாம்... அங்கேயே இருக்கட்டும்'' என்று தடுத்துவிட்டான் கள்ளத்தோணி.

இருவரும் சிறிது தூரம் மணலிலே நடந்துசென்று ஒரு குடிசையின் முன்னே வந்து நின்றனர். கண்ணுக்கெட்டிய வரை ஒரே மணற்காடு. அதைத் தவிர வேறு குடிசை எதுவுமே இல்லை. அந்தக் குடிசையிலும் வேறு யாருமில்லை.

குமார் குடிசை முழுவதும் ஒரு கணம் நோட்டம் விட்டன். ஆனால் அதில் மீனவர்களுக்குச் சம்பந்த மில்லாத சாமான்களே இருந்தன. ஆணி, சுத்தியல்,


கள்ளிப்பெட்டி, கோணிப்பைகள், அரிவாள்...இப்படி இன்னும் ஏதேதோ!

குமாருக்கு ஒரே நாளில் நிலைமை முற்றும் தெளிவாக விளங்கி விட்டது. தான் இந்தியாவுக்கோ, இலங்கைக்கோ வேறு எந்தச் சீமைக்கோ போய் விடவில்லை. எல்லாம் பர்மா மண்தான். ரங்கூனிலிருந்து சில மைல்கள் ஒதுப்புறமான இடத்தில்தான் இருக்கிறோம் என்பது விளங்கி விட்டது. அப்படி விளங்கா விட்டாலும் மன்னாடி எதையும் மறைக்கவில்லை.

செம்படவர்கள் என்றால்—கடலிலே உழைத்து அதைக் கரையிலே விற்றுப் பணமாக்கிப் பிழைப்பார்கள். ஆனால் அதற்கு நேர்மாறு மன்னாடி. கரையிலே பாடுபட்டான். அதைக் கொண்டு நடுக்கடலிலே காசாக்கினான். போகும்போது படகு, பெட்டிகளையும் துணி மூட்டைகளையும் ஏற்றிச் செல்லும்; வரும்போது கற்றை நோட்டுகளாகத் திரும்பி வரும்.

நடுக்கடலில் எந்தத் தீவிலே இந்தப் பண்டமாற்று வியாபாரம் நடக்கிறது என்பது குமாருக்குச் சில நாள் வரைதான் தெரியாமல் இருந்தது. பிறகு 'கள்ளத் தோணி' அதையும் சொல்லி விட்டான்; அது மட்டுமா? எல்லாவற்றையுமே — தன் பிழைப்பையே சொல்லி விட்டான். அப்போதுதான் குமாருக்கும், 'கள்ளத் தோணி' என்பது இட்ட பெயரல்ல — பட்டப்பெயர் என்பது புரிந்தது.

மன்னாடி அதைத்தான் செய்து வந்தான். ஆனால் யாரும் அப்படி அவனைச் சொல்லிக் கூப்பிட்டுவிடக் கூடாது. கூப்பிட்டால் கோபம் வந்துவிடும்!



ரங்கூனிலிருந்து வைரமும், கடிகாரமும், பட்டும் பவளமும் பதுங்கியபடியே அந்தக் குடிசைக்குள் வரும். இரவோடு இரவாக அவை படகில் சவாரி செய்து, நடுக்கடலில் ஆவலோடு காத்து நிற்கும் 'ஸ்டீம் லாஞ்சு'க்குக் கைமாறும். படகின் பளு குறையும்; மன்னாடியின் மடி நிறையும். இதுதான் 'கள்ளத் தோணி'யின் வாழ்க்கை. இதிலே ஒரு முக்கிய பாகத்தைக் குமாருக்கும் கொடுக்க விரும்பி

னான் மன்னாடி. காரணம் அவனுக்கு அந்தச் சிறுவன் மீது அளவுக்கு மீறிய நம்பிக்கை விழுந்து விட்டதுதான்.

ஒருநாள் குமாரிடம் கற்றை நோட்டுக்களை எண்ணிக் கொடுத்தான். போலீசின் கண்களிலே மண்ணைத் தூவ வேண்டிய வித்தைகளையும் கற்றுக் கொடுத்தான் மன்னாடி.

இத்தனையையும் கேட்டுக் கொண்டிருந்த குமார் கடகடவென்று சிரித்தான். ''நான் என் தங்கையைத் தேடிக் கொண்டு வந்தேன். நீ அதற்கு உதவுவதாகச் சொன்னதால்தான் உன்னுடன் இருக்க ஒப்புக் கொண்டேன். இந்த வேலைக் கெல்லாம் வேறு ஆளைப் பார். ஐயா! என்னையும், 'கள்ளத் தோணி' என்று எண்ணிக்கொண்டாயோ?'' என்று குமார் கூறி முடிக்கவில்லை—

மறுகணம் — 'பளார்' என்று ஒரு பேயறை விழுந்தது அவன் கன்னத்தில்! அப்படியே சுருண்டு போய் மூலையில் விழுந்தான் குமார்.

# 8. வலையில் விழுந்த மீன்

பயங்கரமான அடியினால் மயக்கமுற்ற குமார் கண் விழிக்கச் சிறிது நேரம் ஆயிற்று. இப்படி ஒரு சம்பவம் நிகழும் என்று அவன் நினைத்துக்கூடப் பார்க்கவில்லை. நினைத்திருந்தால், ஒரு வேளை அவன் இப்படித் துடுக்காகப் பதில் சொல்லாமல் இருந்திருப்பான். அடியின் எதிரொலி இன்னும் அவன் காதில், 'உய்ங்...' என்று ரீங்காரம் செய்து கொண்டே இருந்தது.

கண் விழித்துத் தலையைத் தூக்கியதும் இன்னும் எத்தனை அடி விழப்போகிறதோ—அல்லது அந்த மன்னாடி மேலும் என்ன செய்யப் போறோனோ என்றுதான் குமார் முதலில் நினைத்தான்: ஆனால் அப்படி ஒன்றும் நேரவில்லை. மாறாக, மன்னாடிதான் கைகளில் முகத்தைப் புதைத்துக் கொண்டு விக்கி விக்கி அழுதான்.

குமாருக்கு முதலில் ஒன்றும் புரியவில்லை. பிறகு புரிந்தது. தன்னை ஆத்திரத்தில் அடித்து விட்டதற்காகத்தான் அவன் வருந்தி அழுகிறான் என்று.

மன்னாடியுடன் பழகிய மிகச்சில நாட்களிலேயே அவனது குணம் குமாருக்கு நன்கு புரிந்து விட்டது. சற்று முன்கோபியே தவிர; அவன் மற்றப்படி நல்லவன்தான்.

குமார் எழுந்து அவன் அருகில் சென்றான். முகத்திலிருந்த அவனது கைகளை விலக்கினான்.

''என்னை அடித்துவிட்டு, நீ ஏன் அழுகிறாய்?''

மன்னாடி அதற்கு முதல்நாள் இரவுதான் தன்னுடைய கதையைக் குமாருக்குக் கூறியிருந்தான்; அவனுக்கு இரண்டு மனைவிகள். மூத்தவள் இறந்தவுடன் அவள் தங்கையையே மணந்து கொண்டான். அவளோ ஒரே பணப் பைத்தியம். தன் கணவன் கடலில் மீனுக்குப் பதில் 'தங்கக் குஞ்சு'களாகப் பிடித்துக்கொண்டு வரவேண்டுமென்று விரும்பினாள். ''வலையைத் தூக்கிக் கொண்டு அலைகிறவரை உன் வீட்டுக்கு நான் வரப்போவதில்லை'' என்று சண்டை போட்டுக் கொண்டு பிறந்த வீடு சென்று விட்டாள்.

ஆம்! மீனைப் பிடித்துவந்து காசாக்கினால் சோறுதான் தின்னலாம். தங்க நகையும், சீனாப் பட்டும் கட்டிக்கொள்ள முடியுமா? மன்னாடி தனியனானான். மனைவிக்காகத் தொழில் மாறினான். முழுமூச்சாகக் காசு சேர்த்தான். ஆனால் செய்கிற தொழிலை மட்டும் யாரும் சுட்டிக் காட்டக் கூடாது. கோபம் வந்துவிடும்!

ஆம்! அவனுக்கே தெரியும் அவன் செய்கிற தொழிலின் மதிப்பு; ஆனால் அவன் தனக்காகவா அப்படிச் செய்கிறான்? மீன் பிடிக்கிற காலத்தில் தலை நிமிர்ந்து நடந்தான். மடியில் காசில்லா விட்டாலும், நாலு பேருக்கு மத்தியில் கண்ணியம் இருந்தது. தற்போது காசு இருந்தது—கௌரவம் இல்லை. வெளிச்சம் விரோதியைப்போல் அவன் கண் களைக் கூசவைத்தது. இருட்டிலேதான் அவன் ஆட்சி நடத்தவேண்டி யிருக்கிறது. எல்லாம் இந்தப் பேராசை பிடித்த பெண்டாட்டியினால் வந்த வினையல்லவா?

"மன்னாடி, எழுந்திரு. நான் இனிமேல் உன்னைக் கள்ளத் தோணி என்று கூப்பிட வில்லை."—சிந்தனைத் தீயில் வெந்து சாம்பலாகிக் கொண்டிருந்தவனைத் தட்டியெழுப்பினான் குமார்.

மன்னாடி நிமிர்ந்து பார்த்தான்.

"ஆமாம்! அந்தக் கடுதாசியையும் ரூபாவையும் இப்படிக் கொடு. இன்று நான் போய்விட்டு வருகி றேன். ஆனால் இந்த மாதிரி சட்டவிரோதமான குற்றங்கள் செய்வது எனக்குப் பிடிக்காது. திருட்டுத் தொழிலை நான் வெறுக்கிறேன்" என்றான் குமார். அவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த மன்னாடி சற்று ஆத்திரமாகவே கேட்டான்:

"சட்டவிரோதமான காரியம் உனக்குப் பிடிக்காதா? திருட்டுத் தொழில் செய்யறதை நீ வெறுக்கிறியா?"

“ஆமாம்...ஆமாம்!”

“அப்படியானா பர்மாவிலேருந்து உன்னை விரட்டினப்போ நீ கப்பலிலேருந்து சட்டத்துக்கு உட்பட்டுத்தான் குதிச்சியா? கப்பலிலே இருந்த லைஃப்பெல்ட்டை எடுத்துத் தோளிலே மாட்டிக்கிட்டு எல்லார்கிட்டேயும் சொல்லிக்கிட்டுத்தான் தங்கையைத் தேடி வந்திருக்கிறியா?”


குமார் அப்படியே பிரமித்துப்போய் நின்றுவிட்டான்.

“ஏன் பேசாமல் நிற்கிறே? உளவு தெரிஞ்ச ஒரு போலீஸ்காரன் கையிலே சிக்கினா உன் கதி என்ன? சோறு தண்ணீ இல்லாமெ பர்மாக்காரன் வருஷக் கணக்காக உன்னை உள்ளே தள்ளிடுவான்...”—மன்னாடி ஓரேயடியாக அளந்துவிட்டான்.

குமாருக்கு அப்படியே கிலிபிடித்துப் போய் விட்டது. மன்னாடியின் காலில் விழுந்தான். தவறு செய்யாத மனிதனே உலகத்தில் இல்லை என்பது எவ்வளவு உண்மையானது!

“நீ இல்லாமெ என்னாலே என் வியாபாரத்தைக் கவனிச்சுக்கிட முடியும். உன்னை நம்பி நான் இந்தத் தொழில்லே இறங்கல்லே. ஆனா நீ இப்போ என்கிட்டே வந்து சேர்ந்திருக்கிறே. உன்னாலே என் தொழிலைக் கொஞ்சம் தைரியமாச் செய்ய முடியும், அவ்வளவுதான். இதனாலே உனக்கும் ஆதாயம் இருக்குது. உன் தங்கையைப் பத்தியும் நீ

விவரம் தெரிஞ்சுக்கலாம். உன் தங்கை அகப்படலேன்னாலும் நீ இந்தியாவுக்காவது போய்ச் சேர நான் உதவி செய்வேன். இனிமே எது உன் இஷ்டமோ அப்படிச் செய். எனக்காக ஒண்ணும் நீ கள்ளத் தோணியாக வேணாம்; நல்ல தோணியாவே இரு!''



''மன்னாடி...மன்னாடி...பார்த்தாயா, மறுபடியும் என்னைக் கொல்லுகிறாயே! இதற்கு நீ என்னைக் கடலிலேயே விட்டு வந்திருக்கலாமே; காப்பாற்றியே இருக்கவேண்டாம் அல்லவா? எனக்கு உயிர்கொடுத்தவன் நீ. உனக்காக நான் உயிரைக் கொடுக்கிறேன். கொடு விலாசத்தை எடு பணத்தை'' என்று துரிதப்படுத்தினான் குமார்.

மன்னாடி பணத்தை எண்ணி ஒரு குழல் பைக்குள் போட்டுக் கொடுத்தான் அதைப் பெல்ட் போல

நிஜாருக்குள் வயிற்றின்மேலே வைத்துக் கட்டிக் கொண்டு குமார் புறப்பட்டான். முதல் இரண்டு நாட்களுக்கு மன்னாடி பின்னாலேயே வந்து; ஊருக்குள் போகும் குறுக்கு வழிகளையும், இரகசிய மார்க்கங்களையும் காட்டிவிட்டு வந்தான். தன்னுடைய ஏஜெண்டுக்கும் குமாரை அறிமுகம் செய்து வைத்தான்.

"ஆம்! இம்மாதிரி வியாபாரங்களுக்கெல்லாம் சிறுவர்கள் தான் ஏற்றவர்கள். அவர்களை எளிதில் யாரும் சந்தேகப்பட மாட்டார்கள்" என்றார் ஏஜெண்ட். குமாரும் பொறுப்போடு நடந்துக் கொண்டான். வியாபாரம் செழித்தது. மன்னாடி மகிழ்ந்து போனான். திடீரென்று ஒரு நாள் வழக்கத்திற்கு மாறாகக் குமார் திரும்பி வருவதற்கு நேரம் அதிகமாகி விட்டது. மன்னாடியின் மனம் மிகவும் கவலை கொள்ள ஆரம்பித்தது.

நகரத்துக்குள் சென்ற குமாரின் மனமும் அன்று நிலை கொள்ளாமல் தான் தவித்துக் கொண்டிருந்தது. அவன் வந்த காரியமென்ன? நடந்து கொண்டிருப்பதென்ன? இப்படிக் கள்ளக் கடத்தல் காரனுக்குக் கையாளாக இருக்கவா அவன் கப்பலிலிருந்து குதித்தான்? 'தங்கை சாந்தி என்ன ஆனாளோ என்று கவலைப்படாத நீயும் ஒரு சகோதரனா?' என்று அவனது உள்மனம் அவனைக் குத்திக் கேட்டது.

அதற்கு உடனே வெளிமனம், 'உன்னைக் கடலிலிருந்து காப்பாற்றி உயிர்க் கொடுத்த மன்னாடிக்காக நீ இதுகூடச் செய்யக் கூடாதா? சமுத்திரத்தைக் குட்டை மாதிரி எண்ணிக் குதித்து விட்டவனே; நீ அதில் செத்துப் போயிருந்தால் அப்போது உன் தங்கையை யார் காப்பாற்றுவார்கள்? அல்லது இத்தனை நாளாக நீதான் அவளைக் காப்பாற்றினாயா? அழ, அழ அவளைக் கரையிலே விட்டுவிட்டு நீ கப்பலில் புறப்பட்டு விடவில்லை? குதிக்கிறவன் அப்போதேயல்லவா, "தங்கையில்லாமல்! போக மாட்டேன்" என்று குதித்திருக்க வேண்டும். ஏதோ நீ பட்டகடனுக்கு அவனுக்கு சிறிது உழைப்பதால் ஒன்றும் தேய்ந்து போகமாட்டாய். அதற்குள் உன் தங்கை பர்மாவில் இருக்கிறாளா இல்லையா என்பதையும் அறிந்து கொண்டு விடலாம்!' என்று உபதேசம் செய்தது.

குமாருக்கும் அதுவேதான் சரியான யோசனையாகப் பட்டது. ஆனால் பர்மாவில் சாந்தியைக் கண்டுபிடித்து விடுவது மட்டும் அத்தனை சுலபமா என்ன? அல்லது அன்று சாந்தியை இறக்கி விட்ட அதே சுங்க அதிகாரியிடம் சென்று, "எங்கே என் தங்கை?" என்று தப்பி வந்த அவனால் கேட்க முடியுமா?

சட்டென்று மின்னல் வேகத்தில் அவனுக்கு ஒரு யோசனை தோன்றியது. அது வேறு ஒன்றுமில்லை. வேலைக்காரன் திருமுருகுவைச் சந்தித்து எல்லா

விஷங்களையும் சொல்லிவிடலாம் — சாந்தியும் அகப் படுவாள் என்கிற நினைப்புத்தான். ஆனால் அது மன்னாடியின் தலைக்கு எத்தனை பெரிய தீம்பாக வந்து முடியும் என்று எண்ணியதும் அதை ஒத்திப் போட்டான், குமார்.

—இப்படிச் 'சுவேடகோன் பையா' வின் வெளிப் பிராகாரத்தில் உட்கார்ந்து சிந்தித்துக் கொண்டிருந்த குமார், திடீரென்று எழுந்து நின்றான். பையாவின் உள்ளேயிருந்து, நாற்பது டன் எடையுள்ள வெண்கல மணியின் புனித ஓசை மிதந்து வந்து அவன் உட லெல்லாம் பரவிப் பரவசமூட்டியது. மறுகணம் இரு கரமும் தூக்கிப் புத்த பகவானை மானசிகமாக வணங்கிவிட்டு; விடு விடுவென்று வெளியே நடந் தான். அநியாயமாக வேண்டாத யோசனைகளில் பொழுதைக் கழித்து விட்டதற்காகத் தன்னையே நொந்துகொண்டு, பார்க்க வேண்டிய ஆளைத் தேடிப் போனான்.

நல்ல வேலையாக அந்த ஏஜெண்ட் குறிப்பிட்ட இடத்திலேயே குமாருக்காகக் காத்துக் கொண்டிருந் தார். குமாரைக் கண்டதுமே அவர் கவலையோடு, ''ஏன் தம்பி இன்று இத்தனை நேரம்? தோணிவர நேரமாயிற்றா அல்லது மன்னாடிக்குத் தான் உடம்பு சரியில்லையா?'' என்று சரமாரியாகக் கேள்விகளைக் கேட்டுக் கொண்டே கையை நீட்டினார்.

குமாரும் பதிலுக்கு, ''அதெல்லாம் ஒன்று மில்லை. எனக்குத்தான் மனமே சரியில்லை. மெது

வாக வந்தேன்'' என்று கூறியவண்ணம் பத்திரமாய் வைத்திருந்த நோட்டுக் கற்றைகளைச் சுற்றுமுற்றும் பார்த்தபடி அவரிடம் கொடுத்தான்!



அவற்றைப் பெற்றுக் கொண்ட ஏஜெண்ட், ''தம்பி, இந்த வயதில்தான் நாம் மனத்தை அலைய விடாமல் கவனமாகப் பார்த்துக் கொள்ள வேண்டும். அற்ப ஆசைகளுக்கெல்லாம் மனத்தில் இடமளித்து விடக்கூடாது'' என்று குமாருக்கு உறைக்கும் வண்ணம் 'இரு பொருள்'படப் பேசிவிட்டு முன்னே நடந்தார்.

குமாரும், 'அற்ப ஆசைகளையெல்லாம் துறந்து விட்டுப் பேராசைக்கு இரையாகும்' அந்தப் பெரிய மனிதரைப் பின் தொடர்ந்தான்.

சாதாரண நாட்களானால் ஏஜெண்டிடம் பணத்தைக் கொடுத்துக் குமார் ஓர் இடத்தில் காத்திருப்பான்; அவர் பண்டங்களை வாங்கிக் குமாரிடம் கொண்டுவந்து கொடுப்பார். ஆனால் அன்று ஒரு பெரிய தொகைக்கு வியாபாரம் நடத்த வேண்டியிருந்தது. ஆகவே குமாரையும் ஏஜெண்டுடன் கூடவே சென்று காரியத்தை முடித்துக்கொண்டுவரச் சொல்லியிருந்தான் மன்னாடி. குமாரும் அவனுடைய விருப்பத்திற்கு மறுப்புச் சொல்லவில்லை,

ஆனால் ஏஜெண்ட் தன்னை அழைத்துக் கொண்டு சென்ற இடத்தை அடைந்ததும் அவன் 'வீல்' என்று பெரிதாக அலற நினைத்தான். ஆனால் தாங்கமுடியாத பயத்தின் காரணமாக அவனது குரல் தொண்டைக் குழியிலேயே அழுந்தி விட்டது.

# 9. மடியிலே கனம்

உலகத்தில் யார் கண்ணியமானவர்கள், யார் நேர்மைக்காகப் பாடுபடுபவர்கள் என்று எண்ணினானோ; அவர்கள் எல்லாரும் அதற்கு மாறாக இருந்தார்கள். சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட வேண்டியவர் அதைக் காலால் மிதித்து நடப்பதைக் கண்டான் குமார். திருடனைப் பிடிக்க வேண்டிய அதிகாரியே திருடன் ஆவதைக் கண்டு அவன் திடுக்கிட்டான்.

ஆம்! அந்த ஏஜெண்ட் குமாரை அழைத்துச் சென்ற வீடு, யார் வீடு தெரியுமா? அவனுடைய உயிர் நண்பன் சுவானின் வீட்டிற்கேதான் அவர் அவனை அழைத்து வந்தார்: ஒரு கணம் குமாரின் தலை சுழன்றது. அப்படியானால் சுவானின் தந்தை ஒரு பதுக்கல் பேர்வழியா? கள்ள வியாபாரியின் மகன்தானா அவன் நண்பன்! இத்தனை படாடோபமாகக் காலம் கழிக்கும் சுவானின் தந்தை சேர்த்த சொத்துக்கள் எல்லாம் இப்படிக் குவிந்தவைதாமா? 'சீ'...என்று மனத்திற்குள்ளேயே நொந்து கசந்து கொண்டான் குமார்.

''தம்பீ! ஏன் வெளியில் நின்றுவிட்டாய்? வா உள்ளே போகலாம். அவரை உனக்கு அறிமுகம் செய்துவைக்கிறேன். இந்த ஊரிலே அவர் ஒரு பெரிய...'' என்ற ஏஜெண்டின் வார்த்தைகள் குமாரைச் சுயஉணர்வுக்குக் கொண்டுவந்தன.

''இருக்கட்டும்...பரவாயில்லை. நான் தெருவிலே நிற்கிறேன். நீங்கள் பேரத்தைச் சீக்கிரமாக முடித்துக் கொண்டு வந்து சேருங்கள்'' என்று ஏஜெண்டை அனுப்பி விட்டான்.

குமார் வாசலிலே சற்றுத் தள்ளி ஒதுப்புறமான ஓர் இடத்தில் நின்று கொண்டிருந்தான். நேரம் அப்போது பதினொரு மணி இருக்கும். குமாரின் இதயத்தில் மீண்டும் இயல்பான பழைய நினைவுகள் தலை தூக்கின. இந்நேரம் சுவான் நிச்சயமாக வீட்டில் இருக்க மாட்டான். பள்ளிக்கூடம் சென்றிருப்பான். தகப்பன் எப்படிப் பிழைத்தால் என்ன? பள்ளியில் தான் சுவானுக்கு எத்தனை மதிப்பு? தினம் ஒரு சட்டை போட்டுக் கொண்டு 'டீக்'காக வருவான். படிப்பிலும் நல்ல சூட்டிகை. விரைவில் படித்து முன்னுக்குவந்து பெரிய ஆபீசராகக்கூட ஆகிவிடுவான். ஆனால் தன்னுடைய படிப்பு?

இதை எண்ணிப் பார்த்ததும் குமாரின் கண்களில் கண்ணீர் பெருகிவிட்டது. 'தந்தையுடன் கல்வி போம்'—என்று எப்போதோ ஒரு புத்தகத்தில் படித்தது அவன் நினைவுக்கு வந்தது. ஆனால், இன்று தந்தையின் மரணத்துக்குப் பிறகு கல்வி

மட்டுமா போயிற்று? சொத்தும் போயிற்று; அவனு டைய அருமைச் சகோதரியே போய்விட்டாள். அவளைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று அவன் துடித்த துடிப்பென்ன? கடலில் கூட அல்லவா குதித் தான்? ஆனால் கண்ட பலன்? கள்ள வியாபாரம் படிந்தது. கண்ணான தங்கை? அவள் எங்கேயோ!

ஏஜெண்ட் வருகிறாரா என்று குமார் எட்டிப் பார்த்தான். அன்று, சுவானும் அவனும், மாறி மாறிப் போட்டோ பிடித்துக் கொண்ட இடம் அவன் கண்ணில் பட்டது. அந்த நினைவு அவன் மனத்தை வருத்தியது.

காமிராவைச் சுவானிடமாவது அப்போதே அவன் கொடுத்திருக்கலாம். அவனுக்குத் தன்னு டைய படமும், தனக்கு அவனுடைய படமும் என்றா வது ஒருநாள் கேட்டு வாங்கிக்கொள்ளலாம். 'பிக்னிக்' சென்ற இடத்தில் எடுத்த அபூர்வமான இயற்கைக் காட்சிகள், கூடவந்த நண்பர்கள் எல்லாம் இப்போது கூண்டோடு கைலாசம் போய்விட்டார்கள். காமிரா மட்டுமா? வீட்டிலிருந்து வெளியேறும்போது குடும்பத்தோடு உள்ள அந்தப் பழைய படத்தைத் தவிர ஒரு துரும்புகூட எடுத்துக்கொள்ள முடிய வில்லையே!...இதற்குள் ஏஜெண்டும் வந்துவிடவே, குமார் அவரைப் பின்தொடர்ந்தான். அவனும்கூட வராமற் போனதற்கு அவர் வருத்தப்பட்டுக் கொண் டார். அங்கு கிடைத்த சிற்றுண்டியையும் சைனா டீ யையும் பற்றி வானளாவப் புகழ்ந்தார். குமாருக்கு அவையெல்லாம் பழையவை.

ஓர் ஒதுப்புறமான இடத்தில் ஏஜெண்ட் கையி லிருந்த பொட்டலத்தைப் பிரித்தார்! சுவானின் வீட்டிற்குள் நுழைந்த கற்றை நோட்டுக்கள், வைரக் கற்களாகவும், தங்கபஸ்பமாகவும் உருமாறிக் காட்சியளித்தன. அதையெல்லாம் அவரிடமிருந்து பத்திரமாக வாங்கி இடுப்பில் செருகிக்கொண்டான் குமார்.

''மாலையில் குடிசையில் சந்திப்பதாக மன்னாடி யிடம் சொல்லு'' என்று ஏஜெண்ட் விடை பெற்றுக் கொண்டார். இருவரும் ஒரு சந்திப்பில் பிரிந்தனர்.

வழிநெடுகத் திருமுருகுவின் நினைவு அவனைக் குடைந்து கொண்டேயிருந்தது. ஆனால் அப்போது திருமுருகுவின் வீட்டிற்குப் போகக் குமாருக்குத் தைரியம் வரவில்லை. அதற்கு இரண்டு காரணங்கள் இருந்தன. முதலாவது அவனது மடியில் உயிருக்கு ஆபத்தான பொருட்கள் இருக்கின்றன; அவை மன்னாடிக்குச் சொந்தமானவை. அவைகளை பத் திரமாக மன்னாடி கையில் சேர்த்தாக வேண்டும். மற்றொன்று, அவன் அன்று குடிசையிலிருந்து புறப் பட்டுத் தனது காரியங்களை வழக்கப்படிச் சுறுசுறுப் பாகச் செய்யவில்லை. ஏனோ அவனது கால்கள் 'பையா'வை நோக்கி இழுத்தன. 'சுவேடகோன் பையா'வில் பாதிப் பொழுதைக் கழித்துவிட்டான். திட்டப்படி அவன் எப்போதோ குடிசைக்குத் திரும்பி யிருக்க வேண்டும்.

—'இத்தனை நேரம் மன்னாடி என்னைப்பற்றிக் கவலைப்படுவதை விட அதிகமாகச் சந்தேகம்தான்

பட்டுக்கொண்டிருப்பான்' இதை எண்ணியதும் குமாரின் நடையிலே வேகம் பிறந்தது. 'எப்படியும் திருமுருகுவின் வீட்டிற்கு நாளைபோய்விட வேண்டும். இல்லாவிட்டால் இந்த மன்னாடி சாந்தியைப் பற்றி ஒரு தகவலும் விசாரித்து வந்து சொல்லப்போவதில்லை' என்று எண்ணிக்கொண்டான்.

அகலமும், குறுகலும், நீளமும், குட்டையும், சத்தும் பொந்துமான தெருக்களையெல்லாம் கடந்து சென்றுகொண்டிருந்த குமார் ஒரு திருப்பத்திலே அப்படியே திடுக்கிட்டு நின்றுவிட்டான். தூரத்திலே ஒரு போலீஸ்காரன் வருவதை அவன் கண்டுவிட்டான். அவனது கைகள் இயற்கையாகவே உடைகளைச் சரிசெய்து கொண்டன. நெஞ்சு, பிடிபட்ட பட்டுப் பூச்சிபோல் படபடத்துக் கொண்டிருந்தது. ஆனால் அந்த ஜவான் வேறு எங்கும் திரும்பவேயில்லை. நேராகக் குமாரையே நோக்கி வந்து கொண்டிருந்தான்.

அப்போதுதான் எதிர்பாராத ஒன்று நடந்தது. வேகமாக வந்து கொண்டிருந்த குமார் கால் இடறித் தடாலென்று கீழே விழுந்தான். அதே சமயத்தில் அங்கே வந்த போலீஸ்காரன் அவனைத் தூக்கி நிறுத்தினான். குமாரின் நெற்றியிலும் முழங்காலிலும் நல்ல சிராய்ப்பு.

"இப்படியா கண்ணை மூடிக்கொண்டு தெருவில் நடப்பது?" என்று கடிந்துகொண்ட ஜவான் குமாரின்

நெற்றியைத் தடவி விட்டான். சட்டையிலும், நிஜா ரிலும் படிந்திருந்த மண்ணைத் தட்டிவிட்டான்.

இந்தக் காட்சியை எல்லாம் தூரத்திலிருந்து, மறைவாகப் பார்த்துக் கொண்டிருந்த இரு கண்கள், 'அடுத்த கணம் என்ன நேரப்போகிறதோ?' என்கிற பீதியைக் கக்கிய வண்ணம் இருந்தன. அந்த இரண்டு கண்களும் வேறு யாருடையவுமல்ல; மன்னாடியின்



கண்களேதான். குமார் குறிப்பிட்ட நேரத்தில் திரும் பாதிருக்கவே சந்தேகமும் பயமும் அடைந்து, தேடிக் கொண்டு புறப்பட்டுவிட்டான். ஆனால் வழியில் இப்படிக் குமார் தன் கண் எதிரிலேயே போலீஸ் காரனிடம் மாட்டிக்கொண்டு நிற்பான் என்று கனவு கூடக் காணவில்லையே! எனவே! 'அந்த இடத்தில்

தான் அரைக்கணம் இருந்தாலும் தொலைந்தோம்’ என்கிற கிலி மன்னாடியைப் பிடித்துக் கொண்டு விட்டது.

ஆம்! சட்டையைத் தட்டுகிற போலீஸ்காரன், இடுப்பைத் துழாவ எத்தனை நேரம் பிடிக்கும்? பொருள்கள் அவன் கையில சிக்கிக் குமாரும் தன் பெயரைச் சொல்லிவிட்டால் பிறகு கேட்கவேண்டுமா? மன்னாடி சிட்டாய்ப் பறந்துவிட்டான் குடிசையை நோக்கி. ‘எந்த நிமிஷம் போலீஸ் ஜீப் குமாரையும் ஏற்றிக் கொண்டு தன்னுடைய இருப்பிடத்தைத் தேடி வரப்போகிறதோ’ என்று அவன் இதயம் அடித்துக் கொண்டது. ஆனால் அப்படி நேர்ந்தால் குமாரைச் சொல்ல குற்றமென்ன இருக்கிறது? போலீசிடம் மாட்டிக்கொண்ட பரம்பரைக் கேடி கூட ஸ்டேஷனுக்குள் சென்று இரண்டு ‘லத்தி’ வாங்கினால் இல்லாததையெல்லாம்கூடக் கக்குவானே! பாவம், பையன் குமார் எம்மாத்திரம்?

மன்னாடி அசுரவேகத்தில் குடிசையிலுள்ள அபாயகரமான அல்லது சந்தேகம் ஏற்படும்படியான சாமான்கள் அத்தனையையும் எட்ட ஓர் இடத்தில் குழிதோண்டிப் புதைத்தான். கிழிந்த வலையொன்றையும், ஊசிநூலையும் குடிசையின் வாயிற்படியில் போட்டுவைத்தான். சற்று எட்ட இருந்த ஒரு மரத்தில் ஏறி உட்கார்ந்துகொண்டான்—எந்த நிமிஷம், எந்தத் திசையிலிருந்து குமார் ஜீப்பிலேறி வரப்போகிறானோ—என்று நாலாபக்கமும் பார்த்துக் கொண்டேயிருந்தான் மன்னாடி.

ஆனால் நீண்ட நேரத்திற்குப் பிறகு குமார் மட்டும் தனியாக அவனது குடிசையை நோக்கி வந்து கொண்டிருந்தான். மன்னாடியோ மரத்திலிருந்து இறங்கவேயில்லை.

ஆம்! அவன் இதிலெல்லாமா ஏமாந்து விடக் கூடியவன்? ஜீப்பும் — போலீஸும் தடபுடலாக வந்தால் ஆள் ஒளிந்து விடுவான் என்று ஆழம் பார்க்க முதலில் குமாரைத் தனியாக அனுப்பி யிருக்கலாமல்லவா? அவர்கள் சுற்றிலும் எங்காவது வந்து பதுங்கிக் கொண்டிருப்பார்கள். குமாரின் கையில் ஊதலைக் கொடுத்து அனுப்பியிருப்பார்கள். இந்த வியாபாரத்தில் யாரையாவது யாரேனும் நம்பு வார்களா? நம்புகிறவன் பைத்தியக்காரனல்லவா?

குடிசைக்குள் அடியெடுத்து வைத்த குமார் திடுக் கிட்டான். குடிசை தலைகீழாகப் புரண்டு கிடந்தது. காலிலே சுற்றிக் கொண்ட கிழிந்த வலையை ஒதுக்கி எறிந்து விட்டு வெளியே வந்த குமார், "மன்னாடி... மன்னாடி...!" என்று கத்தினான். அந்தப் பிராந்தியம் முழுவதும் அவனது குரலைப் பிரதிப் பலித்ததே தவிர வேறு எதிர்குரலும் எழவேயில்லை.

ஆம்! பதில் கொடுக்க மன்னாடிக்குப் பைத்தியமா பிடித்திருக்கிறது?

# 10. விடுதலை

மரத்திலிருந்த மன்னாடிக்குக் கைகால்கள் மரத்துப் போனதுதான் கண்ட பலன். அவன் எதிர் பார்த்த சம்பவங்கள் எதுவுமே நிகழவில்லை. குமார் குடிசைக்குள் நுழைந்ததையும், வெளியே வந்து தன்னைக் கூப்பிட்டதையும். மீண்டும் உள்ளே சென்றவன் திரும்பாததையும் கண்கொத்திப் பாம்பு போல் பார்த்துக் கொண்டேதான் இருந்தான். ஆகவே அதற்கு மேலும் போலீஸ் காத்திருந்து, எங்கிருந்தும் வந்துவிடப் போவதாக மன்னாடி எண்ணவில்லை.

தன் ஊகம் தவறு என்கிற முடிவுக்கு வந்து விட்ட மன்னாடி; மரத்தினின்றும் இறங்கினான். குமார் குடிசையினுள் படுத்துக் கிடந்தான்.

சட்டென்று அவனது இடுப்பைச் சென்று மெதுவாகத் துழாவினான். தூண்டில்காரனுக்குத் 'தக்கை' யில் தானே கண்? சாமான்கள் எல்லாம் பத்திரமாகப் பொட்டலத்துடன் இருந்தன. மன்னாடிக்குப் போன உயிர் அப்போதுதான் திரும்பி வந்தது.

நன்றியும், இரக்கமும் கலந்த குரலில், ''குமாரு...குமாரு...!'' என்று இரண்டு மூன்று முறை அழைத்தான். ஹு...ஹும்... அவன் கண்ணைத் திறக்கவே இல்லை.

பாவம்! பசி மயக்கம். காலையில் வெறும் நீராகாரத்துடன் வெளியில் போனவன். மடியில் எத்தனை ஆயிரம் இருந்தென்ன? மாற்றானின் பணம் — தனக்குச் சொந்தமில்லாத அதிலிருந்து எடுத்து ஒரு 'டீ'கூடக் குடித்திருப்பானா? இந்த வயசில் தன் சமூகத்தில் ஒரு பையன் இப்படி நடந்து கொண்டிருக்கிறானா? சே, கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்கள்தாம்.

மன்னாடி மனத்திற்குள்ளேயே வருந்தினான்: 'கடவுள் என்னுடைய வியாபாரத்துக் நல்ல கூட்டாளியைத் தான் ரப்பர் படகில் ஏற்றி அனுப்பி வைத்தார். நான்தான் வைத்து அநுபவிக்கக் கொடுத்து வைக்கவில்லை.

மளமளவென்று அடுப்பை மூட்டினான். சோற்றை வடித்துக் கீழே இறக்கி விட்டு குமாரைத் தட்டி எழுப்பி உட்கார வைத்தான்.

''உன்னை எங்கேயெல்லாம் தேடுவது? எத்தனை தரம் கத்துவது — எங்கே போயிருந்தாய்? இனி நீ எப்போது சமைத்து நான் சாப்பிடுவது? நான் செத்துத்தான் போகப் போகிறேன் போ!''— வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்த குமார், பசி வெறியில் பொரிந்து தள்ளினான்.

மன்னாடி சிரித்த வண்ணம் அவன் முதுகைத் தட்டிக் கொடுத்தான். ''நானா உன்னைப் பட்டினி போட்டுக் கொல்லறவன்? நல்லாப் பாரு'' என்று மூலையைச் சுட்டிக் காட்டினான்.

மன்னாடி இரண்டு தட்டை வைத்து அதில் சோற்றைப் போட்டான். உரித்த வெங்காயத்தைக் குமாருக்கும் — காய்ந்த கருவாட்டைத் தானும் வைத்துக்கொண்டு மோர்க் கலயத்துடன் உட்கார்ந்து கொண்டான்.

குமாருக்கு ஒரே கோபமாக வந்தது.''நீ முதலில் சாப்பிட்டு முடி, நான் வருகிறேன்'' என்று குடிசைக்கு வெளியில் வந்தான்.

''சரி... சரி... கோபிக்காதே தம்பி! மறந்து போனேன்'' என்று மன்னாடி தட்டிலிருந்த கருவாட்டை எடுத்து வெளியில் எறிந்து விட்டு வந்து குமாரை அழைத்தான்.

குமார், மன்னாடிக்கு நாலு வெங்காயத்தையும் இரண்டு பச்சை மிளகாயையும் எடுத்துப் போட்டான். சாப்பாடு முடிகிறவரை மன்னாடி வியாபாரத்தைப் பற்றி வாயே திறக்கவில்லை. அதன் பிறகுதான் குமாரின் கோபமும் மறைந்தது. மன்னாடி மெதுவாகப் பேச்சைத் துவக்கினான்.

''ஆமா... ஏன் இன்னைக்கு இத்தனை நேரம்?''

“முதலில் இதைச் சொல்... நான் வந்தபோது நீ எங்கேயிருந்தாய்... நான் கூப்பிடபோது நீ எங்கேயிருந்தாய்?”

“எல்லாம் உனக்காகத்தான்...”

“எனக்காகவா?”

“ஆமா... இல்லேன்னா உன் தங்கைக்காகன்னு வச்சுக்கயேன்!”

தங்கையின் பேச்சை எடுத்ததும் குமாரின் முகம் மலர்ந்தது. “என்ன... என்று ஆவலுடன் கேட்டான். மன்னாடி கூறினான் :

“துறைமுகத்திலே என்னோட கூட்டாளிங்க வேலை செய்யறாங்க. அவங்ககிட்டே விசாரிச்சேன். நீ சொன்னது போலவே அன்னைக்குக் கப்பல் லேருந்து முத்துமாலை காரணமா ஒரு பொண்ணை இறக்கினாங்களாம். உடனே கப்பல் புறப்பட்டுப் போயிட்டுது. அந்தப் பொண்ணு அழுகிட்டே யிருந்தா. பிறகு ஒரு பெரியவரு வந்து அதிகாரிங்க கிட்டே சொல்லி அதை அழைச்சுக்கிட்டுப் போனாராம். ஆனா அந்தப் பெரியவரு இப்போ இங்கில்லை. உன் தங்கையையும் குடும்பத்தோட அழைச்சுக்கிட்டு இந்தியா போயிட்டாராம்” என்று முடித்தான்.

குமாருக்கு மனத்திலிருந்த ஒரு பெரு பாரம் இறங்கிறது போல் இருந்தது. அதே சமயம், ‘நான் அப்படியே அந்தக் கப்பலிலேயே சென்றிருக்கக்

கூடதா? ஏன் நடுவழியில், நடுக்கடலில் குதித்து இப்படி இந்தப் பாவிகளிடம் சிக்கித் தவிக்க வேண்டும்? அங்கே சென்றிருந்தால் இதற்குள் மாமா வையும் பார்த்து சாந்தியையும் சந்தித்திருக்கலாம் அல்லவா?' என்றெல்லாம் எண்ணினான். அதற்குள் மன்னாடி, ''என்ன தம்பி யோசிக்கிறே? நான்தான் சொல்லிவிட்டேனே; நீ ஏன் 'லேட்டு'ன்னு சொல்லு'' என்றான், ஒன்றுமே தெரியாதவன் போல்.

குமார் அதிகம் எதையும் விவரிக்காமல், போலீஸ் காரனைத் திடீரென்று கண்டதையும், தனக்குப் பயம் பிடித்துக் கொண்டதையும், உடனே சட்டென்று அவனிடமிருந்து தப்பித்துக்கொள்ள, பளிச்சென்று மடியிலிருந்த பொட்டலத்தை எடுத்து எட்ட வீசி விட்டு, கல் இடறினாற் போல் கீழே விழுந்துவிட்ட தையும்; போலீஸ்காரன் தூக்கி நிறுத்தி மண்ணைத் தட்டி, முதுகை தட்டாமல் விட்டுச் சென்ற அதிர்ஷ் டத்தையும், அவன் தலை மறைந்ததும் பொட்ட லத்தைப் பொறுக்கிக் கொண்டு ஓடிவந்து விட்டதை யும் ஒரே மூச்சில் கூறி நிறுத்தினான்.

மன்னாடி இதில் ஒரு முக்கியமான காட்சியைத் தான் நேரில் பார்த்துவிட்டு அலறி அடித்துக் கொண்டு ஓடிவந்திருச்கிறான். ஆனால் அதன் முடிவு; தான் பயந்ததற்கு மாறாக இத்தனை சுபமாக இருக்கு மென்று அவன் நினைக்கவில்லை. குமாரின் சம யோசித புத்தியை அவனால் புகழாமல் இருக்க முடிய வில்லை. ஆனால் குமாருக்கு அதுவா வேண்டும்?

மடியில் இருந்த சாமான்களை எல்லாம் அவன் கையில் கொடுத்த குமார், "இன்னும் நீ என்னை என்னதான் செய்வதாக நினைத்துக் கொண்டிருக் கிறாய்? நீயாக என்னை இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப் போகிறாயா அல்லது நானாக முயன்று கொள்ளவா?" என்றான் திருமுருகுவின் தைரியத்தில்.

கையிலிருந்த பொருள்களை எல்லாம் சரிபார்த்து மனம் பூரித்துக் கொண்டிருந்த மன்னாடி, குமாரின் இந்த வார்த்தைகளைக் கேட்டதும் 'ஓ' வென்று அழுது விட்டான்.

"நான் உன்கிட்டே ஒரு பெரிய விஷயத்தை இதுநாள் வரை மறைச்சு வெச்சுட்டேன். அதுக்கு நீ என்னை மன்னிப்பியா, குமாரு?" என்றான்.

"என்ன விஷயம் மன்னாடி? எதை நீ மறைத்து விட்டாய்? அதை நீ இப்போதாவது சொல்ல முன் வந்திருப்பதற்கு உனக்கு நான் நன்றி அல்லவா செலுத்த வேண்டும்! சொல் சீக்கிரம்" என்று துரிதப் படுத்தினான் குமார்.

"அளகாகத்தான் பேசறே நீ" என்றுகுமாரைப் புகழ்ந்த மன்னாடி, "உன் மாமாவை எனக்கு முன்னமேயே தெரியும். அன்னைக்கு நீ காட்டின போட்டோவைப் பார்த்தவுடனேயே நானு கண்டு கிட்டேன். ஆனால் உன்னை என்னோட வெச்சுக்க வேணும் என்கிற ஆசையாலே அதைநான் சொல்ல வில்லை. மறைச்சுட்டேன். ஆனா நான் சொல்

லாட்டா நீ இந்தப் போட்டோவை வெச்சுக்கிட்டு உன் மாமாவை அடையாளம் கண்டுபிடிக்கவே முடியாது. இப்போ அவ்வளவு தூரம் உன் மாமா மாறிட்டாரு'' என்று துணிந்து ஒரு பொய்யைக்கூறினான்.

குமார் துள்ளிக் குதித்தான். ''மன்னாடி... என்ன நீ உளறுகிறாய்? என் மாமாவை உனக்குத் தெரியுமா? உன் கள்ளத் தோணிக்கு அவர் முதலாளியா?''

''ஆமா அவர்தான் எங்களுக்கெல்லாம் எஜமானரு. நம்மகிட்டே புழங்குறதெல்லாம் அவருடைய பணந்தான். இங்கிருந்து நாம் அனுப்பும் சரக்குகள் எல்லாம் அவருக்குத்தான் போகுது. ரொம்பவும் தங்கமான மனிசரு. உன்னைக்கண்டா உயிரையே விட்டுடுவாரு.'' — மன்னாடி கூறிக் கொண்டிருக்கும் போதே குமாரின் தலை சுழன்றது. அப்படியே கீழே உட்கார்ந்துவிட்டான்.

'மாமாவும் இதே தொழில் செய்து வயிறு வளர்க்கிறவர்தானா? அதனால்தான் அவர் அப்பாவைப் பார்க்கச்கூட வெட்கப் பட்டுக் கொண்டு ஊருக்கே வராமல் இருந்துவிட்டாரோ?'—

'சே! இந்தத் திருட்டு மாமனின் வீட்டிற்கு நான் போகப் போவதே இல்லை' என்று ஒரு கணம் எண்ணினான். ஆனால் மறுகணமே... 'இப்பொழுது அங்கேயும் போகாவிட்டால் நமக்குச் சென்னையில் வேறு யார் இருக்கிறார்கள்? இப்படி, ஓர் இடத்தில்

இல்லாமற்; போனால் சாந்தியைத் தேடிக் கண்டு பிடிப்பதும் எப்படி?' என்று சமாதான மடைந்துவிட்டான்.

அன்றிரவு பத்து மணிக்குச் சரக்குகளுடன் மன்னாடியின் கள்ளத்தோணி புறப்பட்டது. அதில் மன்னாடியின் பக்கத்தில் குமாரும் உட்கார்ந்து கொண்டிருந்தான். தன்னுடைய நிஜார்ப் பையை ஒரு முறை தடவிப் பார்த்துக் கொண்டான் குமார். அதில் போட்டோவும், தன்னுடைய மாமாவுக்கு என்று மன்னாடி எழுதிய ஒரு கடிதமும் பத்திரமாக இருந்தன.

சரியாகப் பன்னிரண்டு மணி இருக்கும். எதிரே ஒரு ஸ்டீம் லாஞ்ச் வேகமாக அவர்களை நோக்கி வந்துகொண்டிருந்தது. குமாருக்கு 'திக் திக்'கென்றி



ருந்தது, மறுகணம் லாஞ்சிலிருந்து ஒரு 'சீழ்கை' மிதத்து வந்தது காற்றைக் கிழித்துக் கொண்டு. மன்னாடி பதில் விசில் கொடுத்தான். அடுத்தகணம்

படகுகள் இரண்டும் ஒன்றையொன்று நெருங்கி உறவாடின.

இயந்திர வேகத்தில் லாஞ்சிலிருந்து சில பொருள்கள் படகுக்குள் இறங்கின.

''பையன் யாரு அண்ணே?'' என்று கேட்டான் லாஞ்சில் இருந்த ஒருவன்.

''நம்ம பட்டணத்து முதலாளிக்குச் சொந்தம். இப்போ அவங்க வீட்டுக்குத்தான் தம்பி வருது. கொண்டுபோய் பத்திரமாகச் சேர்த்துவிடுங்க'' என்று குமாரை அறிமுகப்படுத்தி லாஞ்சில் ஏற்றி அனுப்பினான்.

குமார் மன்னாடிக்கு ஒரு நீண்ட வணக்கம் செலுத்தினான். படகும் லாஞ்சும் வெவ்வேறு திசைகளில் பிரிந்து மறைந்தன.

வழியெல்லாம் மன்னாடிக்கு மனம் சரியாகவே இல்லை. இப்படி ஒரு நாள் திரும்புகிற போதுதானே அவன் குமாரைக் கண்டான். அவன்தான் எவ்வளவு நல்ல பையன் — நாணயமான பையன்! கொஞ்ச நாட்களுக்குள் எவ்வளவு நன்றாகத் தயாராகிவிட்டான்! இப்போதுகூட, 'போலீஸ்காரன் கண்ணில் விழுந்துவிட்டான்; மீண்டும் அவன் மீது போலீஸ்

காரன் கண் இருக்கும்' என்கிற பயத்தினால்தானே குமாரைச் சென்னைக்கு அனுப்ப இசைந்தான்?—

பாவம்! குமார். அவன் இதை எப்படி அறிவான்? ஆனால் இதுமட்டுமா? அங்கேயும் குமாரை மாமா என்று நம்பவைத்து, ஒரு பயங்காக் கள்ளவியாபாரி யின் வீட்டிற்கு அல்லவா விலாசத்தைக் கொடுத்து மன்னாடி அனுப்பிவைத்திருக்கிறான்?

# 11. மாமிச பர்வதம்

ஞாயிறுகள் கிழமை விடியற்காலை சுமார் மூன்று மணி இருக்கும். குமாரையும் வேறு ஒரு மனிதனையும் ஏற்றிக் கொண்டு சிறிய படகு ஒன்று மகாபலிபுரத்துக்குச் சற்று தூரத்தில் கரை சேர்ந்தது. குமார் வந்த மின்சாரப்படகும், அதிலிருந்த பொருள்களும் வழியில் வேறு ஒரு படகுக்குக் கைமாறி எங்கோ சென்றுவிட்டன. குமாரோடு வந்த ஆள்தான் வழி காட்டி. அதிகாலையில் அந்தக் கடுங்குளிரில் இருவரும் மூன்று மைல் தூரம் நடந்து மகாபலிபுரத்தை அடைந்தார்கள். அங்கிருந்து புறப்பட்ட ஒரு லாரியில் இருவரும் ஏறிக் கொண்டு சென்னையை அடைந்தார்கள். கூட வந்த ஆள்தான் குமாருக்கும் சேர்த்து லாரிக்காரனிடம் பணம் கொடுத்தான்.

குறிப்பிட்ட இடம் வந்ததும் இருவரும் இறங்கினார்கள். பிறகு கொஞ்ச தூரம் நடந்து சென்றார்கள், சற்று ஒதுப்புறமாக இருந்த ஒரு தோப்பை அடைந்ததும், ''இதுதான் எஜமானருடைய தோட்டம். பங்களா உள்ளே இருக்கிறது. நீ போ'' என்றான் வழிகாட்டி. குமார் அந்த ஆளை

யும் கூட வரும்படி அழைத்தான். ஆனால் தனக்கு முக்கியமான வேறு வேலையிருக்கிறது என்று சொல்லி அவன் போய்விட்டான்.

குமாருக்குத் திடீரென்று ஏதோ ஒருவிதப் பயம் உண்டாயிற்று. ஆயினும் துணிந்து தோப்பினுள் சென்றான். மன்னாடியின் கடிதமும், மாமாவின் போட்டோவும் பத்திரமாக இருக்கின்றனவா என்று மீண்டும் ஒருமுறை பார்த்துக்கொண்டான்.

குமார் பங்களாவை அடைந்ததும், ''அடேயப்பா, எத்தனை பெரிய பங்களா!'' என்று மலைத்தே போனான். அழகான கதவு. ''ஐயா, ஐயா'' என்று இரு தடவைகள் தட்டினான். பதிலில்லை. மூன்றாம் முறை சற்று வேகமாகவே தட்டினான். ''யாரது?'' என்று ஓர் அதிகாரக் குரல் உள்ளேயிருந்து உறுமிய வண்ணம் வந்தது. மறுகணம், கதவைத் திறந்துகொண்டு தன் முன் வந்து நின்ற உருவத்தைப் பார்த்ததும் குமார் அம்படியே நடுங்கிப் போனான்.

ஆட்டுக்கிடா மீசையும், ஆனை உடலும், கைலி வேட்டியில், ரங்கூன் பச்சைப் பெல்டும், ரௌடிக் கிராப்புமாகக் காட்சியளித்த மாமிசபர்வதத்தைக் கண்டால் யார்தான் பயப்படமாட்டார்கள்.

''யார் நீ?—என்ன வேண்டும்?'' என்றது அந்த மனிதமலை அதிகாரக் குரலில்.

‘‘எஜமானரைப் பார்க்க வேண்டும். நான் அவருக்கு உறவு’’ என்று குமார் சற்று அடக்கமாகப் பதிலளித்தான். இதைக் கேட்டதும் அந்த ஆள் தன் முகத்திலுள்ள கடுமையை மாற்றிக் கொண்டான்.



‘‘சரி! இந்தப் பெஞ்சிலே உட்காரு; எஜமான ரிடம் சொல்லுகிறேன்’’ என்று அந்த ஆள் உள்ளே போனான்.

சிறிது நேரத்துக்கெல்லாம், ஐம்பது வயதுள்ள நாகரிகமான ஒருவர் வெளியே வந்து, ‘‘யாரப்பா நீ?’’ என்றார்.

“நான் முதலாளியைப் பார்க்கவேண்டும்” என்றான் குமார்.

“ஏன், என்னைப் பார்த்தால் முதலாளியாகத் தெரியவில்லையா? நான்தான் முதலாளி. என்ன வேண்டும்? விஷயத்தைச் சொல்லு” என்றார் அவர்; தமது ஜரிகை அங்கவஸ்திரத்தைச் சரி செய்து கொண்டே.

பெரியவரின் வாயிலிருந்து இந்த வார்த்தைகள் வெளியானதுதான் தாமதம்; உடனே குமார், “மாமா, என்னைத் தெரியவில்லையா?” என்று தாவி சென்று அவரைக் கட்டிக்கொண்டு விட்டான்.

“சீ...சீ...சீ... விடு கையை. மாமாவாவது மருமகனாவது... என்ன உளறுகிறாய்?” என்று அதட்டினார் முதலாளி.

“என்ன மாமா, இப்படிக் கோபிக்கிறீர்கள்! உங்களைப் பார்க்க வேண்டுமென்று, பர்மாவிலிருந்து எத்தனை கஷ்டப்பட்டு வந்திருக்கிறேன்” என்று துக்கம் பீரிடக் கூறியவண்ணம் மன்னாடியின் கடிதத்தை அவரிடம் நீட்டினான் குமார்.

உள்ளே சென்று அதைப் படித்த முதலாளி வெளியே துள்ளிக் குதித்துக்கொண்டு வந்தார். “கண்ணே, குமார்!” என்று தாவி அணைத்து அவனை உள்ளே அழைத்துச் சென்றார்.

“அப்பா எங்கே? சாந்தி சௌக்கியமா? உன்னை நான் நாலைந்து வயதில் பார்த்தது

அல்லவா? ஆள் பெரியவனாகி விட்டாயே'' என்று அடுக்கடுக்கான கேள்விகளைக் கேட்டுக் குமாரைக் குஷிப்படுத்தினார்.

குமாரும் ஆதியோடு அந்தமாக, எல்லாவற்றையும் சொல்லி முடித்தான். 'சாந்தியை எப்படியும் கண்டுபிடித்து விடலாம் – கவலைப் படாதே'' என்று மாமா தேறுதல் கூறினார்.

சற்று நேரத்துக்கெல்லாம் குமார் குளிப்பதற்கு ஏற்பாடாயிற்று. சுவையான சாப்பாடு நடந்தது. மாமாவின் வீட்டில் குமாருக்கு ராஜ உபசாரம் நடந்தது. சாந்தியைத் தேடவும் அவர் முயற்சி செய்வதாகக் கூறியிருந்ததால் குமாருக்கு அந்தக் கவலையும் ஓரளவு குறைந்தது.

ஆனால் படிக்காமல் இப்படிச் சும்மா சாப்பிட்டு விட்டுத் தூங்கிக் கொண்டிருந்தால் போதுமா? குமாருக்குப் பள்ளிக்கூடம் - படிப்பு என்றால் உயிரா யிற்றே!

குமாரின் பிடிவாதத்தின் பேரில் அருகிலுள்ள ஒரு பெரிய பள்ளிக்கூடத்தில் அவன் சேர்க்கப் பட்டான். ஆனால் அங்கே அவன் பட்ட பாடு!

''பர்மாக்காரன்...பர்மாக்காரன்'' என்று வகுப்பி லுள்ள மாணவர்கள் எல்லாம் அவனைக் கேலி பேசி னார்கள். கலாட்டா செய்தார்கள். ''சான்...யூ... மிதாமி...கமி...சன்...யூகி...'' என்று ஏதேதோ சொல்லிக் கூவினார்கள். ''கி...யின்...சங்...மத்தி... மிய்யா'' என்று சுவர்களில் எழுதி ஒட்டினார்கள்.

குமாரால் தாங்க முடியவில்லை. நாளுக்கு நாள் சிறுவர்களின் கேலியும் கிண்டலும் வளர்ந்து பெருகின. குமாரைப் போலவே, பர்மாவிலிருந்து சொத்து சுகங்களையெல்லாம் இழந்து அநாதை யாக வந்துள்ள அகதிக் குழந்தைகள் சிலரும் அந்தப் பள்ளியில் சேர்க்கப்பட்டிருந்தார்கள். குமாருடைய மாமா பணக்காரர். ஆகையால் அவன் பட்டுச் சொக்காய் போட்டுக்கொண்டு வந்தான். ஆனால் மற்ற அகதிக் குழந்தைகளோ?—பெற்றோர் கள் சாப்பாட்டுக்கே தவிக்கும்போது பகட்டான சட்டைக்கு எங்கே போவார்கள்? கிழிசலையோ, அக்கையோதான் அவர்களால் போட்டுக் கொண்டு வர முடியும். இது பள்ளியிலுள்ள பணக்கார வீட்டு குழந்தைகளுக்கு இன்னும் கேலி செய்ய இடம் கொடுத்தது.

அந்த அகதிக் குழந்தைகளின் கிழிசல் சட்டை களில் பென்சிலால் குத்தினார்கள். யாருக்கும் தெரியாமல் — பொடிக்கற்களைப் பொறுக்கி, ''பர்மா தபால் பெட்டி'' என்று அந்தப் பையன்களின் முது கிலுள்ள சட்டைக் கிழிசலில் போட்டார்கள்; சற்று மேலே இடித்து விட்டாலும், ''கப்பலில் உள்ள உன் அழுக்கையெல்லாம் எங்கள் சட்டையில் ஏற்றாதே'' என்றார்கள். ஓர் அகதிப் பையனுக்காக, பள்ளிக் கூடம் விட்டதும் குமார் பெரிய சண்டை போட்டு ஒருவனை நொறுக்கி விட்டான். ஆனால், இதனால் எல்லாம் அவர்கள் அடங்கிவிட வில்லை. மாணவர் கள் இரண்டு கோஷ்டிகளாகப் பிரிந்தார்கள். அகதி

களுடன் குமாரையும் பையன்கள் ஒதுக்கி விட்டார்கள். ஆனால் அவன் இதற்கெல்லாம் கவலைப்படவில்லை.

மாமாவிடம் சொன்னதற்கு, ''இதனால்தான் நான் அப்போதே நீ பள்ளிக்கூடம் போக வேண்டாம் என்று சொன்னேன். உனக்கெதற்குப் படிப்பு? நமக்குள்ள சொத்தே நாலு தலைமுறைக்குக் காணுமே — பேசாமல் நான் தொழிலைச் சொல்லித் தருகிறேன். வீட்டோடு இரு'' என்று தம் உள்ளக் கிடக்கையைத் திறந்து காட்டினார்.

ஆனால் அதற்குக் குமார் இணங்காமற் போகவே, மாமா மாமிச பர்வதத்தை அனுப்பி கலாட்டா செய்கிற பையன்களைப் பார்த்து வரச் சொன்னார்; உபாத்தியாயரிடமும் சொல்லி வைத்தார். மறுநாள் குமாருடன் வந்த மாமிச பர்வதத்தைக் கண்டதும் பையன்கள் எல்லாம் பலமாகக்கூட மூச்சுவிடவில்லை. ஆனால் இது தினம் நடக்கிற காரியமா? குமார் மாமிச பர்வதத்தைக் கூட வர வேண்டாமென்று சொல்லிவிட்டான்!

அவ்வளவுதான்! மறுநாள் பையன்கள் எல்லாம் பழையபடி வால்தனம் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். ''ஏய், அல்லாவுதீன் இன்று பூதத்தைக் கூட்டிக் கொண்டு வரவில்லைடோய்'' என்று பரிகசித்தார்கள். குமார் பதிலே பேசவில்லை. இந்தப் பையன்களைத் திருத்த முடியாது; இனிமேல் மாமாவிடமும் சென்று புகார் செய்வதில்லை என்ற முடி

வுக்கு வந்துவிட்டான். அவர்தான் பள்ளிக்கூடமே வேண்டாம் என்று சொல்கிறாரே!

குமார் இருப்பது மற்ற அகதிக் குழந்தைகளுக்குப் பெருத்த தென்பாக இருந்தது. ஒரு நாள் குமார் பள்ளிக்கூடம் வராவிட்டால் கூட மற்ற பையன்களுக்கு கொண்டாட்டமாயிருந்தது. உபாத்தியாயரிடம் சொல்லியும் பலன் ஏற்படவில்லை. பாவம், அவர் என்ன செய்வார்! நல்ல புத்தி சொல்லுவார்; அதிகம் போனால் ஓர் அதட்டு அதட்டுவார். மீறிக் கையை நீட்டினால் பையன்களின் பெற்றோர்கள்;அவருடைய உத்தியோகத்துக்கே உலை வைத்துவிடுவார்களே!

குமார், இதனாலெல்லாம் அந்தத் திமிர்பிடித்த சில பையன்களைச் சரிக்குச் சரி பார்த்துவிடுவது என்று முடிவுக்கு வந்துவிட்டான். ஆனால் குமாரின் அகதிக் கோஷ்டியிடம் அன்பு செலுத்தும் மாணவர்களும் நிறைய இருந்தனர். இதனால் குமாரின் கை ஓங்கியே இருந்தது. எவனாவது, அவர்களில் ஒருவனை, ''பர்மாக்காரா'' என்றால், ''ஏய்; சீனக்காரா! பள்ளி எல்லையை விட்டு வெளியே வாடா! உன் முதுகுத்தோலைச் சட்டை தைத்துச் சிப்பாய்களுக்கு அனுப்பிவைக்கிறேன்'' என்று எதிர்ச் சவால் விடுவான்.

அகதிகள் கோஷ்டிக்குக் குமார்தான் தலைவன். குமார் வந்த பிறகு மற்ற அகதிக் குழந்தைகள் சற்று நிம்மதியாகப் படித்தார்கள். தைரியமாகத் தலை நிமிர்ந்து நடந்தார்கள். ஆனால் அடிக்கடி, அவர்

களுடைய சிலேட்டுக்களும், புஸ்தகங்களும மட்டும மாயமாய் மறைந்துகொண்டிருந்தன. அந்தத் திருட்டையும் குமார் கண்டுபிடித்து எதிர்க்கோஷ்டிப் பையன் ஒருவனை மறித்து மானத்தை வாங்கி விட்டான். நாளடைவில் இரண்டு கட்சிகளும் வலுப் பெற்றுவிட்டன. இதனால் எந்த நிமிஷம் பள்ளியில் போர் மூளுமோ என்ற நெருக்கடியில்தான் இருந்தது நிலைமை. ஆனால் அந்தச் சண்டைக்கு ஈடு கொடுத்து, தாங்களும் இந்தியர்களே—பர்மாக்காரர் களோ, அந்நியர்களோ அல்ல—என்று பையன் களிடையே உரிமையை நிலைநாட்டிக் கொள்ள, குமார் தன்னைப் பூரணமாகத் தயார் செய்து கொண்டுவிட்டான். இதனால் அகதிக் குழந்தை களுக்குத் தேவனாகவும்; எதிர்க்கட்சிக்குச் சைத் தானாகவும் காட்சியளித்தான். ஆனால் நாளடைவில் மற்றப் பையன்களும் திருந்தி அகதி மாணவர்களிடம் அன்பு செலுத்த ஆரம்பித்தனர்.

நாட்கள் சில சென்றன. மாமாவின் வீட்டிலிருந்த அந்தரங்கங்கள் எல்லாம் குமாருக்கு ஓரளவு புரியத் தொடங்கின. மாமாவுக்குப் பகல்தான் இரவு—இரவு தான் பகல். அவருடைய வீட்டுச் சுவருக்கெல்லாம் காதுகள் உண்டு. யாராவது கதவு என்று எண்ணித் திறக்கப்போவது கதவாக இருக்காது;—'சுவர்' என்று எண்ணி முட்டிக்கொண்டால் அது உடனே கதவாகத் திறந்து வழிவிடும்.

அந்த வீட்டுக்குள் நடக்கிற அத்தனை விஷயங் களையும் அவர் தம்முடைய அறையிலிருந்தே பார்க்க

முடியும். சுருங்கச் சொன்னால் அந்தப் பங்களா தரைக்குமேல் எவ்வளவு பெரிதாகத் தெரிந்ததோ— அத்தனை பெரிதாக—பூமிக்கடியிலும் இருக்குமாறு மாமா சிருஷ்டித்திருந்தார். அந்தப் பாதாள அறைக்குள் குமார் போனதில்லை. அவர் அவனுக்கு அந்த ரகசிய வழியை காட்டவுமில்லை.

குமார் வந்தவுடனேயே 'மாமி'யைப்பற்றிக் கேட்டான். அவர் பெரிய ஒப்பாரி வைத்து; அவள் இறந்துபோன செய்தியை அறிவித்தார். ஆனால் அப்படியிருந்தும், பெண் நடமாட்டமே இல்லாத அந்த வீட்டில் பெண்களின் குரலை எங்கோ குமார் கேட்டான். அநேக சமயங்களில் சிலர் சிரிப்பது போலவும், சில சமயங்களில் பெண்கள் யாரோ அழுவது போலவும் அவன் கேட்டான். திடீரென்று மனிதர்களே புலப்படாமல் ஏதோ பேரரவம் மட்டும் கேட்கும்—அப்போதெல்லாம், பாதாளக் கிடங்குகளில் சரக்கு இறங்குகிறது என்று பொருள் கொள்ள வேண்டும். மாமிச பர்வதம்தான் மாமாவின் உண்மையான கையாள்—மெய்காப்பாளன். அவனுடன் அந்தரங்கமாகப் பேசிக் கொண்டிருக்கும்போது குறுக்கே போகக்கூடாது. சிற்சில சமயங்கள், "குத்து வெட்டு" அல்லது, "சீவிப் போட்டுவிடு" என்கிற கட்டளைகள் மாமாவிடமிருந்து பிறப்பதைக் கேட்டுக் குமார் நடுங்கிப் போயிருக்கிறான். ஆனால் அவரிடம் அதைப்பற்றியெல்லாம் அவன் மூச்சு விட்டதில்லை.

மாமாவுக்கு வரவரக் குமாரை மிகவும் பிடித்துப் போய்விட்டது. சனி, ஞாயிறு இரண்டு நாளும்

குமாருக்குப் பள்ளிக் கூடம் கிடையாது. அன்றைக்கெல்லாம் அவனுக்கு மாமாவிடம் நல்ல வேலை இருக்கும்.

என்ன வேலை? — எல்லாம் மன்னாடியிடம் தயாராகி வந்த வேலைதான்.

ஏதாவது—சிறிதும் பெரிதுமான பொட்டலங்களைக் கொடுத்து, "தம்பி, இதை இந்த விலாசத்தில் கொடுத்துவிட்டு வா. அதை அந்த விலாசத்தில் சேர்த்துவிட்டு வா" என்பார் மாமா.

"இந்தியாவுக்கு வந்தும் இந்த உத்தியோகம் தானா!" என்று குமார் தன் தலைவிதியை நொந்து, அதையெல்லாம் பெற்றுக் கொண்டு புறப்படுவான். சௌகார்ப்பேட்டைக்கும், ஆனைக்கவுணிக்கும் அலைந்து நாசுக்காகப் பட்டுவாடா செய்துவிட்டுத் திரும்பிடுவான். அவனது விழிகள் மட்டும், 'சென்னை மாநகரத்து வீதிகளில் என்றாவது ஒரு நாள் தங்கை சாந்தி தென்பட மாட்டாளா?' என்று துருவிக்கொண்டேதான் இருந்தன.

ஆனால் குமாரின் கனவு வீண் போகவில்லை. ஒரு நாள் அது பலித்து விட்டது!

மாமாவின் வீட்டிலிருந்து, குறிப்பிட்ட ஒருவிலாசதாரரைத் தேடிச் சென்று கொண்டிருந்த குமார், திடீரென்று, "அண்ணா...அண்ணா..." என்று யாரோ பலமாக அழைப்பது கேட்டுத் திரும்பிப்

பார்த்தான். பிரமையாக இருக்குமோ என்றுகூட ஒரு கணம் அஞ்சினான். ஆனால் மறுகணம்—

ஒரு பெரிய வீட்டின் மாடியிலிருந்து, சாந்திதான் அவனைப் பார்த்து, ''அண்ணா...அண்ணா!'' என்று விடாமல் கூப்பிட்டுக் கொண்டே யிருந்தாள்.

''சாந்தி'' என்று பலமாகத் தெருவென்றும் பாராமல் கத்திய குமார், மறுகணம் மின்னல் வேகத்தில் அந்த வீட்டை நோக்கி ஓடினான். ஆனால் அந்த வீட்டு வாசலில் ஒரு மோட்டார் சைக்கிளும்; உள்ளே ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டரும் இருப்பதைக் கண்டு அவன் திடுக்கிட்டு நின்றுவிட்டான்.

## 12. காப்டன் குமார்

நடு ஹாலில் அழகாகப் போடப்பட்டிருந்த சோபாக்களில் அமர்ந்த வண்ணம் கருணாகரனும், அவரது நண்பர் இன்ஸ்பெக்டர் பாபுவும் எதைப் பற்றியோ வெகு சுவாரஸ்யமாகப் பேசிக்கொண்டிருந்தனர். கற்பகம்மாள் இரண்டு கப்புகளில் ஒவலையும், தட்டில் பிஸ்கட்டுகளையும் கொண்டுவந்து வைத்து விட்டுச் சென்றாள்.

பாபு, தமக்குப் பசியேயில்லை என்றார். ''இது பசிக்காக அல்ல; சும்மா சாப்பிடுங்கள்'' என்று வற்புறுத்தினார் கருணாகரன், கையில் ஒரு பிஸ்கட்டை எடுத்தவண்ணம். அப்போது திடீரென்று ''அப்பா...அப்பா...'' என்று கத்திய வண்ணம் மாடியிலிருந்து வேகமாகக் கீழே இறங்கி வந்த சாந்தியை ஏககாலத்தில் இருவரும் திடுக்கிட்டு நோக்கினர்.

''என்னம்மா...என்ன?'' என்று கருணாகரன் மிகுந்த பரபரப்போடு கேட்டார்.

“அப்பா, அப்பா! அண்ணாவை நான் கண்டு பிடித்துவிட்டேன். அதோ மாடியிலே! இல்லை இல்லை தெருவிலே போய்க்கொண்டிருக்கிறான் அப்பா!” என்று சாந்தி மேல்மூச்சு வாங்க இரைக்க இரைக்க வந்து சொன்னாள்.

இன்ஸ்பெக்டரும், கருணாகரனும் ஏககாலத்தில் வாசலுக்கு எழுந்து சென்றனர். அப்போது அங்கே குமார் கேட்டைக் கடந்து அவர்களை நோக்கி வந்து கொண்டிருந்தான். வாசற்படி ஏறுவதற்குள், “அண்ணா!” என்று சாந்தி ஓடிவந்து குமாரைக் கட்டிக்கொண்டாள். தங்கையைத் தழுவிக் கொண்ட குமாரின் கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்தது.

“சரி சரி, வாருங்கள் உள்ளே. திண்ணையிலே எல்லாக் கதையும் முடித்து விடுவீர்கள்போல் இருக்கிறதே அண்ணனும் தங்கையுமாக” என்று கருணாகரன் அவர்களை உள்ளே அழைத்தார். அப்போது ஒரு கான்ஸ்டபிள் வாசலில் இன்ஸ்பெக்டரை நோக்கி ‘ஸல்யூட்’ அடித்தபடி நிற்கவுமே, பாபு கான்ஸ்டபிளை நோக்கிச் சென்றார்.

குமாரையும், சாந்தியையும் அழைத்துக்கொண்டு உள்ளே சென்ற கருணாகரன் உற்சாக மிகுதியினால் “கற்பகம், கற்பகம்! இதோ, இங்கே யார் வந்திருக்கிறார்கள் என்று வந்து பாரேன்” என்று சமையலறையிலிருக்கும் தம் மனைவிக்கு உரக்கக் குரல் கொடுத்தார்.

கதவுக்குப் பின்னாலிருந்து, ஒரே அச்சில் கடைந்தெடுத்த தங்க விக்கிரகம்போல் இருந்த குமாரையும் சாந்தியையும் மாறி மாறி இமைகொட்டாமல் பார்த்துக்கொண்டே யிருந்தாள் கற்பகம்மாள். —'அழகு என்றால் இப்படி ஒரு அழகா ஆண் பிள்ளைக்கு; கண்ணனைப் போலல்லவா இருக்கிறான்? பெற்றவர்கள்தான் கொடுத்துவைக்கவில்லை நாமாவது ஓடிச்சென்று பையனை வாரி எடுத்துக் கொள்ளலாம் என்றால் – இந்த இன்ஸ்பெக்டர் அல்லவா கூட இருக்கிறார்!'— என்று கற்பகம் துடித்துக் கொண்டிருந்தாள். குமாரைக் கண்டதுமே அவளை யறியாமல் மற்றொரு பிடிப்பு விழுந்துவிட்டது.

இதற்குள் இன்ஸ்பெக்டரும் திரும்பி வந்து விடவே, "மிஸ்டர் பாபு...இவன்தான் சாந்தியின் அண்ணன் குமார்; தெரிந்து கொண்டிருப்பீர்களே" என்று குமாரை இன்ஸ்பெக்டர் கருணாகரனுக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

"வெறும் குமார் என்கிறீர்களே...'காப்டன் குமார்' என்றுசொல்லுங்கள்தங்கைக்காக வீர சாகஸம் புரிந்த பெரிய கடல் வீரனாயிற்றே. காப்டன் குமார் என்றே அழையுங்கள் என்றார்" இன்ஸ்பெக்டரும் பதிலுக்குப் பெருமையாக.

"அப்போது எனக்கு மட்டும் ஒரு பட்டமும் கிடையாதோ? அண்ணாவா என்னைக் கண்டுபிடிச்சான்? நான்தானே அண்ணனைக் கண்டுப்பிடிச்சேன்!" என்றாள் சாந்தி, மழலை கொஞ்ச.

“ஆமாம், ஆமாம். கண்டிப்பாக உனக்குத்தான் பட்டம்—வீரப்பதக்கம் எல்லாம் கொடுக்க வேண்டும். உன் அண்ணன் கடலில் குதித்தது வெறும் தண்டம்! பொழுது விடிந்தால், இருட்டுகிறவரை நீதான் சளைக்காமல் மாடியிலிருந்து தெருவையே பார்த்துக் கொண்டிருந்து குமாரை கண்டுபிடித்து விட்டாய். ஆகையால் இன்றிலிருந்து ‘ஏர்மார்ஷல் சாந்தி’... சரிதானே, போ” என்றார் கருணாகரன். அப்பொழுது எழுந்த சிரிப்பொலியில் கட்டிடமே அதிர்ந்தது.

“சரி! அப்போது நான் வரட்டுமா மிஸ்டர் கருணாகரன். நேற்றுக் காலையில் கூட கவலைப் பட்டுக்கொண்டிருந்தோம் குமாரைப் பற்றி. எப்படியோ தெய்வமாக் குமாரை நம்மிடம் கொண்டு வந்து சேர்த்துவிட்டது...நீங்கள் ரிபோர்ட்டை வாபஸ் வாங்கி விடுங்கள் இனி எனக்கென்ன வேலை இருக்கிறது...வரட்டுமா?” என்று எழுந்தார் இன்ஸ்பெக்டர்.

உடனே குமார் “அப்படிச் சொல்லாதீர்கள் இன்ஸ்பெக்டர் சார். உட்காருங்கள். உங்களுக்கா வேலை இல்லை? இனிமேல்தான் உங்களுக்கு நிறைய வேலை இருக்கிறது. இதோ நான் தருகிறேன். அது ஒரு பெரிய வேலை! தயவுசெய்து ஏற்றுக் கொள்ளுங்கள். எல்லாம் சாந்தி கிடைக்கட்டும் என்று காத்திருந்தேன். இனி என்ன?!” என்று தன் நிஜாரிலிருந்து ஒரு சிறிய பொட்டலத்தை எடுத்து இன்ஸ்பெக்டர் எதிரில் இருந்த மேஜைமீது வைத்தான்.

அதைப் பிரித்த இன்ஸ்பெக்டரது கண்கள் அகல விரிந்தன. புத்தம் புதிய வைரக்கற்கள் அதில் ஒளி வீசின. கையிலெடுத்த இன்ஸ்பெக்டரின் உதடுகள் முணுமுணுத்தன: ''ஸ்மகிள்டு குட்ஸ்!''

ஆனால், குமார் சிறிதுகூட இதற்கெல்லாம் கவலைபட்டவனாகக் காணப்படவில்லை. மன்னாடியிடம் தான் சிக்கிக் கொண்டதிலிருந்து அந்த நிமிஷம் வரை; நடந்த விஷயங்கள் அத்தனையையும் விளக்கி கூறினான். இன்ஸ்பெக்டர் எல்லாவற்றையும் விவரமாக அவ்வப்போது தமது டைரியில் குறித்துக் கொண்டேவந்தார்.

''மன்னாடிக்கு நான் உதவி செய்தேன்? அவன் என்னைக் காப்பாற்றியவன் என்பதற்காக மட்டுமல்ல; என் தங்கையைக் கண்டுபிடிப்பதில் உதவுவதாகக் கூறியிருந்தான். ஆனால் அன்று ஒரு நாள் போலீஸ்காரன் கையில் அகப்பட்ட பிறகு என்னை வைத்து வியாபாரம் நடத்த அவனுக்குப் பயம் வந்து விட்டது. அத்துடன், யாரையோ என்னுடைய மாமா என்று ஒரு மிகப் பெரிய பொய்யையும் சொல்லி என்னை இங்கே ஒருவரிடம் அனுப்பி வைத்து விட்டான். அவர் ஒரு பயங்கரப் பதுக்கல் பேர்வழி. எனக்கு அவர் மாமனும் இல்லை — அவருக்கு நான் மருமகனும் இல்லை.

மன்னாடி ஒரு கடிதத்தில், ''வருகிற இந்தப் பையன் நம்முடைய வியாபாரத்துக்கு மிகவும் உதவி

யாக இருப்பான். கெட்டிக்காரன். அதோடு மிகவும் நம்பிக்கையானவன். நன்றாகத் தயார் செய்திருக்கிறேன். மாமாவாக நடித்து நீங்கள் அவனை உங்களுடனேயே எப்படியாவது வைத்துக் கொண்டு விடுங்கள்'— என்று அவருக்கு எழுதி என்னிடமே கொடுத்து அனுப்பினான். அவ்வளவு நம்பிக்கை அவனுக்கு என்னிடம்! ஆனால் எனக்கு அவனிடமுள்ள நம்பிக்கை என்றோ போய் விட்டது. ஆகையால் வழியில் நான் அதைப் பிரித்துப் படித்து ஒட்டி விட்டேன்...



பிறகு என்ன? முதலில் கதவைத் தட்டி, 'மாமா' என்றதும், மாமனாவது மண்ணாங்கட்டி யாவது?' என்று 'சுள்'ளென்று விழுந்த மனிதர்— மன்னாடியின் கடிதத்தைப் படித்ததும், 'ஐயோ,

மருமகனே! அப்பா போய் விட்டாரா?' என்று என்னைக் கட்டிக் கொண்டு அழுதார். நானும், 'மாமா மாமா' என்று கட்டிக் கொண்டு அவருக்கு மேல் நடித்து விட்டேன்.

இல்லாவிட்டால் இன்ஸ்பெக்டர் சார், என் தங்கையைத் தேடிக் கண்டுபிடிக்கும்வரை பட்டணத்தில் ஒதுங்க இடமும்; உண்ண உணவும் வேண்டுமல்லவா? என்னை ஏமாற்றியவர்களைப் பதிலுக்கு நானும் ஏமாற்றிக் கொண்டு இருந்து விட்டேன். இந்தாருங்கள், இதுதான் என்னுடைய போலி மாமாவின் விலாசம். வீட்டிற்குக் கீழே பாதாளத்தில் ஒரு சிறிய ஊரே இருக்கிறது: இதையெல்லாம் கவனித்துக் கொள்ள வேண்டியது இனி உங்கள் பொறுப்பு! இதோ, இவர்தான் என்னுடைய உண்மையான மாமா'' என்று தனது டிராயரிலிருந்த தகர டப்பியைத் திறந்தான். அதனுள்ளிருந்து ஒரு 'குருப் போட்டோ' துள்ளிக் குதித்தது.

''இதன் மத்தியில் இருப்பவர்தான் என் மாமா. இப்போது அவர் உயிருடன் இருக்கிறாரோ, இல்லையோ அதுகூடத் தெரியாது ஆனால், இந்தப் படத்தை வைத்துக் கொண்டு நீங்களே பாருங்கள் இன்ஸ்பெக்டர் சார்; யாராவது அந்த ரௌடியை என் மாமா என்றால் நம்புவார்களா'' என்று என ஒரு நீண்ட பிரசங்கமே செய்து முடித்தான் குமார்.

கருணாகரனும் கற்பகம்மாளும் அப்படியே பிரமித்துப் போய் விட்டனர்.


இன்ஸ்பெக்டர் சிரித்துக் கொண்டே, ‘‘மிஸ்டர் கருணாகரன், நீங்கள் இந்தப் பிள்ளையாண்டானிடம் ஜாக்கிரதையாகவே நடந்து கொள்ளுங்கள்; ஆமாம்...நான் அவ்வளவுதான் சொல்லுவேன்; நான் எப்போதாவது, கொள்ளைக் கூட்டம்—கள்ளக் கடத்தல் என்று ஆரம்பித்தால்கூட நடுங்குவீர்களே! அத்தனையிலும் ஊறி; இவன் தப்பித்தும் வந்திருக்கிறான். ஒரு போலீஸ் உத்தியோகத்திற்கு—இன்டெலிஜென்ட் டிபார்ட்மெண்ட்டுக்கு இருக்க வேண்டிய அத்தனை திறமையும் இந்தக் குமாருக்கு இருக்கிறது. இவன் இப்போது எனக்குக் கொடுத்திருக்கும் வேலை மட்டும் முருகன் அருளால் வெற்றிகரமாக முடிந்து விட்டால்...’’ என்று இன்ஸ்பெக்டர் பேசிக் கொண்டிருக்கும்போதே, ‘‘அதன் பிறகு உங்களுக்கு ‘‘டபிள் பிரமோஷன்’’ நிச்சயம் சார்; துணிச்சலுடன் புகுந்து விளையாடுங்கள் சார்! ஆனால் என் போலி மாமாவிடம் மட்டும் கொஞ்சம் கருணை காட்டுங்கள்...’’ என்றான் குமார்.

கடகடவென்று சிரித்த இன்ஸ்பெக்டர், ‘‘ஏதேது... பயல் பலே போடு போடுகிறானே... எனக்கே அல்லவா தைரியமூட்டி ‘கன்கிராஜுலேஷன்’ சொல்கிறான்! ஆல்ரைட்; ஓ...கே...நான் போய் வருகிறேன், மிஸ்டர் கருணாகரன்! குட்பை. காப்டன் குமார்! கவலைப்படாதே, உன் போலி மாமாவை உயிரோடு வைத்துத்தான் காரியங்கள் எல்லாம் நடக்கும்’’ என்று கூறி விடை பெற்றுக்

கொண்ட இன்ஸ்பெக்டர் பாபு; மறுகணம மோட்டார் சைக்கிளில் பறந்தார்.

அத்தனை நேரம் உள்ளேயிருந்து புழுங்கிக் கொண்டிருந்த கற்பகம்மாள், ''குமார்!'' என்று அழைத்தவண்ணம் வெளியே ஓடிவந்து அவனைக் கட்டிக் கொண்டாள். ''அம்மா! என் அண்ணா வந்து விட்டானே!'' என்று சாந்தி குமாரின் கையைப் பிடித்துக் கொண்டு குதித்தாள்.

கருணாகரன் தம்பதிகளுக்கு நீண்ட நாட்களுக்குப் பிறகு ஒரு பெண் பிறந்தாள்; இப்போது அழகும், அறிவும், திறமையும் வீரமுமிக்க ஓர் ஆண் சிங்கமும் பிறந்து விட்டான். கருணாகரன் தம்பதிகளின் மகிழ்ச்சிக்குக் கேட்பானேன்!



**நீலமணி**

**நூ**ற்றுக்கணக்கான சிறுகதைகளும், பல நாவல்களும், வானொலி நாடகங்களும் எழுதியுள்ள திரு. நீலமணி குழந்தைகளுக்காகப் பல நூல்கள் எழுதிப் புகழ் பெற்றவர்.

இவர் எழுதிய, ''அன்புப் பணிக்கு ஓர் அன்னை தெரேசா'' என்னும் வாழ்க்கை வரலாற்று நூலுக்கு 1978-ல் குழந்தை எழுத்தாளர் சங்கம் நடத்திய இலக்கியப் போட்டியில் 'ஏ.வி.எம்.'மின் அறக்கட்டளையின் முதற்பரிசான தங்கப்பதக்கத்தையும்; ''கவிமணியின் கதை'' என்னும் நூலுக்காக 1982-ல் தமிழக அரசின் பரிசையும்; 1983-ல் எழுதிய ''தென்னைமரத் தீவினிலே'' என்னும் சிறுவர் நூலுக்காக ''ஏ.வி.எம்.''மின் வெள்ளிப் பதக்கத்தையும் பரிசாக பெற்றவர்.

சிறுவர்களிடையே நல்ல வரவேற்பைப் பெறும் இவரது இந்த அருமையான நாவலை எங்கள் பதிப்பகத்தின்மூலம் வெளியிடுவதில் பெருமை கொள்கிறோம்.

GAYATHRI

**காயத்ரி பப்ளிகேஷன்**

26-பி, வேதாசல கார்டன்ஸ்,
மந்தைவெளி, சென்னை-600 028.

Wrapper Printed at Eskay Art Printers, Madras-5 Phone : 841478